கிளை நூலகம்

விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 07 புதன்கிழமை (23.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 247

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.




## பெரும் இழுபறிக்குப் பின்னர் இன்று
# வடக்கு மாகாண சபையின் அமைச்சரவை பதவியேற்பு



**(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாண அமைச்சரவையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த அமைச்சு பதவிகள் தொடர்பான சர்ச்சைகளுக்கு இன்றுடன் முடிவு எட்டப்பட்டுள்ளது. அந்த வகையில் இன்றைய தினம் நான்கு பேர் கொண்ட புதிய அமைச்சரவை பதவி ஏற்கின்றது.**

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான் ஊழல் குற்றச்சாட்டுக்களை அடுத்து வடக்கு அமைச்சரவை மற்றும் வடக்கின் அரசியல் நிலைமைகளில் பல்வேறு சர்ச்சைகளும் குழப்பங்களும் இடம்பெற்றிருந்தன. 23☛






## தெல்லிப்பழை துர்க்கையம்மனுக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

அருட் சிறப்பு வாய்ந்த தெல்லிப்பழை துர்க்காதேவியின் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத் 24☛

## டெனீஸ்வரன் நீக்கப்பட்டார்
### முதலமைச்சர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)


வட மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ் 23☛

## இரா.சம்பந்தன் கலந்துகொள்ளவில்லை

(யாழ்ப்பாணம்)

காணி விடுவிப்புக்களில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் படைத் தளபதிகள் இடையிலான சந்திப்பு நேற்று பிற்பகல் 4.30 மணிக்கு நாடாளுமன்ற 23☛

## வவு.வில் பாலகனை துன்புறுத்தி கொடூரம்!



(வவுனியா)

வவுனியா, குருமன்காடு பகுதியில் வசிக்கும் குடும்பம் ஒன்றில் 4 வயது சிறுவனை அச்சிறுவனின் சிறிய தந்தையார் அடித்து 24☛

## விஜயதாச ராஜபக்சவை நீக்குக; ஜனாதிபதிக்கு பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குவது தொடர்பிலான ஐக்கிய தேசிய கட்சியின் தீர்மானத்தை ஜனாதிபதிக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

முன்னாள் ஆட்சியாளர்கள் மீது சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதில் குறிப்பாக ராஜபக்ஷ குடும்பம் மீதான வழக்குகளை விசாரிப்பதில் மென்தன்மையைப் பேணினார் என்ற குற்றச்சாட்டு, விஜயதாச ராஜபக்ஷ மீது முன் வைக்கப்பட்டிருந்தது.

இருந்த போதிலும் சுதந்திரமான நீதித்துறையில் தான் தலையிடுவதில்லையென விஜயதாச ராஜபக்ஷ கூறிவந்திருந்தார்.

இந்நிலையிலேயே கடந்த 17ஆம் திகதி ஐக்கிய 23☛

## டி.ஐ.ஜியின் விளக்கமறியல் செப்ரெம்பர் 4 வரை நீடிப்பு
### மாவையிடமும் வாக்குமூலம் பதிய உத்தரவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா பாலியல் வல்லுறவு படுகொலை சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான சுவிஸ்குமார் தப்பிச் சென்றமை தொடர்பான வழக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா உட்பட ஆறு நபர்களிடம் வாக்குமூலத்தை பதிவு செய்து எதிர்வரும் வழக்கு விசாரணையின் போது அவற்றை மன்றில் சமர்பிக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு கட்டளை பிறப்பித்துள்ளது.

குறித்த வழக்கு தொட 24☛

### ✷ உரும்பிராயில் அடாவடி
## சிகையலங்கரிப்பு நிலையத்தில் வாள்வெட்டு; ஒருவர் படுகாயம்

(கோப்பாய்)

மானிப்பாய் வீதி உரும்பிராய் சந்திப் பகுதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் 24☛

### பொலிஸார் மீது வாள்வெட்டு
## சந்தேக நபர்கள் 7பேருக்கும் அடையாள அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் நந்தாவில் பகுதியில் பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஏழு பேரையும் எதிர் 24☛

## தாம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாக கூட்டமைப்பு பங்காளிக்கட்சிகள் கவலை!





(குருமன்காடு)

20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் அனைத்துக் கட்சிக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றிருந்தது. இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், எதிர்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும் புறக்கணித்துள்ளதாக அக்கட்சிகளின் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். 23☛

முதலீட்டாளர் கருத்துக்களம் - யாழ்ப்பாணம்
எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 முதல் 11.30 வரை
Tilko City Hotel - Jaffna
முன்பதிவுகளுக்கு:- 021 222 1455, 077 782 2014 & Type Stock and SMS
துறைசார் நிபுணர்களின் சிறப்புக் கருத்துப் பகிர்வுகள், முதலீட்டு ஆலோசகர்கள் மற்றும் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் சிறப்புப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்.
அனுமதி இலவசம் - மட்டுப்படுத்தப்பட்ட ஆசனங்கள் அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்
CSE COLOMBO STOCK EXCHANGE
(C-9389)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் துப்பாக்கிச் சூட்டு சம்பவம்; சந்தேக நபர்கள் செப்.4 வரை மறியலில்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பின் வீதியில் கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் மூவரையும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த மாதம் நல்லூர் பின் வீதியில் ஒரு குழுவினர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு நின்றிருந்த வேளை அப்போது கோவில் வீதி வழியாக யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தனது மெய்ப்பாதுகாவலர் சகிதம் தனது காரில் வந்துள்ளார்.

நீதிபதி செல்வதற்கு வீதிப் போக்குவரத்தை ஒழுங்கு செய்வதற்காக நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர் குழுவினர் நின்றிருந்த இடத்துக்கு அண்மையில் சென்று போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தவர்களை விலத்த முற்பட்ட போது, அங்கு நின்ற ஒருவர் பொலிஸாருடன் முரண்பட்டு பின்னர் பொலிஸாரின் துப்பாக்கியினை பறித்துள்ளார். அவரிடம் இருந்து துப்பாக்கியை பறிப்பதற்கு நீதிபதியின் ஏனைய மெய்ப்பாதுகாவலர்களும் நீதிபதியும் அந்த இடத்துக்கு சென்று துப்பாக்கியை பறிக்க முற்பட்ட போது குறித்த நபர் சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டிருந்தார். பின்னரே குறித்த இடத்தில் இருந்து தப்பிச்சென்றுள்ளார்.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் நீதிபதி மயிரிழையில் உயிர் தப்பியதுடன் நீதிபதியின் மெய்ப்பாதுகாவலரான இரு பொலிஸார் காயமடைந்து அதில் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

சம்பவதினத்துக்கு அடுத்த நாள் குறித்த சம்பவம் தொடர்பாக அன்றைய தினம் அப்பகுதியில் தகராற்றில் ஈடுபட்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். சூத்திரதாரி தலைமறைவாகியிருந்தார். இரண்டு நாட்களின் பின்னர் அவர் பொலிஸில் சரணடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-9)

# விஜயதாஸவின் அமைச்சுக்கு தலதா அத்துகோரள!

(கொழும்பு)

நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சர் விஜயதாஸராஜபக்ஷவின் அமைச்சுப் பதவிக்கு தலதா அத்துகோரளவை நியமிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தேங்கியுள்ள ஊழல் வழக்குகளை விரைவுபடுத்தாமை மற்றும் அமைச்சரவைக் கூட்டுப் பொறுப்பை மீறிய குற்றச்சாட்டுகளின் கீழ் நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சராக கடமையாற்றும் விஜயதாஸ ராஜபக்ஷவின் அமைச்சுப் பதவியை நீக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கியிருந்தனர்.

இதனையடுத்து விஜயதாஸ ராஜபக்ஷவை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசிம் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்வைத்திருந்தார்.

இந்நிலையில் நீதியமைச்சுப் பொறுப்பை மாத்திரம் விஜயதாஸவிடமிருந்து நீக்கி, பௌத்த சாசன அமைச்சராக அவரை தொடர்ந்தும் செயற்பட அனுமதிக்கும் சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனையை ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

இதன் காரணமாக விஜயதாஸ ராஜபக்ஷ வசம் இருக்கும் இரண்டு அமைச்சுப் பதவிகளும் பறிக்கப்படவுள்ளது. (மு)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# விரைவாக மீட்டுத்தருவேன் சந்திரிகா

(கொழும்பு)

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலங்களை மீட்டுத்தருவதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உறுதிமொழி வழங்கியுள்ளார்.

கேப்பாப்புலவில் மக்களின் குழுவிற்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும் இடையிலான சந்திப்பு நேற்றைய தினம் இடம்பெற்றது.

அவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற இச் சந்திப்பில், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி தவிசாளர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரின் செயலாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது நீண்ட நாட்களாக போராடும் மக்களுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பது குறித்து உறுதிமொழி வழங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, இப் பிரச்சினை குறித்து தொலைபேசி வாயிலாக இராணுவத் தளபதியுடனும் கலந்துரையாடியுள்ளார்.(மு)

**விற்பனையாளர்கள் தேவை**
எமது புடைவை நிறுவனத்திற்கு O/L, A/L படித்த, புடைவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ள ஆண்கள் தேவை. (205)
**தொடர்பு:-0777035457**

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(சி-9392)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 24.07.2017 திங்கட்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்ப தலைவன்

**கந்தையா குமாரலிங்கம்** (வேவி பத்தர்)

**(உரிமையாளர்-கபீல் நகையகம் 159, ஸ்கந்தபுரம்)**

அவர்களின் வீட்டு கிரியை 23.08.2017 புதன் கிழமை ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற உள்ளதால் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

467, அக்கராயன்குளம்
T.P:-0775700332

இங்ஙனம்
குடும்பத்தினர்
(சி-9403)

## மரண அறிவித்தல்

## மைக்கல்பிள்ளை இமானுவேல் ராஜ்குமார் (வசந்தன்)



கரவெட்டி வடக்கு, கரவெட்டியை பிறப்பிடமாகவும் டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட மைக்கல்பிள்ளை இமானுவேல் ராஜ்குமார் (வசந்தன்) கடந்த வியாழக்கிழமை 17.08.2017 டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மைக்கல்பிள்ளை மற்றும் மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சிற்றம்பலம், தில்லைநாயகதேவி ஆகியோரின் அன்பு மருமகனும், சிவதிலகராணியின் அன்பு கணவரும், காலஞ்சென்ற அமலஉற்பவவசந்தி (மேஜர் சோதியா), ரூபகுமார் ஆகியோரின் அன்பு சகோதரரும், கத்லீன், கெவின், கரோலின் ஆகியோரின் அன்பு தந்தையாரும், டானின் அன்பு மாமனாரும், சச்சின், கிஷாந் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை sct.nobert, fjellegade 2, 7100 vejle எனும் முகவரியில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின் மாலை ஐந்து மணியளவில் (இலங்கை நேரப்படி) grindsted kirke, kirkigade 1, 7200 grindsted, denmark எனும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:-மேரிப்பிள்ளை (தாயார்)**
**0779862240**
(சி-9402)

## வடமராட்சியில் புதியதோர் உதயம்!





## நிது மோட்டோர்ஸ்

சுசுக்கி மோட்டோர்ஸ் லங்கா லிமிற்றெட்டின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

23.08.2017 ஆவணித் திங்கள் 7ஆம் நாள் புதன்கிழமை மு.ப 9.10 மணிமுதல் 10.10 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் **நிது மோட்டோர்ஸ்** எனும் ஸ்தாபனத்தை நெல்லியடியில் திறந்து வைக்கவுள்ளோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-9369)

**சி.ஸ்ரீகரன் தொ.பே:-0777556906 தொ.ந:-nithumotors@gmail.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் எனக்கு இல்லை

## அமைச்சர் சுவாமிநாதன் கைவிரிப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் கோரிக்கை நியாயமானது எனத் தெரிவித்த சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், அவர்களின் விவகாரங்களில் தலையிடும் அதிகாரம் தனக்கு இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.



அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள அரசியல் கைதிக்ளில் மூவர் உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர். அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பற்றி யாழில் வைத்து நேற்று ஊடகவியலாளர்களுக்கு கேள்வியெழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியது நீதி அமைச்சே ஆகும். எனவே நான் அந்த அமைச்சருக்கு இவ் விடயம் தொடர்பில் அறிவித்துள்ளேன். அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளனர்.

ஆனால் தாமதமாகத் தான் நடவடிக்கை மேற்கொள் கிறார்கள். இந்த அரசியல் கைதிகளின் பிரச்சினையை தீர்க்க என்னால் முடியாது. நீதி அமைச்சால் தான் தீர்வு காண முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.(இ-9)

## துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த யாழ்.பல்கலைக்கழக மாணவன் சுலக்சனின் குடும்பத்தினருக்கு வீடு அமைக்க அடிக்கல் நாட்டல்





(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த யாழ்.பல்கலைக்கழக மாணவன் சுலக்சனின் குடும்பத்தினருக்கு வீடு அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தலைமையில் நேற்றைய தினம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மாசியப்பிட்டியில் இடம்பெற்றது.

வீட்டிற்கான அடிக்கல்லினை மீள்குடியேற்ற அமைச்சர் முன்னிலையில் விஜயகுமார் சுலக்சனின் தாயார் நாட்டியிருந்தார்.

கொக்குவில் குளப்பிட்டி பகுதியில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி யாழ்.பல்கலை.மாணவர்களான கிளிநொச்சியைச் சேர்ந்த நடராசா கஜன் (வயது-23), சுன்னாகத்தைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் (வயது-24) ஆகியோர் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

இவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக பல்வேறு தரப்பினரும் தமது கண்டனத்தை தெரிவித்து பல்வேறு ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர். குறித்த இருமாணவர்களின் குடும்ப நிலையை கருத்தில் கொண்டு அவர்களின் குடும்பங்களுக்கு தேவையான இழப்பீடுகள் வழங்க வேண்டும் எனவும் பல தரப்பினரும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்தநிலையில் ஜனாதிபதி, எதிர்க்கட்சித்தலைவர், மீள்குடியேற்ற அமைச்சர் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் பலரால் குறித்த குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடுகள் வழங்குவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் எந்தவிதமான உதவிகளும் குறித்த குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் மாணவர்களின் இறப்புக்கு நீதியும் கிடைக்கவில்லை எனவும் பல தரப்பினராலும் விமர்சிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் அப் பிரதேச மக்களால் கண்டன ஆர்ப்பாட்டமும் மேற் கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில், உயிரிழந்த மாணவர்களில் ஒருவரான சுலக்சனின் குடும்பத்தினருக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் சண்டிலிப்பாய் மாசியப்பிட்டியில் 5 இலட்சம்ரூபா பெறுமதியான காணி வழங்கப்பட்டுள்ளதுடன் நேற்றைய தினம் 9.5 லட்சம் பெறுமதியான வீட்டுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் இடம்பெற்றது. இந்த வீட்டினை இராணுவத்தினரே அமைக்கவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன், யாழ்.மாவட்ட மேலதிக (காணி) அரச அதிபர் எஸ். முரளிதரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இராணுவ அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (இ-4-9)

## 300 மில்லியன் பெறுமதியான வீடு கொள்வனவு சிக்கலில் ஷிராந்தி



முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின்மனைவி ஷிராந்தி ராஜபக்ஷவினால் 300 மில்லியன் ரூபா பணம் செலவிட்டு ஆடம்பர வீடு ஒன்று கொள்வனவு செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள விசேட விசாரணைக்கான அறிக்கை தற்போது சட்டமா அதிபர் திணைக்கயளத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு 7, டொரிங்டன் அவனியூ, இலக்கம் 260/12, என்ற இடத்தில் அமைந்துள்ள வீட்டினைக் கொள்வனவு செய்த முறை தொடர்பில் தகவல் வெளியிட ஷிராந்தி தவறியுள்ளார்.

பணம் தூய்மையாக்கல் குற்றச்சாட்டின் கீழ் ஷிராந்தி ராஜபக்ஷவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த வீடு மற்றும் காணியைக் கொள்வனவு செய்த சம்பவத்துடன், லொக்குவித்தான என்ற நபர் ஒருவரும் தொடர்புபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக அந்த பொலிஸ் அதிகாரி தகவல் வெளியிட்டுள்ளார்.

அந்த வீட்டினைக் கொள்வனவு செய்வது தொடர்பில் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவு ஷிராந்தி ராஜபக்ஷவிடம் விசாரணை மேற்கொள்ளும் போது அந்த சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக தமது உறவினரான வர்த்தகர் தில்ஷான் விக்கிரமசிங்கவின் குடும்பத்திடம் கடன் பணமாக பெற்றுக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ 2000 ஆம் ஆண்டு தங்கியிருந்த இந்த வீடு, ராஜபக்ஷர்களின் சிரிலிய சவிய, நீலப்படை மற்றும் தருனயன்ட ஹெடக் ஆகிய அமைப்புக்களின் முகவரியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வீடு தற்போது களஞ்சிய அறையாக பயன்படுத்தப் படுவதாக தெரியவந்துள்ளது. (இ-7)

## அமைச்சர்கள் பலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளேன்

### மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



நல்லாட்சி அரசாங்கத்திலுள்ள அமைச்சர்கள் பலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு தான் தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தனக்கும், தனது குடும்பத்துக்கும் எதிராக அமைச்சர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வருகின்றனர். இதற்காக அவர்களுக்கு எதிரான மானநஷ்ட வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

களுத்துறை இராணுவ ஒன்றிணைந்த அமைப்பினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## விஜயதாஸ குறித்து கூறியது மகிந்தவின் சொந்தக் கருத்து

### வாசுதேவ விளக்கம்



(கொழும்பு)

விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தால் அதற்கு எதிராக வாக்களிக்கப் போவதாக, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்த கருத்து அவருடைய சொந்தக் கருத்து எனவும், கூட்டு எதிர்க்கட்சியின் பொதுவான கருத்து அல்லவெனவும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

கூட்டு எதிர்க் கட்சியில் நானும் உள்ளேன்.

கட்சி ரீதியில் விஜயதாஸவுக்கு எதிராகவோ, ஆதரவாவோ நம்பிக் கையில்லாத் தீர்மானத்துக்கு வாக்களிப்பது என்பது தொடர்பில் இது வரை எந்த தீர் மானமும் எடுக்கப்பட வில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார் (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் வங்கப் புலிகளை சீண்ட முடியாது – ஷகிப் அல் ஹசன்



சொந்த மண்ணில் வங்கப் புலிகளை தோற்கடிக்க முடியாது என்று பங்களாதேஷ் அணியின் சகலதுறை வீரர் சஹிப் அல் ஹசன் ஆஸிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவுஸ்திரேலிய டெஸ்ட் அணி இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக பங்களாதேஷ் சென்றுள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் வருகிற 27ஆம் திகதி டாக்காவில் தொடங்குகிறது. இதற்காக பங்களாதேஷ் அணி தயாராகி வருகிறது.

இந்நிலையில் சொந்த மண்ணில் வங்கப் புலிகளை தோற்கடிக்க முடியாது என்று அந்த அணியின் சகலதுறை வீரர் சஹிப் அல் ஹசன் அவுஸ்திரேலிய அணிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து சஹிப் அல் ஹசன் கூறுகையில் "முன்னதாக பெரிய அணிகளுக்கு எதிராக விளையாடும்போது ஆட்டத்தை சமன் செய்தாலே போதும் என்ற மனநிலை யில் தான் விளையாடுவோம். ஐந்து நாட்கள் எப்படியாவது தாக்குப்பிடித்து சமன் செய்துவிட வேண்டும் என்று விரும்புவோம். ஆனால் சமனிலை என்ற முடிவை நாங்கள் எட்டியது கிடையாது.

அப்புறம் வெற்றி பெற முயற்சி செய்ய வேண்டும் என்று விரும்பினோம். இந்த மனநிலை மாற்றம் எங்களால் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையை எங்களுக்கு கொடுத்தது. இங்கிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கு எதிராக வெற்றி பெறுவதற்காக நீண்ட நாட்கள் பயணம் செய்ய வேண்டியிருந்தது. இது நம்ப முடியாதது.

இந்த அளவிற்கு பங்களாதேஷ் அணி முன்னேறும் என்று பெரும்பாலான மக்கள் நினைத்திருக்க மாட்டார்கள். போட்டிகளில் வெற்றி பெறுவதன் மூலம்தான் நம்பிக்கையை பெற முடியும். தற்போது எங்களது நம்பிக்கையில் எந்த குறைவும் இல்லை. எங்களது சொந்த மண்ணில் நாங்கள் தோற்கடிக்க முடியாத அணி என்று உணர்கிறோம். எங்களுக்கு எதிராக யார் விளையாடுகிறார்கள் என்பது எங்களுக்கு பிரச்சினை கிடையாது" என்றார்.



தமிழ்நாடு பிரிமியர் லீக் தொடரில் சேப்பாக்கம் சுப்பர் கில்லீஸ் அணி சம்பியனாகியது. கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தூத்துக்குடி அணியை தோற்கடித்து முதல்முறையாக சம்பியனாகி வாகைசூடியது.

# டெண்டுல்கரின் சாதனைக்கு அச்சுறுத்தல்



சச்சின் டெண்டுல்கரின் வரலாற்றுச் சாதனைகளுக்கு இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் அலஸ்டைர் குக் அச்சுறுத்தலாக இருந்து வருகிறார்.

'இந்திய கிரிக்கெட் கடவுள்' என்று அழைக்கப்படும் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட கிரிக்கெட் வரலாற்றில் 200 போட்டி யில் விளையாடி 51 சதங்களுடன் 15921 ஓட்டங்கள் குவித்துள்ளார். 51 சதங்களும் 15921 ஓட்டங்களும் என்பது வரலாற்றுச் சாதனை. சச்சின் காலத்தில் விளையாடிய ரிக்கி பொண்டிங் 13378, கலீஸ் 13289, டிராவிட் 13288, சங்கக்கார 12400, லாரா 11953, சந்தர்போல் 11867, ஜெயவர்த்தன 11814 ஓட்டங்கள் குவித்துள்ளனர்.

ரி20 கிரிக்கெட் போட்டி தலை தூக்கியதால் டெஸ்ட் போட்டிகளில் இனிமேல் வரும் வீரர்கள் 200 போட்டிகளுக்கு மேல் விளையாடுவது கடினம். அப்படி விளையாடினாலும் டெண்டுல்கர் அடித்துள்ள 15921 ஓட்டங்களை சேர்ப்பது மிகமிகக் கடினம் என்று சொல்லப்பட்டு வருகிறது. இதனால் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் சாதனையாளராக திகழ்வார் என்று கணிக்கப்பட்டுள்ளது.

ஆனால், டெண்டுல்கர் சாதனைக்கு இங்கிலாந்து அணியின் முன்னாள் அணித் தலைவர் அலஸ்டைர் குக் அச்சுறுத்தலாக இருந்து வருகிறார். இங்கிலாந்து அணியில் மிகவும் இளம் வயதில் அறிமுகமான அலஸ்டைர் குக் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தார்.

அலஸ்டைர் குக் 145 போட்டிகளில் விளையாடி 31 சதங்களுடன் 11568 ஓட்டங்கள் குவித்துள்ளார். சச்சின் டெண்டுல்கரை விட 4353 ஓட்டங்கள் மட்டுமே பின்தங்கியுள்ளார். தற்போது அவருக்கு 32 வயதுதான் ஆகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக குக் சிறப்பான வகையில் ஆடவில்லை. இதனால் டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெறலாம் அல்லது அணியில் இருந்து நீக்கப்படலாம் என்ற செய்தி வந்து கொண்டிருந்தது. ஆனால், மேற்கிந்தியத் தீவுகள் அணிக் கெதிராக எட்ஜ்பாஸ்டனில் நடைபெற்ற பகல்-இரவு டெஸ்ட் போட்டியில் இரட்டை சதம் அடித்து மீண்டும் போர்ஃமுக்கு திரும்பியுள்ளார்.

இப்படியே விளையாடினால் குக் இன்னும் 4 வருடங்களுக்கு அணியில் இடம்பிடிக்க வாய்ப்புள்ளது. அப்படி இடம்பிடித்தால் 4353 ஓட்டங்கள் எடுக்க வாய்ப்புள்ளது. ஒரு வேளை சுமார் 500 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இருந்தாலும், சாதனைக் காக குக்கை இங்கிலாந்து அணி தொடர்ந்து வலி யுறுத்தும். இதனால் குக் சச்சின் டெண் டுல் கரின் சாதனைக்கு அச்சுறுத்தலாகவே உள் ளார்.

# யு.எஸ்., ஓபன்: அசரன்கா விலகல்



பெலாரஸ் டென்னிஸ் வீராங்கனை விக்டோரியா அசரன்கா, யு.எஸ்., ஓபன் டென்னிஸ் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

பெலாரஸ் டென்னிஸ் நட்சத்திரம் அசரன்கா (வயது -28), இதுவரை ஒற்றையர் பிரிவில் இரண்டு கிராண்ட்ஸ்லாம் (2012, 13 - ஆஸி., ஓபன்) பட்டம் வென்றுள்ளார்.

கடந்த டிசம்பரில் இவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. குழந்தையை கவனித்துக்கொண்ட அசரன்கா, ஜூன் மாதம் போட்டிக்கு திரும்பினார். இந்நிலையில், எதிர்வரும் 28ல் தொடங்கவுள்ள யு.எஸ்., ஓபனிலிருந்து விலகி உள்ளார்.

இது குறித்து அசரன்கா வெளியிட்ட அறிக்கையில்,' எனது குடும்ப சூழ்நிலை காரணமாக, யு.எஸ்., ஓபனில் என்னால் விளையாட முடியாது.' என தெரிவித்துள்ளார்.

அசரன்கா தனது கணவர் பில்லி மெக்கீகேவுடன் பிரச்சினையில் இருப்பதாக கூறப்படுகிறது. தவிர, மகனை வேறு யாரிடமும் ஒப்படைக்க முடியாது என்பதால் யு.எஸ்., ஓபனிலிருந்து விலகியதாக தெரிகிறது.

# ஆடை வியர்வையை கிண்டல் செய்த நபர் தக்கபதிலடி கொடுத்த வீராங்கனை



இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் தலைவர் தன்னை கிண்டல் செய்த நபருக்கு டுவிடர்வாயிலாக தக்கபதிலடி கொடுத்துள்ளார்.


அணித்தலைவர் மிதாலி ராஜ் தனது டுவிட்டர் பக்கத்தில், வீராங்கனைகளுடன் இருக்கும் ஒரு புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

அதில், மிதாலி ராஜின் ஆடையில் வியர்வை இருந்துள்ளது, இந்த படத்தை பார்த்த ஒருவர் உங்கள் ஆடையில் வியர்வை வியர்த்து இருக்கிறது. உங்களுக்கு சங்கடமாக இல்லையா? என கேட்டார்.

அந்த டுவிட்டர் பதிவை பார்த்த மிதாலி ராஜ், ஆம் எனக்கு வியர்த்து இருக்கிறது. அதனால் எனக்கு சங்கடம் ஏதும் இல்லை. நான் உழைக்கும் போது வந்த இந்த வியர்வைதான் என்னை உயர்த்தியது.

அதனால் எனக்கு சங்கடமோ பாதிப்போ ஏதுமில்லை என தக்க பதிலடி கொடுத்துள்ளார்.

# பப்பேவை கடன் வாங்கும் பி.எஸ்.ஜி



நெய்மரை 1600 கோடி ரூபாய்க்கு வாங்கிய பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன், தற்போது மொனாக்கோ நட்சத்திரம் பப்பேவை கடனுக்கு வாங்க இருக்கிறது.

பிரான்ஸ் நாட்டில் உள்ள கால்பந்து கழக அணிகளுக்கு இடையே நடைபெறும் முக்கியமான தொடர் லீக்-1. இந்த தொடரில் முன்னணி அணியாக பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.) விளங்குகிறது.

இந்த அணி சுமார் 1600 கோடி ரூபாய் கொடுத்து பார்சிலோனா அணியில் விளையாடிய நெய்மரை வாங்கியது. நெய்மருக்காக பல கோடிகளை செலவழித்துள்ளதால் மற்றைய வீரர்களை அந்த அணி ஒப்பந்தம் செய்ய விரும்பாது என்று எதிர்பார்க்கப்பட்டது.


தற்போது நெய்மர், கவானி, டி மரியா, டி சில்வா போன்ற தலைசிறந்த வீரர்கள் அந்த அணியில் இருந்தாலும், கடந்த ஆண்டு 'லீக் 1' சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய மொனாக்கோ அணியில் உள்ள நட்சத்திர வீரர் கிலியன் பப்பேவை குறிவைத்துள்ளது.

ஏற்கெனவே, மன்செஸ்டர் யுனைடெட் உட்பட பல்வேறு அணிகள் பப்பேவை வாங்க போட்டியிட்டன. அப்போது மொனாக்கோ பப்பேவை கொடுக்க மறுத்துவிட்டது. தங்களுக்கு அந்த எண்ணம் இல்லை என்றும் அறிவித்தது.

இந்நிலையில் பாரிஸ் செயின்ட்-ஜெர்மைன் (பி.எஸ்.ஜி.) பப்பேவை வா்ங்க முன் வந்தது. பப்பேவை வாங்க வேண்டுமென்றால் எப்படியும் 100 மில்லியன் யூரோவிற்கு மேல் செலவழிக்க வேண்டும். நெய்மரை வாங்கியதில் பிரச்சினை ஏற்பட்டது.

இதனால் பி.எஸ்.ஜி. அணி பப்பேவை கடனுக்கு வாங்க இருக்கிறது. 2017-18 சீசன் முடிந்த பின்னர், நீண்டகாலத்திற்கு ஒப்பந்தம் செய்ய திட்டமிட்டுள்ளது. பப்பேவை கடனுக்கு வாங்க இருப்பதால், அவருக்குப் பதிலாக லூகாஸ் மவுராவை மொனாக்கோ அணிக்கு கொடுக்க பி.எஸ்.ஜி. முன் வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் கொடியேற்றத்துடன் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணியளவில் ஆரம்பமானது. (படங்கள்: மகாலிங்கம்)



நல்லூர்க் கந்தப்பெருமானின் தீர்த்தத் திருவிழாவின் (கொடியிறக்கம்) மாலைநேரக் காட்சி...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத இறுதியில் இலங்கை வருகிறார் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா

## முதல்வர் விக்னேஸ்வரனை கொழும்பில் சந்திப்பார்

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை இலங்கை வரவுள்ளார். மத்திய ரயில்வே அமைச்சர் ஸ்ரீ சுரேஷ்பாபு மற்றும் வெளியுறவுச் செயலாளர் எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்டவர்கள் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான இலங்கை விஜயத்தில் இடம்பெறவுள்ளனர்.

இந்து சமுத்திர பாதுகாப்பு மாநாடு எதிர்வரும் 31 ஆம் திகதி இலங்கையில் ஆரம்பமாகவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கிலேயே வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தலைமையிலான குழு இலங்கை வருகின்றது.

இந்த விஜயத்தின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருடன் சிறப்பு சந்திப்புக்களும் இடம்பெறவுள்ளன.

அதேபோன்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் வட மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் ஆகியோரை கொழும்பில் சந்திக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் அந்த சந்திப்புக்கள் உறுதிப்படுத்தப்படவில்லை. அதேபோன்று மாநாட்டை மையப்படுத்தியதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜின் இலங்கை விஜயம் அமைந்துள்ளமையினால் அனைத்து சந்திப்புக்களும் கொழும்பிலேயே இடம்பெறவுள்ளன.

வருட இறுதியில் கைச்சாத்திட உத்தேசிக்கப்பட்டுள்ள இலங்கை - இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தம் மற்றும் மத்தள விமான நிலையத்தை கூட்டு முயற்சியுடன் அபிவிருத்தி செய்தல் உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் குறித்து அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருடனான சந்திப்பின் போது இந்தியக் குழு கலந்துரையாடல்களை மேற்கொள்ள உள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளனர். இந்திய மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மாநாடு தொடர்ந்தும் இரண்டு நாட்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

UNIVERSITY OF CAMBRIDGE ENGLISH COURSES @

**After G.C.E (A/L)** எமது வகுப்புக்களில் இணைந்து வாழ்நாள் முழுவதும் பயன்படும் கல்வித் தகைமையை பெற்று பயனடையுங்கள்.

**Jaffna College - Undergraduate Department**
**in Collaboration with British College of English**

**IELTS** எமது கல்வி நிலையம் British Council இன் அங்கீகாரம் பெற்ற Registration Centre ஆகும்.

எம்மிடம் IELTS கல்வி கற்பவர்களுக்கு நாம் வழங்கும் விசேட சலுகைகள்.
இலவசமாக 2 நூல்கள் வழங்கப்படும்.
British Council இன் Library இல் சென்று நூல்களை வாசிக்க அனுமதி அட்டை
விரும்பிய நேரம் Listening வந்து செய்யக்கூடிய வசதிகள்.
எமது Advanced Spoken English வகுப்பில் சேர்ந்து படிக்க இலவச அனுமதி.

**OUR TARGET IS BAND : 9**

IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கின்றோம்.
Pearson English Course Level B2
எனவே இரண்டு பாடநெறிகளையும் ஒரு கட்டணத்திலேயே நிறைவு செய்யலாம்.

யாழ்ப்பாணத்தில் IELTS நடைபெறும் திகதிகள் :
09.09.2017, 05.10.2017, 02.11.2017, 02.12.2017
நடைபெறும் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்.

**வகுப்புக்கள் 23.08.2017 இல் ஆரம்பம்.**

**IELTS LIFE SKILLS A1, B1**

**COURSE SCHEDULE** Mon, Tues, Wed, Thus 60 Hours 8.30 - 11.00
Saturday & Sunday 60 Hours Time: 8.30 - 12.00

கடந்த காலங்களில் நடைபெற்ற A1, B1 பரீட்சைகளில் எமது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 100% சித்தியடைந்துள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். அடிப்படையில் இருந்து ஆங்கிலம் 2 மாதங்களில் பூரணமான அறிவைப் பெற்று பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.



எமது கல்வி நிலையம் தொடர்ச்சியாக ஏழு வருடங்கள் சிறந்த நிலையம் என British Council னால் Awards வழங்கி கௌரவிக்கப்பட்ட நிலையமாகும்.

+ சுமார் 40 இலட்சம் மாணவர்கள் ஆண்டு தோறும் Cambridge பரீட்சைகளை எடுக்கின்றனர்.
+ சுமார் 13000 பல்கலைக்கழகங்கள் Cambridge ஆங்கிலப் பரீட்சைகளை தமது அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
+ 40000 கல்லூரிகளும் நிறுவனங்களும் மாணவர்களை Cambridge பரீட்சைக்காக ஆயத்தப்படுத்துகின்றனர்.

**Cambridge ன் மூன்று பாடநெறிகள் 23.09.2017 ல் ஆரம்பிக்கின்றோம்**

**Cambridge - Prelimnary English Test (PET)**

* இது ஓர் Intermediate B1. Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
* நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றி பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்.

It covers all four language skills (Reading, Writing, Listening and Speaking) and knowledge of grammar and vocabulary.

Exam Date : 01.12.2017
Centre - British Council Colombo.

**FCE Cambridge First Certificate in English**

FCE is an upper intermadiate level exam. It tests the ability to deal confidently with a range of written and spoken. communication. FCE is the most widely taken of the general English exam with over 250,000 candidates every year. This exam is at CEFR Level B2

இது ஒரு சர்வதேசப் பரீட்சையாகும் International Exam. 15000 ற்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் Employers ம் FCE யை ஏற்றுக்கொள்கின்றன. உலகத்தின் எந்த ஒரு இடத்திலும் சிறந்த ஓர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதியுயர்ந்த தகுதியாகும். இது ஒரு வாழ்நாள் முதலீடு.

Exam Date : 29.11.2017
Centre - British Council Colombo

It covers all four skills Reading and Use of English, Writing, Listening - Speaking

**CAE Cambridge Advanced English - C1**

**Who is the exam for?**
Cambridge English: Advanced is typically taken by high achievers who want to:
- follow an academic course at university level
- communicate effectively at managerial and professional level
- participate with confidence in workplace meetings or academic tutorials and seminars
- carry out complex and challenging research
- stand out and differentiate themselves.

**Who recognises the exam?**
Cambridge English: Advanced is accepted by more than 4,000 organisations, employers and governments around the world as being a reliable, accurate and fair test of English. This includes universities and colleges in the UK, USA, Canada, Australia, Europe and beyond.

வகுப்புக்கள் ஆரம்பம் 23.08.2017
Course Schedule: Monday, Tues, Wed, Thurs 11.00 - 1.00 pm | Sat & Sunday 3.00 pm - 6.00 pm

**Jaffna College - Undergraduate Department**
No: 464, Hospital Road, Jaffna.
T.P: 021 222 3382, 021 222 0384, 077 880 3887

# இராசி பலன்

23.08.2017
(ஆவணி 07, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
துதியை முன்னிரவு 10.56 மணிவரை
பூரம் பிற்பகல் 4.30 மணிவரை
சுபநேரம் 4.35 - 6.05 மணிவரை
இராகுகாலம் 12.05 - 1.35 மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவோணம், அவிட்டம் | | செவ்,ராகு சுக், புத |
| கேது | | | சூரி.சந் |
| | சனி | | குரு |

**மேடம்:** பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** விருந்தினர் வருகையுண்டு, பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.

**மிதுனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கடகம்:** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**சிம்மம்:** நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாகபல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், சிந்தனை மிகுதியான நாள்.

**கன்னி:** சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்:** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பயணங்களால் பயன் கிடைக்கும், பொது வாழ்வில் புகழ் கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், [illegible]த்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியம் ஒன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கம் நாள்.

**மீனம்:** உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், தேக நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், செய் தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



புங்குடுதீவில் உள்ள அரளிப் பற்றைக்குள் வித்தியாவின் சடலம் கிடப்பது கண்டறியப் பட்டதையடுத்து புங்குடுதீவிலுள்ள பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

14.05.2015 புங்குடுதீவு எங்கும் சோகத்தில் மூழ்கிப் போயிற்று. மாணவி வித்தியாவின் சடலம் உடலியற் பரிசோதனைக்காக யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தது. உடலியற் பரிசோதனைகளின் முடிவுகள் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தன.

குறைந்தது 4 பேரின் கூட்டு வன்புணர்வு நடந்த பின்னர்





## மாணவி வித்தியா கொலை நடந்தது என்ன?

கொலை இடம் பெற்றுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை தெரிவிக்க, வித்தியாவின் கொலையின் அதிர்ச்சி எங்கும் பரவிக் கொள்கிறது.

வித்தியாவின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று பேரை ஊர்காவற்றுறைப் பொலிஸார் கைது செய்திருந்தனர். இந்தக் கைது 14 ஆம் திகதி இரவு வேளையில் நடந்தது. மூவரைக் கைது செய்ததன் மூலம் பொலிஸார் மீதான பொதுமக்களின் ஆத்திரம் தணிந்தது என்று சொல்லலாம்.

அதேநேரம் மே மாதம் 15 ஆம் திகதி வித்தியாவின் கொலையைக் கண்டித்து தீவகம் எங்கும் கடையடைப்பு முழுமையாக அனுஷ்டிக்கப்பட்டது. தீவகத்தில் கடையடைப்பு நடந்த அதேவேளை வடமராட்சி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் பாடசாலை மாணவர்கள் தமது கண்டனங்களை ஆர்ப்பாட்டத்தின் மூலமாக வெளிப்படுத்தியிருந்தனர்.

கூடவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். 15 ஆம் திகதி தீவகத்தில் கடையடைப்பு போராட்டம் நடந்த அதேநேரம், மாணவி வித்தியாவின் இறுதிச் சடங்கும் அன்றைய நாளில் இடம்பெற்றது.

வித்தியாவின் இறுதிச்சடங்கில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகள், வலயக் கல்வி அதிகாரிகள், சமூகப் பிரதிநிதிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மாதர் அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப்பலரும் பங்கேற்றனர். இந்த மரணச்சடங்கில் வித்தியாவைக் கொலை செய்தவர்களும் பங்கு பற்றியிருக்கலாம் என்பதை அடுத்து வரும் தொடர்களில் பார்க்கலாம்.

எதுவாயினும் ஆயிரக்கணக்கானவர்கள் வித்தியாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள, காண்டாவனம் என்பதையும் பொருட்படுத்தாமல் வானகத்தாரும் விழிநீர்சொரிந்து தங்கள் கவலைகளை வெளிப்படுத்துவதுபோல வானமும் மாரி பொழிந்தது.

மாணவி வித்தியாவின் உடல் அஞ்சலிக்காக புங்குடுதீவு மகா வித்தியாலயத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. படிப்பில் மிகச் சிறந்த தனது மாணவிக்கு புங்குடுதீவு மகா வித்தியாலயத் தாய் கண்ணீர் சொரிந்து தனது இறுதி மரியாதையைச் செலுத்துகிறாள்.

வித்தியாவின் உடலை பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கின்றனர்.

மாணவர்களின் பாண்ட் வாத்தியம் முழங்குகிறது. ஓ! தமிழினமே, ஒரு மாணவிக்கு நடந்த வன்கொடுமை கண்டீரோ! என்பதாக பாண்ட் இசையின் முழக்க ஒலி கேட்டது.

புங்குடுதீவு மகா வித்தியாலய மண்டபத்தில் அஞ்சலிக்காக வித்தியாவின் உடல்.

அஞ்சலி உரைகள் அழு கண்ணீரோடு நடந்து முடிய, பள்ளித் தாயிடம் வித்தியா விடைபெறும் நேரம்.

வித்தியாவின் உடல் தாங்கிய பேழை பாடசாலையின் நுழைவாயிலைக் கடக்கிறது. என்ன செய்வது மனிதர்களோடு கொடிய மனித விலங்குகள் சேர்ந்து வாழ்ந்தால் இதுதான் விதியாகும் என்பதை அந்த நிகழ்வு சுட்டி நிற்க, வித்தியாவின் உடல் ஊர்வலமாக மயானம் நோக்கி எடுத்துச் செல்லப்படுகிறது.

ஆடி அடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா... கவியரசு கண்ணதாசனின் கவிதை வரிகள் பலரின் மனங்களில் நிழலாட, ....கடுகி நடந்து சுடலை அடைந்து மானிட வாழ்வென வாழ்வென நொந்து.... பட்டினத்தாரின் உடற்கூற்று வண்ணம் ஒலித்துக் கொள்கின்றது.

சகமாணவர்கள் சோகம் தாழ முடியாமல் அழுது துடிக்கின்றனர். ஒரு மாணவிக்கு ஏன் இப்படியொரு அவலம்? பெண்களுக்கான பாதுகாப்பு இப்படியிருக்கிறதே? இந்தக் கேள்விகளை மாணவர்கள் சொரியும் கண்ணீர்த்துளிகள் கேட்பது போல இருக்க, மாணவி வித்தியாவின் உடல் மயானத்தில் அமைக்கப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்யப்படுகிறது.

ஓடித்திரிந்த அந்த மாணவி இனி எழுந்து வரப்போவதில்லை.

ஓ! . அன்புச் சகோதரியே இந்தக் கல்லறையில் அமைதி கொள்க.

மீண்டும், சிலவேளை உன் உடல் தோண்டி எடுக்கப்படலாம். உடற்பாகங்கள் மருத்துவ பரிசோதனை என்ற பெயரில் கொழும்பு செல்லலாம். ஆனாலும் உன் துயிலும் இடம் இது தான்.


(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய அபிவிருத்தி சங்கத்திற்கான காணியை கையகப்படுத்தியுள்ள பொலிஸார்





வவுனியா, கனகராயன் குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு சொந்தமான பொதுக் காணியை பொலிஸார் கையகப்படுத்தியுள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கனகராயன் குளம் பகுதியில் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒரேயொரு காணியேயுள்ளது. குறித்த காணி வன்னி யுத்தம் முடிவடைந்த பின்னர் பொலிஸாரால் கையகப்படுத்தப்பட்டு அப்பகுதியில் பொலிஸ் நிலையம் இயங்கி வந்தது. தற்போது பொலிஸ் நிலையத்திற்கு என காணி வழங்கப்பட்டு அது வேறு ஓர் இடத்தில் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. அப் பொலிஸ் நிலையத்திற்கு ஒதுக்கப்பட்ட காணி போதிய இட வசதி கொண்டதாகவும் காணப்படுகின்றது.

இந்நிலையில், கனகராயன் குளம் சந்தியை அண்மித்து காணப்படும் கிராமிய அபிவிருத்திச் சங்கத்திற்குரிய காணியை விடுவிக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து வவுனியா வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் குறித்த விடயம் தொடர்பில் பேசப்பட்டு அந்தக் காணியை விடுவிப்பதாக பொலிஸார் உறுதியளித்தனர். இருப்பினும் பொலிஸார் அதனை விடுவிக்காது தற்போது அந்தக் காணிக்குரிய வேலிகளை பலப்படுத்தி வருவதுடன் அக் காணியை தமது விளையாட்டு திடலாகவும், பொலிஸ் அதிகாரி தங்குமிடமாகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே, குறித்த காணியை விடுவித்து அப்பகுதியின் அபிவிருத்தி நடவடிக்கைக்கு பொலிஸார் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250)

# இலங்கை கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களின் நுழைவு அதிகரிப்பு

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத் தலைவர் குற்றச்சாட்டு

(மன்னார்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்த மீனவர்களின் படகுகள் கைப்பற்றப்பட்டு குறித்த படகுகள் மீள வழங்கும் போது மீண்டும் எக்காரணம் கொண்டும் இலங்கை கடற்பரப்பினுள் நுழையக் கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்திருந்த போதும் இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பினுள் நுழையும் சம்பவம் அதிகரித்துள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் தலைவர் என்.எம்.ஆலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

மன்னார் மாவட்ட மீனவ சமாசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், இந்திய இழுவைப்படகுகளின் விடுவிப்பு தொடர்பாக கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் அனுசரணையுடன், இலங்கை அரசு இந்திய மீனவர்களிடம் இருந்து கடந்த 2015 ஆம் ஆண்டு கைப்பற்றப்பட்ட 42 படகுகளை விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது.

இதன் அடிப்படையில் எங்களுடைய ஒத்துழைப்பை நாங்கள் வழங்கியிருந்தோம். அந்தப் படகுகளின் விடுவிப்பிற்காக அரசுக்கு சில நிபந்தனைகளையும் நாங்கள் விடுத்திருந்தோம். குறித்த நிபந்தனையில் கைப்பற்றப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகள் விடுவிக்கப்படும் போது அவர்கள் மீளவும் எமது கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையக்கூடாது என்ற நிபந்தனையை பிரதான நிபந்தனையாகவும் இழுவை மடி தடைச்சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் என்றும் வெளிநாட்டு படகுகள் கையாளும் திருத்தச்சட்டத்தையும் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும் எனவும் அரசுக்கு கோரியிருந்தோம்.

ஒருசில சட்டங்களை இன்று அரசு நிறைவேற்றியுள்ளது. குறிப்பாக இழுவை மடித்தடைச்சட்டத்தை பாராளுமன்றத்தில் கடந்த 6 ஆம் திகதி நிறைவேற்றி அதற்கான அங்கீகாரத்தை பெற்றுள்ளது. அதேநேரம் வெளிநாட்டு படகு திருத்தச்சட்டமும் தற்போது பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படவுள்ளது. இதேவேளை கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகளை விடுவித்து அதனை கொண்டு செல்வதற்கு இந்தியாவில் இருந்து ஒரு குழு இலங்கைக்கு வந்துள்ளதாகவும், அவர்கள் படகுகளை திருத்தம் செய்து அவற்றை கொண்டு செல்லவுள்ளதாகவும் நாங்கள் அறிகின்றோம். இதற்காக நாங்கள் ஒப்புதல் வழங்கியுள்ளோம்.

எனவே கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகள் விடுவிக்கப்பட்டதன் பின்னர் அவர்கள் மீண்டும் எக்காரணம் கொண்டும் எமது கடற்பரப்புக்குள் நுழையக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தோம். எனினும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் நெடுந்தீவு கடற்பரப்பில் சுமார் 49 இந்திய மீனவர்கள் படகுகளுடன் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். தொடர்ச்சியாக அந்த மீனவர்களின் அத்து மீறிய வருகை நிறுத்தப்படாமல் அவர்களின் படகுகள் விடுவிக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகள் நல்லெண்ண சமிக்ஞையாக ஏற்றுக்கொண்டு இலங்கை கடற்பரப்பினுள் நுழைவதை நிறுத்திக்கொள்ள வேண்டும். மேலும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கடற்படைத் தளபதி ஒரு சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த தமிழராக உள்ளார். அவர் கடந்த காலங்களில் கிழக்கு மாகாணங்களில் கடற்படைத் தளபதியாக கடமையாற்றியுள்ளார். எனவே இந்திய தரப்பினரால் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டான தமிழக மீனவர்கள் தாக்கப்படுகின்றனர், அவர்கள் வன்முறைக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டுக்களை குறித்து வந்தாலும் வடபகுதி மீனவர்களாகிய நாங்கள் அதனை மறுத்து வருகின்றோம்.

எனவே சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த கடற்படை தளபதி நியமிக்கப்பட்டுள்ளமையானது எதிர்காலத்தில் இந்தியத் தரப்பினர் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்கள் இனிவரும் காலங்களில் இல்லாமல் போகும் சந்தர்ப்பங்கள் உள்ளன. எதிர்காலத்தில் வடபகுதி மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள அரசினால் அனுமதிக்கப்பட்ட கடற்றொழில் முறைமைகளை 24 மணி நேரமும் வட பகுதி கடலில் மேற்கொள்ள ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார். (2-4)

# குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு

வவுனியா, காளிகோவில் வீதியில் குடும்பஸ்தர் ஒருவர் மீது சரமாரியாக வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர்படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

வவுனியா குருமன்காடு வீதியில் வசித்துவரும் குறித்த குடும்பஸ்தரின் வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் குறித்த குடும்பஸ்தர் மீது சரமாரியாக வாள் வெட்டுத்தாக்குதல் மேற்கொண்டதுடன், அங்கிருந்த மோட்டார் சைக்கிளையும் சேதமாக்கிவிட்டு தப்பி சென்றுள்ளனர்

இச் சம்பவத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)




# உலருணவுப் பொதிகள் 200 குடும்பங்களுக்கு வழங்கி வைப்பு

(மன்னார்)

நல்லாட்சி அரசின் இரண்டு வருட பூர்த்தியை முன்னிட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தினால் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குட்பட்ட 200 குடும்பங்களுக்கு நேற்று முன்தினம் மாலை மன்னார் அலுவலகத்தில் வைத்து உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் ஏ.சமியூ முகம்மது பஸ்மி தலைமையில் இடம்பெற்ற குறித்த உலர் உணவு பொதிகள் வழங்கும் நிகழ்வில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 200 வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வின்போது, ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதேச பொறுப்பாளர்கள், கட்சியின் மகளிர் கிளை பிரதிநிதிகள் மற்றும் ஏனைய பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஒன்றுகூடல்

மல்லாகம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் "எழுச்சி-2017" என்ற முதலாவது மாபெரும் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு 077 899 6137 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அனைத்து பழைய மாணவர்களையும் அணிதிரளுமாறு விழா ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (2)

# நெற்களஞ்சியங்கள் திறந்துவைப்பு





கிளிநொச்சி இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இராமநாதபுரம், பன்னங்கண்டி ஆகிய பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்ட நெற்களஞ்சியங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் காலை நடைபெற்றதுடன், முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கலந்து கொண்டிருந்தார்.

அத்துடன் இதில் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பாரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடு குளத்தினுடைய புனரமைப்புப் பணிகள் இபாட் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில் இதன் ஒரு அங்கமான நெற்களஞ்சியங்கள், நெல் உலரவிடும் தளங்கள் போன்ற கட்டுமானங்களும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 175 ஆவது நாள்

# வாக்குறுதிகள் பொய்யாகிப் போனநிலையில் வீதியோர அவலவாழ்வு தொடர்கின்றது



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாட்டத்தின் கேப்பாப்பிலவு பூர்வீகக் கிராமத்திலுள்ள பொது மக்களுக்கு சொந்தமான காணிகளை விடுவிப்பதற்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் பொய்யாகி போன நிலையில் நேற்று 175 ஆவது நாளாகவும் கொட்டும் மழை,வெயில்,பனி அனைத்தையும் கடந்து வீதியோர அவலவாழ்வை தொடர்ந்து வருகின்றனர் கேப்பாப்பிலவு மக்கள்.

இராணுவத்தின் வசமுள்ள தமது பூர்வீக காணிகளை விடுவிக்குமாறு கோரி கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் முன்னெடுக்கும் மக்கள் போராட்டம் நேற்றுடன் 175 ஆவது நாளாகவும் தொடர்கின்றது. காணிகளை விடுவிப்பதற்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தும் காற்றுடன்போன நிலையில் தமக்குச்சொந்தமான அனைத்து நிலங்களும் விடுவிக்கப்படும் வரை தமது நில மீட்புப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்றும் கேப்பாப்பிலவு மக்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர். (2-281)

# வவுனியாவில் 25,987 குடும்பங்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை

## அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவிப்பு

வவுனியா மாவட்டத்தில் 25 ஆயிரத்து 987 குடும்பங்களை சேர்ந்த 92 ஆயிரத்து 659 பேர் வரட்சி உலர் உணவு திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு 123 மில்லியன் ரூபா பெறுமதியில் உலர் உணவு வழங்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 13 ஆயிரத்து 993 குடும்பங்களை சேர்ந்த 51 ஆயிரத்து 228 பேரும் வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் 4 ஆயிரத்து 42 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 85 பேரும், வவுனியா தெற்கு பிரதேச செயலகப் பிரிவில் 2ஆயிரத்து691 குடும்பங்களை சேர்ந்த 9 ஆயிரத்து 350 பேரும் வெண்கல செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் 5 ஆயிரத்து 261 குடும்பங்களை சேர்ந்த 18 ஆயிரத்து 996 பேரும் நிவாரணம் பெற தகுதி பெற்றுள்ளனர்.

இந்த நிவாரணத்தை பாதிக்கப்பட்டோருக்கு வழங்குவதற்காக கிராமசேவகர் பிரிவு ரீதியாக பொது இடங்களில் சிரமதானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (2-250)




# உலகளாவிய ரீதியில் செயற்படும் அமைப்பாக ஒளிரும் வாழ்வு அமைப்பு மாறவேண்டும்

## சாந்தி எம்.பி. தெரிவிப்பு



மாற்றுவலுவுள்ளோரையும் யுத்தத்தினால் கணவரை இழந்த பெண்களையும் தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களையும் உறுப்பினர்களாக கொண்ட துணுக்காய் பிரதேச ஒளிரும் வாழ்வு அமைப்பு தனது அர்ப்பணிப்பான சமூக சேவையில் ஐந்தாவது ஆண்டில் காலடி வைத்து மல்லாவி நகரில் அண்மையில் அலுவலக கட்டட தொகுதியினை திறந்து வைத்துள்ளது. இந்நிகழ்வில் பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான, செல்வம் அடைக்கலநாதன் ஒளிரும் வாழ்வு அமைப்பு நிறுவனத்தின் ஸ்தாபகரும் தற்போதைய உறுப்பினரும் ஆலோசகருமான வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தி ஸ்ரீகந்தராசா.வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம், அரச அதிகாரிகள், புலம்பெயர் உறவுகள் மற்றும் ஒளிரும்வாழ்வு உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பின்ர் திருமதி சாந்தி.ஸ்ரீகந்தராசா இவ்வமைப்பு ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தினையும் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்த சவால்களையும் விலாவாரியாக எடுத்தியம்பினார். அவர் மேலும் குறிப்பிடுகையில், சிறிய ஓர் அமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட இவ் ஒளிரும் வாழ்வு முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைவரினதும் சுகாதாரம், மருத்துவ வசதிகளையும் ஏனைய அடிப்படை தேவைகளை வழங்குவதனையும் உறுப்பினர்களின் நிலைத்து நிற்கக் கூடியதான வாழ்வாதார முயற்சிகளுக்கு உதவி ஒத்தாசை புரிவதுடன் நிறுவனத்திற்கு நிலையான வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கான தொழில் முயற்சிகளையும் அமைப்புகள் மேற்கொண்டு வருகின்றன.

ஒளிரும் வாழ்வு அமைப்பானது



தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிற்கு முன்னுதாரணமாக செயற்படுவதுடன் இவ் அமைப்பானது மாவட்டத்தில் மட்டுமல்லாது மாகாண மட்டத்திலும் உள்ள மாற்றுத்திறனாளிகள் அமைப்பினை ஒன்றிணைத்து வியாபித்து இயங்க வேண்டும். அத்துடன் சர்வதேச ரீதியான செயற்பாடுகளையும் முன்னிறுத்தி உலகளாவிய ரீதியில் செயற்படும் ஓர் அமைப்பாக மாற வேண்டும் என்றும் கூறினார். (2-281)

### 168 ஆவது நாளாகவும்

# உறவுகளைத் தேடும் அவலநிலை தொடர்கின்றது



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத்தேடி மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றுடன் 168 ஆவது நாளாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கூடாரம் அமைத்து நடைபெற்று வருகின்றது.

தாம் ஒப்டைத்த உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக உரிய,பதிலை அரசு தரும் வரை கவனயீர்ப்புப் போராட்டம் தொடருமென தெரிவித்து கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதியிலிருந்து முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கூடாரம் அமைத்து உறவுகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடருமென அவர்கள் தெரிவிக்கின்றனர். (2-281)







ஒட்டுசுட்டான் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்றுக் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை வயல் விழா நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதசந்திரன் தலைமையில் நடைபெற்றது. இதில் இலங்கை மர முந்திரிகை கூட்டுத் தாபனம், தென்னை பயிர்ச் செய்கை சபை என்பன காட்சி கூடங்கள் அமைத்து விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கியிருந்தனர். இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட கமத் தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையினர் பங்கேற்றிருந்தனர். இவ் விழாவில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வட மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், முல்லைத்தீவு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்கள் , பரந்தன் நெல் ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி, அனைத்து மாவட்ட உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பரந்தன் விவசாயக் கல்லூரியின் மாணவர்கள், அதிபர், பொதுமக்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மாணவர்களுக்கு மழைக்கவசங்கள் வழங்கல்

ஜேர்மன் நாட்டில் வாழும் புலம் பெயர் தமிழர் ஒருவரின் 40, ஆயிரம் ரூபா நிதி அனுசரணையில் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழ் உள்ள பின்தங்கிய பிரதேச பாடசாலையான மு/அமைதிபுரம் அ.த.க. பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு மழைக் கவசங்களும், அப்பியாசக் கொப்பிகளும் வழங்கி வைக்கப் படவுள்ளன.

இந்நிகழ்வு, அண்மையில் பாடசாலை அதிபர் எஸ். [illegible] தன் தலைமையில் நடை பற்றது.

இதன்போது, பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள் 61, பேருக்கு ரூபா 30 ஆயிரம் பெறுமதியில் மழைக் கவசங்கள், முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 30, மாணவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியில் அப்பியாசக் கொப்பி களுமாக மொத்தம் 40, ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக வட்டு. இந்து வாலிபர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியவர்கள் குறைதீர்க்கும் தெல்லியூர் துர்க்காதேவி

## மஹோற்சவம் இன்று ஆரம்பம்

திருக்கோயிலினால் சிறப்புப் பெற்றது நமது நாடு. இந் நாட்டின் கண்ணே சிவத்தலங்களும் முருகதலங்களும் விஷ்ணுதலங்களும் சக்தி தலங்களும் சிறப்புப் பெற்று அழகு பெறுகின்றன. இவற்றுள் இந்நாட்டின் வடபால் அமைந்த மிகப் புராதனமான ஆலயமாக தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் விளங்குகின்றது.

இத்தலமானது சைவப் பெருமக்களால் நன்கு அறிப்பட்டதொன்று. நகுல கிரித் தீர்த்தம், மாவைக்கந்தன் ஆலயம் என்பவை அணித்தாக விளங்க யாழ்.காங்கேசன்துறைப் பெருந்தெருவில் எட்டாவது மைல்கல் தொலைவில் கிழக்கு நோக்கிய சந்நியுடன் இவ்வாலயம் அமைந்து விளங்குகின்றது. துர்க்கையை மூலமூர்த்தியாகக் கொண்டமைந்த ஆலயத்தின் திருவருள் அற்புதம் நிறைந்தது.

அருட் சிறப்பு வாய்ந்த தெல்லிநகர் துர்க்காதேவியின் வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழாவானது இன்று 23.08.2017 புதன்கிழமை காலை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் மஹோற்சவம் இடம்பெறவுள்ளது.

மஹோற்சவப் பெருந்திருவிழாக்காலத்தில் உலக நாயகியாக விளங்குகின்ற அன்னை துர்க்காதேவியினை வழிபாடாற்றுவதன் ஊடாக திருவருட் கடாட்சத்தினை பெற்று உய்யலாம்.

மூவர்க்கும் முதற்பொருளாய் முத்தொழிற்கும் வித்தாகி
நாவிற்கும் மனதுக்கும் நாடரிய பேரறிவாய்த்
தேவர்க்கும் மூவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்
யாவர்க்கும் தாயாகும் எழிற்பரையை வணங்கிடுவாய்

எனும் பாடலுக்கு அமைய தெல்லிநகரிலே வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ற அன்னை துர்க்கையை வழிபாடாற்றுவதற்குரிய விசேட காலப்பகுதியாக இம் மஹோற்சவ பெருந்திருவிழாக்காலம் விளங்குகின்றது.

நம் நாட்டிலே சிறப்பு பெறும் சக்தி வழிபாட்டிற்குரிய ஆலயமாக துர்க்கை அம்மன் ஆலயம் விளங்குகின்றது. எமது சமய மரபில் தாய்த் தெய்வமாக போற்றி வழிபாடாற்றுகின்ற சிறப்பு நிலவி வருகின்றது.

ஆயும் அறிவும் கடந்த அரனுக்குத் தாயும் மகளும் தாரமுமாக விளங்குபவள் அம்பிகை. இவளே சகல ஆற்றல்களுக்கும் இருப்பிடமாக அமைகின்றாள். அமைதியான வாழ்வையும் அளவில்லாத ஆனந்தத்தையும் அருளும் அன்னையாக மிளிர்கின்றாள்.

இவளை உபாசித்து பெரும் பாக்கியம் பெற்றோர் பலர். அம்பிகையின் உருவ பேதங்கள் பல. அவற்றை அமைத்துக் கொண்டு வேறு வேறு நிலையில் வைத்து வழிபடுவோர் பலர். அம்பிகையினுடைய உருவ பேதங்களில் ஒன்றாகவே அன்னை துர்க்கையின் வழிபாடு சிறப்புப் பெறுகின்றது.

தேவர்கள் மகிடாசுரன் என்னும் அசுரனால் துன்புறுத்தப்பட்டபோது பிரம்மாவிடமும் விஷ்ணுவிடமும் தங்கள் குறைகளை சொல்லி முறையிட்டார்கள். அங்கு வெளிப்பட்ட சினம் என்னும் சக்தி ஒன்று சேர்ந்து உருவெடுத்த வடிவமே துர்க்கை வடிவம் என்று பேசப்படுகின்றது. துர்க்காதேவி சிங்க



வாகனத்தில் ஆரோகணித்து மகிடாசூரனை எதிர்த்து போர் புரிந்தாள். அம்பிகையின் வாகனமாகிய சிங்கமே அசுர சைனியங்கள் அனைத்தையும் அழித்துவிட அசுரன் மகுட உருவில் வந்தபோது அவன் செருக்கை அடக்கி அம்பிகை தனது திருவடியால் அழுத்தி ஆட்கொண்டருளினாள்.

தேவியினுடைய திருக்கரங்களில் சங்கு, சக்கரம், தாமரை, ஜெபமாலை என்பவற்றை தாங்கி நிற்கும் திருக்கோலம் மனதிற்கு மகிழ்வளிப்பதாய் உள்ளது. அருட்திறன் கொண்ட அன்னைக்குரிய ஆலயங்களில் சிறப்பு வாய்ந்த ஆலயமாக வடபால் யாழ்ப்பாணத்தில் அமைந்த திருத்தலமே துர்க்கையம்மன் திருத்தலமாகும்.

எமது நாட்டைப்பொறுத்தவரை துர்க்காதேவிக்கு மிகப் பழைமையான தனிப்பெருங் கோயில் அமைந்திருப்பது என்றால் அது தெல்லிநகர் துர்க்காதேவி தேவஸ்தானத்தையே குறிக்கும்.

ஆலய மூர்த்தியானது கிழக்கு நோக்கிய சந்நிதியாக பிரதான வீதியை நோக்கிய வண்ணம் காட்சி தருகின்றமையும் தலவிருட்சங்களாக இலுப்பையும் மாவும் மகிழும் அரசும் அமைந்து விளங்குவதும் சிறப்பிற்குரியதாகும்.

நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளி அன்னை பவனி வரும் காட்சி அடியவர்களை, அத்திருவருள் ஒளிக்குள் மனம் லயிக்கச் செய்கின்றது.

சக்தியாய் விந்து சத்தியாய் மனோன்மணி தானாகி
ஏத்துற மகேசையாகி யுமை திருவாணியாகி
வைத்துறுக் சிவாதிக் கிங்ஙன் விருந் சக்தி யொருத்தியாகும்
எத்திறன்நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பாள்

என்னும் அருணந்தி சிவாச்சாரியாரது சிவஞானசித்தியார் பாடலடி கூறுகின்றது. அன்னை பராசக்தியே உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகின்றாள். இச்சக்தியே வீரத்தை தரும் துர்க்கையாகவும் கல்வியைத் தரும் கலைமகளாகவும் செல்வத்தைத்தரும் திருமகளாகவும் நாம் போற்றி வழிபடுகின்றோம்.

தன்னை வணங்கும் அடியவர்களுக்கு துன்பத்தை நீக்கி அவர்களுக்குத் திருவருளை வழங்கி காப்பதனால் துர்க்கை என்னும் நாமத்தைப் பெறுகின்றாள் எனக் கூறுவார்கள். இத் தேவி பராசக்தியின் படைத்தலைவியாவாள். ஆபத்துக்காலத்தில் அன்பர்களுக்கு அருள் புரிந்து உதவுபவள். அச்சம் போக்கும் திறமையுடையவள். அரசருக்கும் வீரருக்கும் உரிய வழிபாட்டுத் தெய்வமாக விளங்குகின்றாள். அக்கினி கலை, சூரியகலை, சந்திரகலை உடையவள். இவ் அம்பிகைக்கு தேன் அபிஷேகம் செய்து புஷ்பார்ச்சனை செய்தால் உடனே ஆபத்து நீங்கி வெற்றியும் கைகூடும் என்பார்கள் ஆன்றோர்.

இத்தகைய மகிமை பொருந்திய அன்னை எழுந்தருளி அருள்பாலிக்கின்ற திருத்தலமே தெல்லிநகர் துர்க்காதேவி தேவஸ்தானமாகும்.

அன்னை பராசக்தியானவள் துர்க்கை மூர்த்தம் கொண்டு பேரருள் பாலிக்கும் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்திலே நித்திய, நைமித்திய மரபுகளும் வழிபாட்டு மரபு மலர்ச்சியும் அம்பிகை அடியார்களை ஈர்த்து வருவது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். அடியவர்கள் செவ்வாய், வெள்ளி தினங்களில் பெருந்திரளாகக் கூடி அன்னையின் திருவருளை பெற்று உய்கின்றனர்.

அங்கையிற் கரகந் தாங்கும் பிரமாணி யருளினோடும்
துங்கமென் சென்னிகாக்க வயிணவி துகளிலாகம்
எங்கனும் காக்க செய்ய வேற்தொழி லுருத்திராணி
தங்குமென்டிசையு மன்புதழைத்திட விளிதுகாக்க

என்னும் சக்தி கவசப் பாடலை துணை கொண்டு உலகினைக் காத்து இரட்சித்துக் கொண்டிருக்கின்ற அன்னையினுடைய மஹோற்சவப் பெருந்திருவிழாவிலே ஏராளமான பக்தர்கள் வருகை தந்து வேண்டுதல்களைச் செலுத்தி அன்னை துர்க்காதேவியினுடைய திருவருள் சாசனத்தையும் அருளொளியினையும் பெற்று உய்வோமாக.

சைவப்புலவர் எஸ்.ரி.குமரன்
செயலாளர்
அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.

# அவன்கார்ட் வழக்கு விசாரணைகளை மீள ஆரம்பிக்க ரணிலிடம் ராஜித கோரிக்கை

அவன்கார்ட் வழக்கு விசாரணைகளை மீள ஆரம்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அமைச்சர் ராஜித சேனாரட்ன கோரிக்கை விடுத்துள்ளார்.

தொம்பே - கிரிந்திவெல பஸ்தரிப்பிட திறப்பு விழா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவன்கார்ட் வழக்கு தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் விளக்கத்தை மீளாய்வு செய்யுமாறும் அவர் கோரியுள்ளார்.

அவன்கார்ட் ஆயுத கப்பலிலிருந்து 3 ஆயிரத்து 600 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. எனினும், குறித்த வழக்கின் பிரதான சந்தேகத்துக்குரியவர் பதிவு செய்யப்பட்ட ஒருவரல்ல.

அதிலுள்ள ஆயுதங்களின் தொடர் இலக்கங்கள் அழிந்துவிட்டதாக அரச ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இதையடுத்து, அது தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்ய எந்தக் காரணமும் இல்லை என சட்டமா அதிபர் திணைக்களமும் தெரிவித்திருந்தது.

இந்த நிலையில், அவன்கார்ட் வழக்கு தொடர்பான சட்டமா அதிபர் திணைக்களத்தின் விளக்கத்தை மீளாய்வு செய்து, வழக்கை மீள விசாரிக்க வேண்டும் என பிரதமரிடம் கோரிக்கை விடுப்பதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன மேலும் தெரிவித்தார். (இ-7)

# சீனாவின் 2 கப்பல்கள் தொடர்பில் இலங்கையில் விசாரணை ஆரம்பம்

2013ஆம் ஆண்டு சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு கப்பல்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு கப்பல்களுக்கும் சுமார் 15 மில்லியன் ரூபா மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளதாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

இதன்படி இரண்டு கப்பல்களும் 70 மில்லியன் டொலர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

அதேநேரம் குறித்த கப்பல்களை இலங்கைக்கு வழங்கிய சீன முகவர் ஒருவர் 2013 - 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுமார் 2000 மில்லியன் ரூபாவிற்கான பரிமாற்றங்களை மேற்கொண்டுள்ளதாகவும் தரவுகள் வெளியாகியுள்ளன.

இதனையடுத்தே இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த ஆட்சிக்கால மோசடிகள் விசாரிக்கப்படாமல் இருப்பதற்கு விஜயதாஸவின் அழுத்தங்களே காரணம்



## ராஜித சேனாரட்ன பரபரப்பு குற்றச்சாட்டு

மகிந்த ஆட்சிக்கால மோசடிகள் இரண்டரை வருடங்களாக விசாரிக்கப்படாமல் இருப்பதற்கு நீதி அமைச்சர் விஜயதாஸவின் அழுத்தங்களே காரணம் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தொம்பே கிரிந்திவெல பஸ்தரிப்பிட திறப்பு விழா நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றுகையிலே அமைச்சர் இவ்வாறு குற்றம் சாட்டினார்.

திருடர்களுக்கு சாதகமாக செயற்பட்டு பதவியில் இருந்து அகற்றப்படவுள்ள நிலையில் தான் இனம், மதம் குறித்து விஜயதாஸவுக்கு நினைவு வந்திருக்கிறது. நல்லாட்சி அரசாங்கம் பல்வேறு வாக்குறுதிகளுடன் ஆட்சிக்கு வந்தது. "அவன்கார்ட்" மோசடி, மிக் விமான மோசடி, இது பற்றி செய்தி வெளியிட்டதால் கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்தவுக்கு நடந்த கதி, குறித்து மீண்டும் விசாரணை நடத்தப்பட வேண்டும்.

மத நல்லிணக்கம், ஜனநாயகம், சுதந்திரத்தை ஏற்படுத்துதல் மற்றும் கடத்தல்களை நிறுத்துதல் என்பவையும் நல்லாட்சி அரசால் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளாகும்.

தற்போதைய அரசிலுள்ள சில அமைச்சர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் வேதனை தருகின்றன. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறும் கருத்துக்களை விட இவை கவலையளிக்கின்றன. சில அமைச்சர்கள் அமைச்சுவரப்பிரசாதங்களை பயன்படுத்திக் கொண்டு அரசாங்கத்தை விமர்சிக்கின்றனர்.

வழங்கப்பட்ட சுதந்திரத்தை தவறாக பயன்படுத்துகின்றனர். கடந்த ஆட்சியில் வாய்திறக்காதவர்கள் தற்பொழுது வீரர்களாக மாறியிருக்கிறார்கள். தாஜுடீன் கொலை தொடர்பாக விசாரணை நடத்தும் பொலிஸ் குழுவுக்கு அரச மாளிகையிலிருந்து 46 தொலைபேசி அழைப்புகள் சென்றுள்ளன.

திருடர்களை ஏன் இன்னும் தண்டிக்கவில்லை என எல்லோரும் வினவுகின்றனர். நாட்டின் நீதி அமைச்சர் தொடர்பில் பிரச்சினை இருக்கிறது. இரண்டரை வருடங்கள் விசாரணைகள் முடங்கிக் கிடப்பதற்கு நீதி அமைச்சரின் அழுத்தமே காரணம். திருடர்களை பிடிக்குமாறு மக்கள் ஜனாதிபதியையும் பிரதமரையும் கேட்கிறார்கள். சுதந்திரக் கட்சி அமைச்சர்களும் இதனை தான் கோருகிறார்கள். வழக்குகள் தாமதமாக நீதி அமைச்சர்தான் காரணம்.

விசேட நீதிமன்றம் அமைத்து வழக்குகளை விசாரணை செய்வதற்கு யாப்பு திருத்தம் தேவை என நீதி அமைச்சர் கூறுகிறார்.

வித்தியா கொலை, பண்டாரநாயக்க கொலை, பாரத லக்ஷ்மன் கொலை என்பன தொடர்பில் தினமும் வழக்கு விசாரணை நடத்தப்பட்டன. கடந்த ஆட்சியாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் குறித்தும் தினமும் விசாரணை நடத்த வேண்டும்.

இது தொடர்பாக நான் அமைச்சரவையில் வினவினேன். 3 விசேட நீதி மன்றங்களை உருவாக்கி விசாரணைகளை ஆரம்பித்தால், மொட்டு மலரவே மலராது. அது நிரந்தரமாக மொட்டாகவே இருந்து விடும் என்றால் விஜயதாஸ திருடர்களுக்கு சார்பான அமைச்சர்களுக்கு ஐ.தே.க செயற்குழுவில் ஆதரவாக எவரும் பேசவில்லை. என்றும் ராஜித தெரிவித்தார். (இ-7)

## உள்ளூராட்சி சட்டத்திருத்தத்திற்கு கூட்டு எதிர்க்கட்சி கடும் எதிர்ப்பு

அரசாங்கத்தினால் முன்வைக்கப்படவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பான சட்டமூலம் குறித்து கூட்டு எதிர்க்கட்சி கடுமையான எதிர்ப்பை வெளிக்காட்டவுள்ளது.

நாளை 24ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் குறித்து திருத்திய சட்டமூலம் அரசதரப்பினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. எனினும் குறித்த சட்டமூலம் தொடர்பில் எதிர்ப்பைப் பதிவு செய்வதற்கான காலஅவகாசம் போதுமானதாக இல்லையென்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

பொதுவாக ஒரு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட முன்னர் அதன் வரைபு இரண்டு வாரங்களுக்கு முன்னரே வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டு பொதுமக்கள் அது தொடர்பான தெளிவினைப் பெற்றுக் கொள்ள வழிசெய்யப்பட வேண்டும்.

அத்துடன் சட்டமூலம் தொடர்பான எதிர்க்கருத்துக்கள் இருந்தால் நீதிமன்றத்தினூடாக அதனை இடைநிறுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளவும் அவர்களுக்கு காலஅவகாசம் தேவைப்படும். ஆனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் திருத்தச் சட்டம் சமர்ப்பிக்கப்படும் நடைமுறையில் அவ்வாறான காலஅவகாசம் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


## ஒன்றுகூடல்

கொக்குவில் இந்துக் கல்லூரியில் 1996ஆம் ஆண்டு உயர்தரத்தில் கல்விகற்ற கலை, வர்த்தக, கணித மற்றும் விஞ்ஞான பாடநெறிகளில் கல்விகற்ற மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு ஒன்று ஒழுங்கு செய்யப்படவுள்ளது. ஆகவே 1996 ஆம் ஆண்டு உயர்தரத்தில் கல்வி கற்ற மாணவ, மாணவிகள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்தில் 25.08.2017 இற்கு முன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும்.

077 881 3176
077 645 2235

1996ஆம் ஆண்டு உயர்தர மாணவர்கள்.


# வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உலருணவு

## குடிநீர் விநியோகமும் விரிவாக்கப்படுகிறது

வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உலருணவு நிவாரணம் வழங்கும் செயற்பாடுகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கமைய முறைப்படி இடம் பெற்று வருகிறது.

13 மாவட்டங்களை உள்ளடக்கியதாக தற்போது அமுல்படுத்தப்படும் இந்த செயற்றிட்டத்தில் மா, பருப்பு, சீனி, கடலை, ரின்மீன் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் உலர் நிவாரணமாக வழங்கப்படுகின்றன.

மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களினால் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கங்கள் ஊடாக உலர் நிவாரணம் வழங்கப்படுகிறது.

வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஜூலை 30 ஆம் திகதி கெப்பிற்றிப்பொலவுக்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

தொடர்ச்சியாக மூன்று போகங்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடாமையினால் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள விவசாயிகளுக்கு நிவார்ணம் வழங்குமாறு ஜனாதிபதி வழங்கிய ஆலோசனைக்கமைய தற்போது உலர் நிவாரணம் வழங்கப்படுகிறது. அத்துடன் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான குடிநீர் விநியோகமும் தற்போது முறைப்படி இடம்பெறுகின்றது.

அச்செயற்பாடுகளுக்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு உதவுவதற்காக ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதற்கமைய வரட்சியால் பாதிக்கப்பட்ட 20 மாவட்டங்களிலுள்ள 117 பிரதேச செயலக பிரிவுகளில் இரண்டரை லட்சம் மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்ய பரந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி செயற்பாடுகளை முறைமைப்படுத்துதல் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் முற்பகல் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு, நகர திட்டமிடல் மற்றும் நீர்விநியோக அமைச்சு, உள்நாட்டலுவல்கள் அமைச்சு, நிதி அமைச்சு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்யும் திட்டத்தை இரவிலும் விரிவுபடுத்துவது தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டதுடன், புதிய நீர்த்தாங்கி வாகனங்களை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் அந்த மக்களின் ஏனைய தேவைகளுக்காக நீரை வழங்கும் முறை மற்றும் வனவிலங்குகளுக்கு நீர் வழங்குதல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டு, அச்செயற்பாடுகளை அமுல்படுத்த தீர்மானிக்கப்பட்டது. (இ-7)

## விஜயதாஸவை நீக்க வேண்டாம்

### நாகதீப விஹாராதிபதி

நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சுப் பதவியிலிருந்து விஜயதாஸ ராஜபக்ஷ நீக்கப்படுவது நல்லாட்சிக்குப் பொருந்தாது என நாகதீப விஹாரையின் விஹாராதிபதி தியமய்லகஸ்வெள அரியகித்தி தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஏதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டால், இந்த அரசாங்கம் பௌத்த கொள்கைகளை பின்பற்றவில்லை என்பது அம்பலமாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடிக்கடி கூறும் பௌத்த கொள்கைகள் வார்த்தைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கக் கூடாது. அது செயலிலும் காண்பிக்கப்பட வேண்டும்.

பௌத்த மதத்திற்கும் நாட்டுக்கும் பாரியளவில் சேவையாற்றியுள்ள அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தொடர்ந்தும் நீதி மற்றும் பௌத்த சாசன அமைச்சராக நீடிக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற ஏனைய பௌத்த தேரர்கள், பௌத்தர்களான ஜனாதிபதியும் பிரதமரும் பிழையான [illegible] தெரிவித்துள்ளனர். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: செவ் 8 இல்
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/7645

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம
கி.பா: செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:7ஆம் தரம்/வியாபாரம்
தொ.இ: B/7646

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: அனுசம்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்:O/L/சொந்ததொழில்
தொ.இ: B/7653

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 29
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:B.E/தனியார் தொழில்
தொ.இ: B/7656

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி.பா: சூரிசெவ் 5 இல்
உயரம்: 162cm
தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்
தொ.இ: G/7662

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 75சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/7663

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 36
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:CIMA/தனியார் தொழில்
தொ.இ: G/7665

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:MSc/பொறியியளாளர்
தொ.இ: G/7666

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய சங்காபிஷேகமும் சதுர்த்தி உற்சவமும்

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தின மணவாளக்கோல நவோத்திர சகஸ்ர (1008) சங்காபிஷேகமும் விநாயகர் சதுர்த்தி உற்சவமும் நாளை மறுதினம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறும்.

காலை 8 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு விநாயகர் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று மதியம் மகேஸ்வர பூஜை இடம்பெறும். (இ-3)

## ஆவணிச் சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு நடன விநாயகர் தேவஸ்தானத்தின் ஆவணிச் சதுர்த்தி உற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பாகி தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெறும். (இ-10-102)

## மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிமுதல் மறுநாள் சனிக்கிழமை பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம்பெறும். (இ-3)




## செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ விஞ்ஞாபன ஏற்பாட்டுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்

01. ஆலயத்திற்கு வருகை தரும் பக்த அடியார்கள் கலாசார உடையுடனும் ஒழுக்க சீலர்களாகவும் வழிபாட்டில் ஈடுபட வேண்டும்.

02. மஹோற்சவ காலங்களில் வெளியிடங்களில் இருந்து வருகைதரும் திருடர்களின் நடமாட்டம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பக்த அடியார்கள் பெறுமதிமிக்க தங்க ஆபரணங்களை அணிவதை தவிர்த்தல் வேண்டும்.

3. மஹோற்சவ காலத்தை முன்னிட்டு சந்தேகமானவர்களின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டால் பொலிஸாருக்கு உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.

04. ஆலய சூழலில் உள்ள மடங்கள், கடைகள், விற்பனை வாகனங்களின் ஒலிபெருக்கி பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் Box Set குறைந்த ஒலியில் பாவிக்கப்பட வேண்டும்.

05. ஆலயச் சூழலில் சிகரெட், மதுபானம், புகைத்தல் பொருட்கள், போதைவஸ்துப் பொருட்கள் என்பவற்றின் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

06. மஹோற்சவ காலத்தில் பச்சை குத்துதல் தடை செய்யப்பட்டுள்ளது.

07. தம் சேவைகளை மேற்கொள்ளும் பொருட்டு பருத்தித்துறை பிரதேச செயலகம், வல்வெட்டித்துறை நகர சபை, வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையம், சுகாதார திணைக்களம், விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் என்பவற்றின் உற்சவகாலப் பணிமனைகள் ஆலய வளாகத்தில் இயங்கும்.

08. மஹோற்சவம் ஆரம்ப நாள் தொடக்கம் தினமும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். நிறைவு 04 நாட்களும் மேலதிக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர். வீதிக் கடவைகள், பேருந்து தரிப்பு நிலையங்கள் என்பவற்றிலும் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள். சாரணர்கள், உத்தியோகத்தர்களும் கடமையில் ஈடுபடுவர். பக்தர்கள் இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

09. கடைகளுக்கென வழங்கப்படும் காணிகளுக்குள்ளேயே கடைகள் அமைக்கப்படல் வேண்டும். வீதியோரங்களில் கடைகள் அமைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10. பொருட்களின் விலைகள் குறித்தொதுக்கப்பட்ட விலைகளுக்கு அமைவாகவே விற்கப்படல் வேண்டும். மீறுவோர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

11. ஆலயம், மடங்களின் பணிகளின் நிமித்தம் செல்வோருக்கான அனுமதிப்பத்திரங்கள் ஆலயம் அமைந்துள்ள பிரிவுக்குரிய கிராம உத்தியோகத்தர் மற்றும் வல்வெட்டித்துறை நகரசபையால் வழங்கப்படும்.

12. வலிகாமப் பகுதியில் இருந்து அச்சுவேலிப் பாதை ஊடாக வரும் பக்த அடியார்களுக்கான தனியார் போக்குவரத்துச் சேவைக்கான தரிப்பிடம் தொண்டைமானாறு சந்திப் பகுதியில் அமைக்கப்படும்.

13. இலங்கைப் போக்குவரத்துச் சபை, தனியார் போக்குவரத்து பேருந்துகளுக்கான தரிப்பிடம் வழமையான இடத்தில் அமைக்கப்படும்.

14. வைத்திய சேவைக்கான உற்சவகாலப் பணிமனை வழமைபோல் அமையும்.

15. சாரணர், முதலுதவிச் சங்கம், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் என்பவற்றின் சேவை வழமைபோல் இடம்பெறும்.

16. ஆற்றில் நீராடச் செல்லும் பக்த அடியார்கள் பாதுகாப்பு எல்லைக்குள் நீராடுதல் வேண்டும்.

17. உற்சவ ஒழுங்கமைத்தல் தொடர்பில் இடம்பெற்ற ஒழுங்கமைப்புக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமே இறுதித்தீர்மானமாகும்.

18. பொலித்தீன் பாவனை ஆலயச் சூழலில் தடைசெய்யப்பட்டுள்ளது.

19. பாதுகாப்பை உறுதி செய்ய தன்னியங்கி CCTV கமராக்கள் செயற்பாட்டில் இருக்கும்.

ஆலயத் தேரோடும் வீதிகளில் சகல விதமான வியாபாரங்களும் நடைபாதை வியாபாரங்களும் களியாட்டங்களும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளன என பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (இ)

## அச்சத்தைப் போக்குங்கள்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரையோர 645 ஆவது ஒழுங்கை பல வருடங்களாகப் புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாக காணப்படுவதால் வீதியால் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களுக்குட்படுவதாகவும் இவ் வீதிக்கு அருகில் உள்ள வடிகான் சேதமடைந்திருப்பதனால் கழிவு நீர்தேங்கி டெங்கு நுளம்பு பெருகுவதாகவும் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இவ்வீதி புனரமைப்பு தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை தகவலளிக்கப்பட்ட போதிலும் இதுவரை நடவடிக்கை ஏதும் எடுக் கப்படவில்லை என பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே இவ் விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் உரிய நடவடிக்கை யெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-109)

## விசேட டெங்கு கட்டுப்பாட்டு வாரம்

விசேட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் 29.08.2017 - 31.08.2017 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது. டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழலை அகற்றி டெங்கு தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாக்கும் முகமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதன்மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து விடுபட முடியும். இந்தத் தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புகள் வழங்கி தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுச் சூழலை துப்புரவாக பேணுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இந் நாட்களில் பின்வரும் கிராம அலுவலர் பகுதிகளில் டெங்கு களத் தரிசிப்பு நடைபெறும்.

29.08.2017 வண்ணார் பண்ணை ஜே/98, ஜே/100, ஜே/102. 30.08.2017 நாவாந்துறை ஜே/85, ஜே/87, ஜே/88.

31.08.2017 நல்லூர் ஜே/109, ஜே/108, ஜே/107

இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ-7)

## 'இது எமது விடுமுறைக்காலம்' "பட்டம் விடுவோம்"

(யாழ்ப்பாணம்)

கலை இலக்கியத்தை நேசிக்கும் மனித நேயப் பண்புகளால் மேம்பட்ட சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பேரெண்ணத்தோடு பல்வேறுபட்ட கலை, கலாசார மேம்பாட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் யாழ்ப்பாணப் பிரதேச கலாசார அதிகார சபை, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் "பன்னிரு மாத விளக்கு" நிகழ்ச்சித்திட்டத்துக்கு அமைவாக எதிர்வரும் 31.08.2017 வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் மாநகர சபை மைதானத்தில் பட்டம் விடும் போட்டியை நடத்தவுள்ளது.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான இப் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப் பிரதேச கலாசார அதிகார சபையின் ஒருங்கிணைப்பாளரிடம் தங்களது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டுவோருக்கு பணப் பரிசு வழங்கப்படும். முதல் பரிசு-ரூபா 5000, இரண்டாம் பரிசு-ரூபா 3000, மூன்றாம் பரிசு-ரூபா 2000.

தகுதியான பட்டங்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும். சிறுவர் கழக பொறுப்பாசிரியர் அல்லது கிராம சேவை உத்தியோ கத்தரின் உறுதிப்படுத்த லோடு போட்டியில் பங்குபற்றி பயனடையலாம் என யாழ். பிரதேச செயலாளரும் கலா சார அதிகார சபைத் தலை வருமான பொ.தயானந்தன் அறிவித்துள்ளார். (இ)

## வள்ளி திருமணம் இசை நாடகம்

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும். இதில் யாழ்ப்பாணம் நாட் டார் வழங்கியற் கழகத்தினர் தயாரித்து வழங்கும் வள்ளி திருமணம் இசை நாடகம் இடம் பெறும். (இ-3)

## செல்வச் சந்நிதியில் ஆன்மீக நிகழ்வுகள்

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவ காலத்தை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய அறநெறிப் பாடசாலையின் அனுசரணையில் நடைபெறும் ஆன்மீக நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 7 மணிவரை ஆலய முன்றலில் அமைக்கப்பட்டுள்ள விசேட மேடையில் இடம்பெறும்.

இதில் செல்வச்சந்நிதி ஆலய அறநெறி மாணவி தரணிகா ஸ்ரீலிங்கத்தின் பேச்சு, சண்டிலிப்பாய் பிரதேச சமுர்த்தி உத்தியோகத்தர் இளஞ்சைவப் புலவர் சுவேந்திரராஜா காசிராஜா, வி.சுமதீஸ்வரன் ஆகியோரின் பிரசங்கம் என்பனவும் இடம்பெறும். (இ-3)

## பொன்னாலை வரதராஜப் பெருமாளின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து [illegible] நாட்கள் இடம்பெறவுள்ள விஞ்ஞாபனத்தில் எதிர்வரும் 11.09.2017 திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு வேட்டைத் திருவிழாவும் 12.09.2017 செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

## ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம்

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 05.09.2017 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 6 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## மூலநோயில் பயன்படும் மூலிகைகளும் அவற்றின் பயன்பாடும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

மனித உடல் ஊட்டப் பொருட்கள், அணுக்கள், (பஞ்சபூதங்கள்), மலங்கள் ஆகியவற்றால் ஆனது. ஊட்டப் பொருட்கள் வாத, பித்த,கபமென மூன்று வகையாகும். தாதுக்கள் வெண்குருதி, இரத்தம், சதை, கொழுப்பு, என்பு, என்புக்கரு, சுக்கிலம்/ சுரோணிதம்(உயிரணு) என ஏழுவகையாகும். மலங்கள், சிறுநீர், வியர்வை என மூன்று பிரிவுகளாகும்.

உடல் நலத்தின் பாது காப்பிற்கு இலைகள் அனைத்தினுடைய இயற்கையான நிலைகள் பேணப்படல் அவசியம்.எப்போது இவற்றின் ஒழுங்குநிலை குலைகிறதோ அப்போது தான் நோய் உண்டாகும். மூல நோயில் பித்த தோஷ மானது இயற்கை நிலையிலிருந்து விருத்தியடைந்து பின்பு இரச, இரத்த தாதுக்களை தாக்கி மூல நோயை ஏற்படுத்துகின்றது. எனவே மூல நோயில் மூலிகை மருந்துகளுடன் உணவு வாழ்க்கை பழக்க வழக்கம் இவைகளை ஒழுங்கு படுத்திக் கொள்ளல் அவசிய மாகின்றது.

எனவே இந்நோயில் பத்திய உணவுகளை எடுத்தும் அபத்திய உணவுகளை தவிர்த்தும் கொள்ளல் அவசிய மாகின்றது.

1. மூலநோய் போக்கும் பிள்ளைக் கற்றாழை எமது பிரதேசத்தில் பரவலாகக் காணப்படும். Botanical Name -Aloevera. இதனை கறி சமைத்து உண்ணலாம் என பலருக்குத் தெரியாது.

கற்றாழைக் கறி

பிள்ளைக் கற்றாழையின் உள்ளே உள்ள ஜெல் போன்றதை கற்றாழைச் சோறு என்பர்.இதனைச் சிறு துண்டுகளாக வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.இது மிகவும் கசப்புத் தன்மையுடையதாக இருக்கும். எனவே இதனை 7,8 தடவை நீர்விட்டு நன்கு கழுவ வேண்டும். கசப்புத் தன்மை நீங்கிவிடும். அதன் பின்னர் கறி சரக்குகளுடன் இதனையும் சேர்த்து அரைத்து உப்பும் புளியும் அளவாகச் சேர்த்து அடுப்பேற்றி கொதிக்க வைத்து இறக்கி சோற்றுடன் சேர்த்து உண்ணலாம்.

கற்றாழையில் Anthra quinone glycoside (Aloin) எனும் இரசாயனப் பொருள் உள்ளது. இது பேதியை உண்டு பண்ணும் செய்கை உடையது.மேலும் இது நீரில் கரைந்து வெளியேறி விடும். எனவே இதன் பின்னர் கறியாக சமைத்து உண்ணும் போது இலகு மலமிளக்கி செய்கையைக் காட்டும்.

கற்றாழைக் கறி குளிர்மையும் குளிர்ச்சியான வீரியமும் உள்ளது. எனவே உட்சூட்டை தணித்து மூல நோயை படிப் படியாக குணப்படுத்தும்.

2. கருணைக்கிழங்கு

உண்ணத்தக்க கிழங்குகளில் கருணைக்கிழங்கு முதன்மையானது.



Botanical Name-Amorphophallus Campaniculatus

கருணைக்கிழங்கின் தோல் நீக்கி, சிறு துண்டுகளாக வெட்டி உப்புப் போட்டு நீரில் அவித்து எடுக்க வேண்டும். அதனை நெய்யில் பொன்னிறமாக வறுக்கவும். 5, 6 செத்தல் மிளகாய், 1 தேக்கரண்டி உளுத்தம் பருப்பு, ஒரு சிறங்கை தேங்காய்ப்பூ என்பவற்றையும் வறுத்து எடுத்துக் கொள்ளவும். தேவையான அளவு உப்பு, தேசிப்புளி சேர்க்கவும். இது மூலநோய் உள்ளவர்கட்கு மிகுந்த நன்மை பயக்கும்.



3. அறுகம்புல்சாறு

100 மில்லி அளவு வாரத்தின் 4 நாட்கள் அருந்தி வரவேண்டும்.

Botanical Name- Cynodon dactylon.

4. பிரண்டையை கணு நீக்கி நெய்விட்டு வதக்கி துவையல் அரைத்துச் சாப்பிட ஆசனக் குத்தல், மூலநோய் குணமாகும்.

Botanical Name- Cissus Quadrangularis

5. துத்தி இலைகள் ஒரு பிடி, மஞ்சள் தூள் 6 கிராம் இரண்டையும் நல்லெண்ணெயில் ஆசனத்தில் வெளித்தள்ளும் மூலத்தில் தடவினால் மூலம் தள்ளுவது நிற்கும். துத்திக்கீரையை நெய்யில் அல்லது நல்லெண்ணெயில் வதக்கியும் சாப்பிடலாம்.

Botanical Name- Abutilon Indicum.

6.பப்பாளிப் பழத்தை தேனில் ஊறவைத்துச் சாப்பிட்டு வர மூலநோய் குணமாகும்.

7. 10 மில்லி இஞ்சிச் சாறும் 15 மில்லி எலுமிச்சம்பழச்சாறு, 10 மில்லி தேன் கலந்து காலையில் எடுத்துவர மூலநோய் குணமாகும்.


8.சிறிய வெங்காயத்தை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி பழைய சோற்று நீரில் போட்டு தினமும் காலையில் 400 மில்லி அளவு அருந்தி வரவும் மூலநோய் குணமாகும்.

9.முள்ளங்கி இலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து 4 கிராம் (1/2 தேக்கரண்டி) அளவு காலை, மாலை வெந்நீர், சக்கரையுடன் சேர்த்து சாப்பிட்டு வரலாம்.

10. சுண்டைக்காயை பச்சையாகவோ, மோரில் ஊறவைத்து உலர்த்தியோ அடிக்கடி உணவில் சேர்த்து சாப்பிட்டு வரவும் மூலநோய் குணமாகும்.

11. வாழைப்பூச் சாறு 200 மில்லியுடன் பனங்கற்கண்டு அதிகளவு சேர்த்து காலையில் அருந்தி வரவும் மூலநோய் தணியும்.

12. பொன்னாங்காணிக் கீரை, வெந்தயக்கீரை, மூக்கிரட்டை கீரை ஆகியவற்றை அடிக்கடி சோற்றுடன் சேர்த்து சாப்பிட்டுவர மலமும் இளகிப் போய், மூலநோயின் தாக்கத்தையும் குறைக்கும்.



13.றோசாப்பூ (ரோஸ் நிற) இதழ்களை நிறைய சேகரித்து குளிர்ந்த நீர் ஊறல் குடிநீராக 200 மில்லி அளவு காலை, மாலை அருந்திவர மூல நோய் குணமாகும்.

14. ஆவாரம் பூக்களை சேகரித்து நிழலில் உலர்த்தி, அறுகம் வேர்களையும் சேகரித்து நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து 4 கிராம் அளவு காலை, மாலை பசு நெய்யில் குழைத்து காலை, மாலை 40 நாட்கள் சாப்பிட்டு வந்தாலும் மூலநோய் குணமாகும்.


15. குப்பைமேனி இலைகளை சேகரித்து நிழலில் உலர்த்தி அதேயளவு சின்னச்சீரகம் சேர்த்து இடித்து, பொடித்து, அரித்துக்கொள்ள வேண்டும். 2 கிராம் அளவு காலை, மாலை மோரில் சாப்பிட்டு வந்தாலும் மூலநோய் தணிவடையும்.

16. கடுக்காய்தோல், நெல்லிமுள்ளி, தான்றிக் காய்த்தோல் ஆகியவற்றை ஒரேயளவாக எடுத்து உலர்த்தி, இடித்து, அரித்து வைத்துக் கொள்ள வேண்டும் தினமும் இரவில் ஒரு தேக்கரண்டியளவு வெந்நீர், பனங்கற்கண்டுடன் சேர்த்து 48 நாட்கள் சாப்பிட்டு வந்தாலும் மூல நோய் குணமடையும்.



17. வெந்தயக் கஞ்சி புழுங்கல் அரிசி-1 சிறிய கப், வெந்தயம்- 2 மேசைக்கரண்டி, மிளகு, சீரகத்தூள், உப்பு- தேவையானளவு, அரிசி, வெந்தயத்தை பொடித்து மாவாக்கி தேவையான போது இப்பொடியுடன் நீர் சேர்த்து கரைத்து அடுப்பேற்றி வெந்ததும் சீரகத்தூள், மிளகு, உப்பு சேர்த்து நீர்த்தன்மையாக இறக்கி ஆறவிட்டு கஞ்சியாக பருகி வந்ததும் உட்சூட்டை தணித்து மூல நோயை படிப்படியாக குறைக்கும்.

18. மூலத்தால் இரத்தம் போய்க்கொண்டிருக்கும் நிலையில் மூக்கிரட்டையிலைகளை சேகரித்து கழுவி அம்மியில் வைத்து மைபோல அரைத்து 5 கிராம் அளவு உருட்டி வாயில் போட்டு சிறிதளவு வெந்நீர் குடித்து வந்தாலும் மேற்படி நிலைமை தணியும்.



19. அத்திப்பிஞ்சு, மாமரத்தின் உள்பட்டை, கொவ்வைப் பிஞ்சு, சிறுசெருப்படை இலைகள் ஒவ்வொன்றும் ஒரே யளவாக எடுத்து நன்கு கழுவி கல்வத்தில் இட்டு அரைத்து, பின்பு வாழைப் பூவை இடித்து பிழிந்த சாற்குப் பதத்தில் சுண்டங்காயளவு மாத்திரைகளாக உருட்டி நிழலில் உலர்த்தி சீசாவில் பத்திரப்படுத்தவும். காலை, மாலை ஒரு உருண்டை வீதம் வாயில் போட்டு வெந்நீர் குடித்து வந்தால் இரத்த மூலமும் ஆசனக் கடுப்பும் குணமாகும்.

அத்துடன் தினமும் ஓர் அத்திப்பழத்தை சாப்பிட்டு வந்தாலும் மலமும் இளகும், மூல நோயும் தணிவடைந்து வரும்.

குறிப்பு: நன்றாக மோர் அருந்த வேண்டும். கீரை வகைகளும் தானிய உணவு வகைகளும் தினம் உணவில் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

இரவில் 400 மில்லி நீரில் 20 கிராம் சின்னச் சீரகத்தை ஊற விட்டு அதிகாலையில் வெறும் வயிற்றில் வடித்து அருந்தி வர வேண்டும்.

வாழைப்பழம், பப்பாளிப்பழம், அத்திப் பழம் போன்றவற்றை தினமும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

காரம், மிளகாய், எண்ணெய் சேர்த்த உணவுகளை இயலுமான வரை தவிர்த்துக் கொள்ள வேண்டும். வைத்திய ஆலோசனையின்படி குடற் புழுக்களுக்குரிய சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

மேற்படி மூலிகைகளை விட வயல் நண்டுக்கறி, (மழைகாலத்தில் வயல்களில் காணப்படும் சிறிய நண்டு இனம்), ஆமை இறைச்சிக்கறி, பன்றி இறைச்சி என்பனவும் எடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் ஷங்காய் நகரம் போன்று தென்னிலங்கையை மாற்றுவோம்

## ஆசைகாட்டுகிறார் அந்நாட்டுத் தூதுவர்



(கொழும்பு)

அடுத்த 15 ஆண்டுகளுக்குள் இலங்கையை சிங்கப்பூராக தரமுயர்த்துவதற்கு ஏற்ற வகையில், சீனா தொடர்ந்து உதவிகளை வழங்கும் என்றும் சீனாவின் ஷங்காய் நகரம் போன்று தென்னிலங்கையை மாற்றுவோம் என்றும் அந்நாட்டுத் தூதுவர் யி ஷியான் லியாங் தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்று முன்தினம் நடந்த- சீனாவின் கொடையில், ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு 1.8 மில்லியன் ரூபா பெறுமதியான பாடசாலை கருவிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சீனத் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

"சீனாவின் மிகச் சிறப்பான நண்பன் தான் இலங்கை. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்பு 70 ஆண்டுகளாக தொடர்கிறது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்குக் காரணமான இறப்பர்- அரிசி உடன்பாட்டை, சீன, இலங்கை மக்கள் நன்றாக அறிந்துள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக சீனா தனது அனைத்துலக உதவியில் அதிகளவு பங்கை இலங்கைக்கு வழங்கி வருகிறது. இலங்கையின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் சீனாவுக்கு பொறுப்பு உள்ளது.

இலங்கையர்களுக்கு அபிவிருத்தி முக்கியம். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கத்துடன் மக்கள் ஒத்துழைக்க வேண்டும்.

தென்பகுதியில் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க இலங்கைக்கு சீனா உதவும். இளைஞர்களின் தொழில்நுட்ப ஆற்றலை வலுப்படுத்தவும், மீன்பிடி மற்றும் ஏனைய துறைகளில், தொழில்நுட்ப வசதிகளை பெருக்கவும்இது உதவும்.

சீன-இலங்கை நட்புறவு சங்கத்தின் மூலம், 1300 இலங்கை மாணவர்களுக்கு சீனா புலமைப்பரிசில் வாய்ப்புகளை வழங்கியது. இது எதிர்காலத்தில் 2000 ஆக அதிகரிக்கப்படும்.

தென்பகுதியில் உள்ள மீனவர்களுக்கான வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான திட்டத்தை ஆரம்பிக்கவும் நாங்கள் இணங்கியுள்ளோம்.

சீனாவின் ஷங்காய் நகரத்தைப் போன்று, தென்பகுதியை அபிவிருத்தி செய்வதற்கு, சீனா தொடர்ந்து உதவிகளைச் செய்யும்.

அடுத்த 15 ஆண்டுகளில் இலங்கையை சிங்கப்பூரின் நிலைக்கு தரமுயர்த்துவதற்காக சீனா தொடர்ந்து உதவிகளை வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தில் ஜப்பானின் நாசகாரி போர்க்கப்பல்

(கொழும்பு)

ஜப்பானிய கடற்படையின் 'அமகிரி' என்ற நாசகாரி போர்க்கப்பல் நேற்று முன்தினம் மீண்டும் அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

மூன்று நாட்கள் நல்லெண்ணப் பயணமாக வந்துள்ள இந்தக் கப்பலை இலங்கை கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்றனர்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை விட்டு புறப்பட்டுச் செல்ல முன்னர், இலங்கைக் கடற்படையின் 'சமுத்ர' என்ற ஆழ்கடல் ரோந்துக் கப்பலுடன் இணைந்து, ஜப்பானிய போர்க்கப்பலான அமகிரி பயிற்சிகளில் ஈடு படவுள்ளது.

பாதுகாப்பு அணி II இன் தளபதி கப்டன் கோகே சாய்டோ தலைமையிலான ஜப்பானிய கடற்படை அணி, இலங்கை கடற்படையுடன் நிபுணத்துவ பரிமாற்றங்கள் மற்றும் பரஸ்பர உறவுகளை வலுப் படுத்தும் செயற்பாடுகளிலும் ஈடு படவுள்ளது



அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'அமகிரி' என்ற போர்க்கப்பல் ஜப்பானின் 'அசகிரி' வகையைச் சேர்ந்த நாசகாரி கப்பலாகும். (இ-7)

# திருமலை துறைமுகம்மீது இந்தியா, ஜப்பான் ஆர்வம்

## பிரதமர் ரணில் தகவல்



திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதில் இந்தியாவும், ஜப்பானும் ஆர்வம் காட்டி வருவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் கடந்த 20 ஆம் திகதி நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக, யார் மிகச் சிறந்த பங்காளரோ அவருடன் இணைந்து கூட்டு முயற்சியாக அரசாங்கம் செயற்படும். ஆனால் திருகோணமலைத் துறைமுகம் யாருக்கும் விற்கப்படாது.

நீண்டகால குறுகிய கால நடவடிக்கைகளின் மூலம் நாட்டின் பொருளாதாரம் உறுதிப்படுத்தப்பட்டு வருகிறது.

[illegible] கடன்கள் மீளச் செலுத்தப்பட்டு, வருமானம் அதிகரிக்கப்பட்டு [illegible] என்றும் ரணில் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## எனக்கு ஏது நேரம்?

"எனக்கு நேரமில்லை" என்று சொல்லிக் கொள்வது பலருக்கும் இப்போது பஷனாகி விட்டது.

மற்றவர்களுக்கு உதவி செய்வதிலிருந்து தப்பித்துக் கொள்ளத்தான் இப்படிச் சொல்கிறார்கள் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை. தங்கள் வேலைகளையும் தங்கள் கடமைகளையும் ஆற்றவே இந்த வாக்கியத்தைச் சொல்லித் தப்பித்துக் கொள்கிறார்கள்.

"என்னங்க, முடி இப்படிக் காடா வளர்ந்து போச்சே! எப்ப வெட்டிக்கப் போறதா உத்தேசம்?" எனக்கு ஏது நேரம்?

"வீட்டைச் சுத்திப் பன்றியும் மாடும் மேயுதுங்க. முன் வேலி போடுங்க! அதுக்கெல்லாம் ஏதுடி நேரம்?"

"உங்க வெப்பாஸிட்டை ரெனிவல் பண்ணனும்பா. இப்படியே இருந்தா வட்டி பெருகாதுப்பா! என்னங்க பண்ணச் சொல்றீங்க? டைமே இல்லை."

"மகளுக்கு நல்ல வரனாப் பாருங்க! "அதுக்கெல்லாம் நல்ல நேரம் வரணும். நம்ம கையிலே என்ன இருக்கு?"

இப்படித் தங்களது இயலாமைகளையும் ஆர்வக் குறைவுகளையும் குறைபாடுகளையும் மறைக்க நேரத்தின் மீது பழியைப் போடுகிறார்கள்.

ஒன்று மட்டும் உறுதி. நமக்குப் பிரியமும் தேவையும் கட்டாயமும் இருந்தால் நாம் ஒன்றைச் செயற்படுத்துகின்றோம். மற்றவற்றைத் தள்ளிப் போட்டுவிட்டு, நேரமில்லைஎன்றுசொல்லிக்கதையளக்கிறோம்.

ஒரு பிரியமான காதலன் தன் காதலியைச் சந்திக்க நேரமில்லை என்று சொல்லுவானா?

பசிக்கிறவன் சாப்பிட நேரமில்லை என்று சொல்வானா?

காரோட்ட ஆர்வமிருப்பவன் அதைக் கற்றுக் கொள்ள நேரமில்லை என்பானா?

ஒருக்காலும் மாட்டான். ஆக நேரமில்லை என்று சொன்னால் நமக்கு "மனமில்லை" என்று பொருள். நாம் ஏன் அப்படி ஒன்றில் மனம் வைக்கவில்லை என்று சிந்தித்துப் பார்த்தால் குறுக்கே விழுந்து கிடக்கும் தடைக்கற்கள் தாமாக புலப்படும்.

அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட கற்கள் நம் சுவாரசியக் குறைவுகளுக்கு நாமே உருவாக்கி வைத்துள்ள கற்பனைத் தடைகள்.

மனம் வைத்தால் இக் கற்களை வளர்ச்சிப் பாதையை அடைத்துக் கொண்டிருப்பதிலிருந்து வீசி எறிந்து விடலாம்.

அப்படி வீசி எறிந்துவிட்டால் நாம் நேரமில்லை என்று சொல்வதை அடியோடு விட்டுவிடுவோம்.

அப்புறம் பாருங்கள் உங்கள் ஆற்றலை!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கறுப்புச் சட்டைக்காரர்கள் மாபெரும் திருடர்கள்"

# படுமோசடியாளர்களாக மதத் தலைவர்கள்



## பிரதியமைச்சர் ரஞ்சன் சர்ச்சைக் கருத்து

(கொழும்பு)

இலங்கையில் ஆகவும் படுமோசடியாளர்களாக மதத் தலைவர்கள் உள்ளனர் என சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்.

"பொதுச் சொத்துகளை சூறையாடுபவர்கள் தமக்குள் மோதிக் கொள்ளும் போது மக்கள் நன்மையடைகின்றனர். இவ்வாறான நிலைமைகள் அண்மையில் பல தடவைகள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

"பேர்பெச்சுவல் ட்ரெசரீஸ் தலைவர் அர்ஜுன் அலோஸியஸ் மற்றும் நஹில் விஜயசூரியவின் மகளும் மோதிக் கொண்டமை இதற்கான அண்மைக்கால உதாரணம் ஆகும். இதனால் பிணை ஊழல் பற்றி பல விடயங்கள் அம்பலத்துக்கு வந்தன. கருணா மற்றும் பிரபாகரனுக்கு இடையிலான முரண்பாடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்விக்கு வழி வகுத்தது. கள்வர்கள் மோதும் போது அரசியல் கட்சிகளும் நன்மையடையும்.

"அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ விடயத்திலும் இதுவே நடந்துள்ளது. இலங்கையில் ஆகவும் படுமோசடியாளர்களாக மதத் தலைவர்கள் உள்ளனர். அடுத்ததாக சட்டத்தரணிகள் உள்ளனர்.

"கொல்வின் ஆர்.டீ. சில்வா காலத்திலிருந்து பல சட்டத்தரணிகள் குற்றமிழைத்தவர்களை பாதுகாத்து வருகின்றனர்.

கறுப் புச் சட்டைக்காரர்கள் மாபெ ரும் திருடர்கள்" எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இலங்கையில் உலாவும் வேற்றுக்கிரகவாசிகள்

### நேரில் பார்த்த மக்கள்



வேற்றுக்கிரகவாசிகள் தொடர்பாக பல்வேறு தகவல்கள் வெளிவருகின்ற நிலையில் இலங்கையில் கூட பறக்கும் தட்டுக்கள் வானில் தென்படுவதாக செய்திகள் வெளிவந்தன.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக பலர் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் பல அதிர்ச்சி தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

குறிப்பாக இலங்கையின் தெற்கு வட மத்திய மாகாணங்களில் வாழும் மக்கள் பலர் இதைப் பார்த்ததாக தெரிவித்துள்ளனர்.

1984 ஆம் ஆண்டு பொலநறுவையில் நீல கோளவடிவமான உருவம் ஒன்று தென்பட்டுள்ளது. இது பொலநறுவை மகாவெள பிரதேச வான்பரப்பில் தென்பட்டதாக கூறப்படுகின்றது. இதனை ஆசிரியர் ஒருவரும் 3 மாணவர்களும் கண்டுள்ளனர்.

பாடசாலையின் அருகே தரையிறங்கிய நிலையில் அதிலிருந்து மனித உருக் கொண்ட அங்கியொன்று வெளியாகியதாக கூறியுள்ளனர்.

1998 பண்டராவளையில் பாரிய இறுவெட்டு வடிவிலான தட்டு ஒன்று தரையிறங்கியதாக கூறப்படுகின்றது. சிவப்பு, மஞ்சள் ஒளியை சிமிட்டியவாறு குறித்த இறுவெட்டு தரையிறங்கியுள்ளது.

பாடசாலை ஒன்றில் தரையிறங்கியதாகவும் இதனை 8 மற்றும் 10 வயதுடைய இரு மாணவர்கள் கண்டுள்ளனர். அதே உருவத்தை பல கிராமவாசிகளும் கண்டுள்ளனர்.

2002 ஆம் ஆண்டு பொலநறுவையில் பல வண்ண ஒளிகளை சிமிட்டும் கோளவடிவமான பல பொருட்கள் வானில் பறந்து சென்றுள்ளன.

2006 ஆம் ஆண்டு தனமல்வில் மனிதர்களை போன்று தோற்றம் உள்ள இரண்டு அடி உயரமான கறுப்பு உருவங்களை 50 இற்கும் மேற்பட்டவர்கள் கண்டுள்ளனர்.

2017 ஜனவரி இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, காலி மற்றும் மாத்தறை ஆகிய பிரதேசங்களில் இனந் தெரியாத பொருட்கள் தென்பட்டுள்ளன. இந்த ஆய்வின் அடிப்படையில் இவை வேற்றுக்கிரக வாசிகளா? அல்லது ஆவியா? அல்லது அமானுஸ்யமா? என்ற சந்தேகம் எழுகின்றது. (இ-7)

## கருணாவே காரணம்!

### முன்னாள் போராளிகள் குற்றச்சாட்டு



கருணா ஆயுதத்தோடு வந்து எவ்வளவோ மக்களை அழித்தவர். இன்று முன்னாள் போராளிகள் இந்த நிலைமையில் இருப்பதற்கும் காரணம் கருணாதான் என புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயப்படுத்தப்பட்ட நபர்களின் ஒன்றியத்தின் தலைவர் க.இன்பராசா தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் முன்னாள் போராளிகளை மையப்படுத்தி 3 மாத காலத்திற்குள் ஒன்றியத்தை உருவாக்கி இருக்கின்றோம். அம்பாறை மாவட்டத்திற்கு முதன் முறையாக வருகை தந்து முன்னாள் போராளிகள், போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், மாவீரர் குடும்பங்களை சந்தித்திருக்கின்றோம். எமது மக்கள், போராளிகள் படும் துன்ப துயரங்களை எமது ஒன்றியம் மூலம் வெளி உலகிற்கு தெரியப்படுத்தி வாழ்வாதாரத்தினை பெறுவதற்காக உழைத்து வருகின்றோம்.

எமது இனத்திற்கு துரோகம் செய்ய ஒரு காலமும் நினைக்கக்கூடாது என்பது தான் எமது நிலைப்பாடு. மாவீரர் என்று கூறுபவர்கள் விலைமதிக்க முடியாத சொத்துக்கள். உலகத்திலே தமிழர்கள் இலங்கையில் இருக்கின்றார்கள் என்பதனை காட்டியவர் எமது தலைவர். கருணா திருகோணமலையில் வைத்து கூறுகின்றார், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட போராளிகளுக்கு திரும்பவும் புனர்வாழ்வு அளிக்க வேண்டும் என்று. இவர் கூறுவது வேதனையான விடயம். இதனை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு ஆயுதம் மௌனிக்கப்பட்டதன் பின்பு வந்தோம்.

அவ்வாறென்றால் கருணா ஆயுதத்தோடு வந்து எவ்வளவோ மக்களை அழித்தவர். இன்று இந்தப் போராளிகள் இந்த நிலைமையில் இருப்பதற்குக் காரணம் கருணாதான் என அவர் மேலும் குற்றம்சாட்டினார். (இ-7)

## மாணவர்கள் போராட்டம் தொடர்கிறது

நீதிமன்றம் மற்றும் பல்கலைக்கழக நிர்வாகம் என்பவற்றின் தடை உத்தரவுகளையும் மீறி கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் முன்னெடுத்துள்ள போராட்டம் நேற்று 15ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

முறையற்ற வகுப்புத்தடைகளை நீக்குமாறும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ள 2ஆம் வருட மாணவர்களுக்கான விடுதி வசதிகளைப் பெற்றுத் தருமாறும், பல்கலைக்கழக நிர்வாகத்தை கண்டித்தும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாக கட்டடத்தை முற்றுகையிட்டு தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வரும் மாணவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தவறான முடிவால் நாட்டுக்கு நட்டம்

### அமைச்சர் சுசில் அதிருப்தி

"ஸ்ரீலங்கா விமான கம்பனி உரிய தருணங்களில் தவறான முடிவுகளை எடுத்து, நாட்டுக்கு ஏன் இவ்வாறு நட்டத்தை ஏற்படுத்தி விட்டது என விளங்கவில்லை" என விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

"ராஜபக்ஷ அரசாங்கமே எயார் பஸ் நிறுவனத்துடன் 4 எயார் பஸ் விமானங்களை வாங்குவதற்காக செய்யப்பட்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய தீர்மானித்தது. நல்லாட்சி அரசாங்கம் புதிய பணிப்பாளர் சபையை நியமித்த பின்னர் நிலைமை மேலும் மோசமாகியது.

"கோப் அறிக்கை தொடர்பாக, எயார் பஸ் விமான நிறுவனத்துடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை ராஜபக்ஷ அரசாங்கம் இரத்துச்செய்தது.

"தேசிய விமான நிறுவனத்தால் தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டு வருவதையிட்டு, கோப் அறிக்கை எச்சரித்ததால் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் புதிய எயார் பஸ் விமானங்களின் கொள்வனவை இரத்துச் செய்து, நான்கு A350 விமானங்களை குத்தகைக்கு வாங்க ராஜபக்ஷ அரசாங்கம் தீர்மானித்தது. இந்த தீர்மானங்கள் எடுக்க முன்னரே புதிய அரசாங்கம் பதவிக்கு வந்தது.

"புதிய நிர்வாகம், பரிஸ், பிராங்பேட், ரோம் ஆகிய முக்கிய நகரங்களில் இருந்தான சேவைகளை நிறுத்தியது.

"அதேசமயம், உயர் பதவிகளில் இருந்தோர் தமது சம்பளங்களையும் அதிகரித்துக்கொண்டனர். தமக்கான படிகளையும் அதிகரித்தனர். இது ஏற்கனவே கஷ்டத்தில் இருந்த ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸின் நிதி நிலைமையை மேலும் மோசமாக்கியது. மேலும், தேவையில்லாத பல புதிய நியமனங்களால் நிலைமை மேலும் மோசமாகிவிட்டது.

"விமான குத்தகை ஒப்பந்தத்தை 2015இல் புதிய அரசாங்கம் இரத்துச் செய்தாலும், முற்பணமாக செலுத்திய தொகை மீள கிடைக்காது போனமையால், ஸ்ரீலங்கா விமான கம்பனிக்கு 154 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டது.

"பின்னர் புதிய கொள்வனவு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டது. இப்போது இலங்கை 95 மில்லியன் அமெரிக்க டொலர் கட்டுப் பணமாக செலுத்த வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## இப்படி செய்வீங்களா



கடந்த சில மாதங்களாக டிவியில் கொடிகட்டி பறந்து வரும் பிக்போஸ் நிகழ்ச்சியில் இருந்து வெளியேறிய ஜூலி மற்றும் காயத்ரி போன்றவர்களை சமூக வலைத்தளங்களில் தொடர்ந்து விமர்சித்து வருகின்றனர்.

இந்த அக்கறையை அரசியலில் காட்டியிருந்தால் நாடு முன்னேறியிருக்கும் என தெரிவித்துள்ளார் பாடகி சின்மயி.

நாட்டை அழிப்பவர்களை கேள்வி கேட்க முடியலையாம், ஒரு ரியாலிட்டி ஷோ போட்டியாளரை துரத்தி அவமானப்படுத்துவதில் என்ன பயன். விளையாட்டுக்கு செய்தால் ஓகே... ஆனால் ஜூலி வீட்டு வாசலில் சென்று இப்படி செய்வீர்களா! வெட்கமாக இல்லை? என அவர் கேட்டுள்ளார்.

## சுஜாவின் ஆதங்கம்



பிக்போஸ் நிகழ்ச்சியில் புதிய போட்டியாளராக கடந்த வாரம் சென்றவர் சுஜா வருணி. இந்த 5 நாட்கள் அனுபவத்தை பிக்போஸ் சுஜா வருணியிடம் கேட்ட போது. உண்மையில் ரொம்ப சந்தோசமாக தான் இருக்கிறது. மற்ற போட்டியா டியாளர்கள் பின்னாடி எப்படி பேசுகிறார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் என் முன்பு நன்றாக தான் நடந்து கொள்கிறார்கள் என்றார். அதன் பின் மக்களிடம் உங்களை பற்றி ஏதாவது சொல்ல நினைக்கிறீர்களா என்று கேட்ட போது. ஆமாம் என் வீட்டை ரொம்பவும் மிஸ் பண்றேன், என் தங்கையும் மிஸ் பண்றேன், இந்த சினிமாத்துறைக்கு வந்து பல வருடங்கள் ஆகிவிட்டன. சினிமாவில் என்னை பல பேர் நல்லா நடிக்கிறாய், உன் அர்ப்பணிப்பு நல்லா இருக்கு என்று சொன்னாலும் எனக்கு நல்ல நடிகை என்று அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பது வருத்தம் தான். ஆனால் எனக்கு நம்பிக்கை இருக்கு இந்த பிக்போஸ் டைட்டிலை நான் ஜெயிப்பேன். அப்படி ஜெயித்து வெளியே போகும் போது என் வாழ்க்கை மாறும் என்று நம்புகிறேன் என சுஜா வருணி கூறினார்

## பிக்போஸிற்கு வரும் பவர்ஸ்ரார்



தமிழ் சினிமாவில் ஒரு கட்டத்தில் பல ரசிகர்களை தனது இயல்பான ஜாலி சுபாவத்தால் சேகரித்து வைத்தவர் 'பவர் ஸ்டார் சீனிவாசன். இந்நிலையில் சில செக் மோசடி வழக்குகளால் சிறையில் சில காலம் இருந்த பவர் ஸ்டார்.

பிக்போஸ் வீட்டுக்குள் உங்களை அனுப்ப பல போராட்டம் நடந்தாக கூறப்படுகிறதே என்று கேள்விக்கு, ஆமாம் தம்பி கூப்பிட்டாங்க, எனக்கு சில தனிப்பட்ட வேலைகள் காரணமாக போகமுடியவியலை, பிக்போஸ் வீட்டுக்குள்ள போகணும்னுதான் எனக்கும் ஆசை. இந்த சீஸன் இல்லையென்றாலும், அடுத்த சீஸனிலாவது என்னை நீங்கள் பார்க்கலாம் என்று கூறியுள்ளார்.

## ரைசாவின் கோபம்





பிக்போஸ் நிகழ்ச்சியில் ரைசாவும் ரசிகர்களிடத்தில் வரவேற்பை பெற்ற ஒருவர். ஏன் பிக்போஸிடம் கூட சரியாக நோமினேஷன் செய்த காரணத்திற்காக நன்மதிப்பை பெற்றார். ஆனாலும் அவ்வப்போது விதிகளை மீறி பிக்போஸையும் கோபப்படுத்தினார்.

யாரிடமும் பெரிதாக வம்பு வளர்த்துக்கொள்ளக்கூடாது என தீவிரமாக இருக்கிறார். மேலும் செல்பி ஸ்டோரி ரவுண்டில் வையாபுரி, கவிதை நயமாகவும், கலாய்க்கும் விதமாகவும் பேசியிருந்தார்.

ஓவியாவை நான் பிக்கப் செய்ய நினைத்தேன். ஆனால் யாரோ ஒருவர் செய்துவிட்டார். அப்புறம் தான் தெரிந்தது ஆரவ் என அப்போது பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் ஒருவரை இப்போது எப்படி ஒரு பெண்ணிடம் இப்படி பேசலாம் என கேள்வி கேட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொங்கி எழும் கமல்




கமல்ஹாசன் தற்போதெல்லாம் மிகவும் தைரியமாக பல கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். அதிலும் டுவிட்டரில் எப்போதும் ஆக்டிவாக இருக்கின்றார்.

நாட்டில் எங்கு எது நடந்தாலும் அதற்காக உடனே ரியாக்ட் செய்கின்றார், அந்த வகையில் சமீபத்தில் இவரின் டுவிட் ஒன்று மிகவும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதில் இவர் காந்திக்குல்லா! காவிக்குல்லா! கஷ்மீரகுல்லா!! தற்போது கோமாளிக்குல்லா, தமிழன் தலையில் போதுமா இன்னும் வேண்டுமா? தயவாய் வெகுள்வாய் தமிழா' என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஆரவ் மீது எடுத்த அதிரடி முடிவு நடந்தது என்ன?




BiggBoss வீட்டில் இருந்து காயத்ரி இறுதியாக வெளியேற்றப்பட்டிருந்தார்.

அவருக்கு அடுத்தபடியாக எலிமினேட் நாமினேஷனில் சிநேகன் மற்றும் ரைசா அதிகமானோரால் நாமினேட் செய்யப்பட்டார்.

இந்த நிலையில் இதற்கு முன் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியில் எலிமினேஷனில் இருந்து ஆரவ் சிலரால் காப்பாற்றப்பட்டார்.

ஆனால் BiggBoss. ஆரவ் அடுத்த வாரம் எலிமினேஷனுக்கு நாமினேட் செய்யப்படுவீர்கள் என்று கூறுகிறார்.

# அ.தி.மு.க. அணிகள் இணைப்பு குறித்து அரசியல் கட்சித் தலைவர்களின் கருத்து

(சென்னை)

அ.தி.மு.க. அணிகள் இணைந்தது குறித்து தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

**மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன்**

தமிழக அரசின் துணை முதலமைச்சர் மற்றும் நிதி அமைச்சராக ஓ.பன்னீர் செலவம் பதவி ஏற்றிருப்பது குறித்து மகிழ்ச்சி அடைவதோடு, எனது வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சி மற்றும் தொல்லியல் துறை அமைச்சராக பதவி ஏற்றிருக்கும் கே.பாண்டியராஜனுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறுப்பேற்றுக் கொண்ட அமைச்சர்கள் தத்தமது துறைகளில் சிறப்பாக செயற்பட்டு தமிழக மக்களின் நன்மதிப்பை பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

**பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ்**

எங்கிருந்தோ எழுதி இயக்கப்படும் நாடகத்தின் ஒருகட்டமாக அ.தி.மு.கவின் இரு அணிகளும் இணைந்திருக்கின்றன.

அதன் பயனாக ஓ.பன்னீர்செல்வம் தலைமை யிலான அணியில் அவர் உட்பட 2 பேர் அமைச்சர்களாகியுள்ளனர்.

இத்தனை நாட்களாக இரு குழுக்களும் எழுப்பிய அத்தனை சத்தங்களும் இதற்காகத்தான் என்பதை இணைப்பு விழா வைபவம் நிரூபித்திருக்கிறது. சுயநல, சந்தர்ப்பவாத அரசியலின் உச்சம் இது.

**தி.மு.க. எம்.பி. கனிமொழி**

அ.தி.மு.கவின் இரு அணிகள் இணைப்பால் தமிழக மக்களுக்கு எவ்வித பயனும் இல்லை. இரு அணிகளை சேர்ந்தவர்கள் நலனுக்காக மட்டுமே இந்த இணைப்பு நடந்துள்ளது. இதில் அவர்களுக்கு தான் பயன் அதிகம். கண்டிப்பாக அவர்கள் மக்களுக்கு நல்லது செய்ய மாட்டார்கள்.

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார்**

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு, சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக அ.தி.மு.க. வில் ஏற்பட்ட பிரிவினை மறந்து, மீண்டும் இணைந்திருப்பதை மகிழ்வோடு வரவேற்கிறேன்.

பிரிவு ஏற்பட்டதையும், மீண்டும் இணைந்ததை யும் அ.தி.மு.கவின் உட்கட்சிப் பிரச்சினை என்று ஒதுக்கிவிட முடியாது. ஏனென்றால் 2016 சட்டசபை தேர்தலில் ஜெயலலிதா தலைமையில் மீண்டும் நல்லாட்சி தொடர வேண்டும் என வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை மக்கள் அளித்தனர்.

அதனடிப்படையில், அந்த ஆட்சி முழுமையாக 5 ஆண்டு காலமும் நிலைத் திருந்தால் தான் மக்களின் தீர்ப்பை மதிப்பதாக இருக்கும்.

**த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன்**

ஒன்றுபட்ட அ.தி.மு.க. ஆட்சியாளர்களுக்கு பலம் சேர்க்கிறது.

எனவே மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஆளும் அரசு மாநில அளவில் ஆட்சி, அதிகாரத்தில் சிரத்தன்மையோடு செயற்பட்டு தமிழக மக்கள் நலன்சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மத்திய அரசுக்கு வலுவாக குரல் கொடுத்து தமிழக நலன் காக்க வேண்டும். இவ்வாறு தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

**அன்புமணி ராமதாஸ்**

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்று தமிழக மக்களும், விவசாயிகளும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இந்த கோரிக்கையை நிறைவேற்ற மத்திய அரசு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்ட எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தமிழக மக்கள் யாரிடமா வது கருத்து கேட்டாரா? சட்ட மன்றத்தில் விவாதித்தாரா? அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தை கூட்டி கருத்து கேட்டாரா? இந்த பிரச்சினையில் தமிழக அரசு மத்திய அரசுக்கு அடிபணிந்து தமிழக மக்களுக்கு துரோகம் இழைத்துள்ளது.

அ.தி.மு.க.வின் இரு அணிகள் இணைந்ததால் தமிழக மக்களுக்கு எந்த பயனும் இல்லை என அவர் தெரிவித்தார். (3-8)

# ஜெயலலிதா நினைவிடத்தில் தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள்

## 18 பேர் திடீர் தியானம்



(சென்னை)

சென்னை மெரீனாவில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 18 பேர் திடீரென தியானத்தில் ஈடுபட்டனர்.

ஓ.பி.எஸ்மற்றும்இ.பி.எஸ் அணிகள் இணைந்த அதே சமயத்தில் சென்னை அடையாரில் உள்ள டிடிவி தினகரன் இல்லத்தில் தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனை பல மணி நேரம் நீடித்தது.

தினகரனுடன் ஆலோசனை நடத்திய பிறகு அவர்கள் மெரீனா கடற்கரையில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்திற்கு சென்றனர். ஜெயலலிதா நினைவிடத்திற்கு சுமார் 18 எம்.எல்.ஏக்கள் வருகை புரிந்தனர். அவர்கள் கூட்டாக தியானத்தில் ஈடுபட்டனர்.

சில நிமிடங்கள் வரை இந்த தியானம் நீடித்தது. பின்னர் ஜெயலலிதா நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

ஜெயலலிதா நினைவிடத்திற்கு தினகரனும் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் வரவில்லை. தினகரன் தனது டுவிட்டர் தளத்தில், காய்ச்சல் மற்றும் தொண்டை வலி உள்ளதால் வைத்தியரின் ஆலோசனைப்படி வீட்டில் ஓய்வு எடுத்து வருகிறேன்.

வரும் 23 ஆம் திகதி உங்களை சந்திக்கிறேன்என்று தெரிவித்து இருந்தார். (3-8)

# வெளிநாட்டுத் தூதரகங்களின் அருகே ரொக்கெட் வீசித் தாக்குதல்

(காபூல்)

ஆப்கானிஸ்தானுக்கு படைகளை அனுப்ப அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ள நிலையில் காபூல் நகரின் மையப்பகுதியில் வெளிநாட்டு தூதரங்களின் அருகே ரொக்கெட் வீசி தாக்குதல் நடத்தினர்.

ஜனாதிபதியின் மாளிகைக்கு மிக அருகாமையில் உள்ள வீதியில் நேற்று முன்தினம் பின்னிரவு ஒரு ரொக்கெட் விழுந்து வெடித்தது.

இந்த சம்பவத்தில் ஏற்பட்ட பாதிப்பு தொடர்பான உடனடி தகவல் ஏதும் வெளியாகவில்லை. ரொக்கெட் விழுந்து வெடித்ததும் அருகாமையில் உள்ள அமெரிக்க தூதரக கட்டடத்தில் இருந்த அபாயச் சங்கு ஒலித்ததால் பின்னிரவு வேளையில் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

தலிபான்களை ஒடுக்குவதற்காக ஆப்கானிஸ்தானுக்கு மேலும் நான்காயிரம் துருப்புகளை அனுப்புமாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் இந்த ரொக்கெட் தாக்குதல் நடந்துள்ளது. குறிப்பிடத்தக்கது.

இந்த தாக்குதலுக்கு உள்நாட்டு தீவிரவாத இயக்கங்களான ஐ.எஸ். மற்றும் தலிபான்கள் இன்னும் பொறுப்பேற்கவில்லை. (3-8)

# ஆளுநரைச் சந்தித்த தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள்

## முதலமைச்சரை மாற்றக்கோரி கடிதம்

(சென்னை)

ஆளுநர் வித்யாசாகர் ராவுடன் தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 19 பேர் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின் போது முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை நீக்கக்கோரி கடிதம் அளித்தனர்.

ஆளுநரை சந்திப்பதற்கு முன்பாக தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்கள் சென்னை சேத் பட்டில் உள்ள தனியார் ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

பின்னர் அங்கிருந்து அடையாறில் உள்ள தினகரன் இல்லத்திற்கு சென்று ஆலோசனை நடத்தினர். இந்நிலையில், நேற்றுக் காலை சரியாக 10 மணிக்கு தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்கள் ஆளுநர் மாளிகைக்குள் சென்றனர். ஆளுநர் வித்யாசாகர் ராவுடனான இந்த சந்திப்பு சுமார் 15 நிமிடங்கள் வரை நீடித்ததாக தெரி கிறது.

அப்போது ஆளுநரிடம் தங்களது கோரிக்கை கடிதத்தை அளித்தனர்.

எம்.எல்.ஏ. ஜக்கையன் கூறுகையில்,

ஆட்சியை கவிழ்ப்பது எங்கள் நோக்கம் அல்ல. தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

எங்கள் பலம் இப்போது தெரியவரும் என்று கூறினார்.

இதற்கிடையே, பன்னீர் செல்வம் ஆதரவு அதிமுக எம்.பியான மைத்ரேயன் ஆளுநரை சந்திப்பதற்காக ஆளுநர் மாளிகைக்குள் சென்றார். (8-3)

# துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்ற ஓ.பன்னீர்செல்வத்துக்கு மோடி வாழ்த்து



(டில்லி)

தமிழக துணை முதல்வராக பொறுப்பேற்ற ஓ.பன்னீர்செல்வத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அதிமுகவின் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அணிகள் நேற்று முன்தினம் இணைந்தன. இதனையடுத்து அமைச்சரவையில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. பன்னீர் செல்வத்துக்கு துணை முதல்வர், நிதி அமைச்சர் பதவியும், பாண்டியராஜனுக்கு தொல்லியல் மற்றும் தமிழ் வளர்ச்சி துறையும் வழங்கப்பட்டது.

நேற்று முன்தினம்மாலை 4.30 மணியளவில் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் பாண்டியராஜன் இருவருக்கும் தமிழக ஆளுநர் பதவி பிரமாணம் செய்து வைத்தார். பின்னர் இருவரும் தலைமைச் செயலகத்தில் வந்து பொறுப்பேற்று கொண்டனர்.

இந்நிலையில், துணை முதல்வராக பொறுப்பேற்ற ஓ.பன்னீர்செல்வத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் தனது டுவிட்டர் பக்கத்தில், "நேற்று முன்தினம் பொறுப்பேற்றுள்ள பன்னீர் செல்வம் உள்ளிட்டோருக்கு வாழ்த்துக்கள்.

தமிழ்நாடு வருங்காலத்தில் நல்ல முன்னேற்றம் அடையும் என்று நம்புகிறேன். தமிழகத்தின் வளர்ச்சிக்காக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி மற்றும் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வத்துக்கு மத்திய அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.(3-8)

# நடந்தது இணைப்பே இல்லை

## பதவியைத் தக்கவைப்பதற்கான வணிக ஒப்பந்தம்

## டி.டி.வி.தினகரன் ஆவேசம்

(சென்னை)

அ.தி.மு.க.வின் இரு அணிகளும் இணைந்துள்ள நிலையில் அக்கட்சியின் துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன், ஓ.பன்னீர் செல்வம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி மீது காட்டமான கருத்துக்களை தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இரு அணிகள் இணைப்பால் அதிருப்தியில் உள்ள டி.டி.வி. தினகரன் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறியிருப்பதாவது,

தற்போது நடந்திருப்பது இணைப்பே அல்ல. சில நபர்களின் சுயலாபத்திற்காகவும் பதவி ஆசைக்காகவும் பதவியை காப்பாற்றிக் கொள்வதற்குமான வணிக ரீதியான உடன்படிக்கை. இந்த உடன்படிக்கை எவ்வளவு நாள் நீடிக்கும் என்பது எல்லாம் வல்ல இறைவனுக்கே வெளிச்சம். 1989ல் தொண்டர்களின் விருப்பத்திற்கு இணங்க, ஜெயலலிதாவை பொதுச் செயலாளராக ஏற்றுக்கொண்டு, அவர் தலைமையில் ஒன்றிணைந்தார்கள். தற்போது, இவர்களாலேயே ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுச் செயலாளரை நீக்குவோம் என்ற அறிவிப்போடு ஏற்பட்டு ள்ள உடன்படிக்கை தொண்டனால் ஜீரணிக்க முடியாத துரோகம்.

ஜெயலலிதாவின் மறைவுக்கு பின் பன்னீர்செல்வத்தையும் பின் பழனிச்சாமியையும் முதல்வராக்கிய சசிகலாவுக்கு துரோகம் செய்த நபர்களை கழகத்தொண்டர்கள் மட்டுமல்லாமல் பொது மக்களும் மன்னிக்கமாட்டார்கள்.

இரட்டை இலை முடங்குவதற்கு காரணமான பன்னீரோடு கைகோர்க்கும் அளவிற்கு சிலரது பதவி வெறி கண்ணை மறைக்கிறதென்றால் எப்படி தொண்டர்கள் ஏற்று கொள்வார்கள். இந்த துரோகிகளால் எப்படி இரட்டை இலையை மீட்க முடியும்?

ஊழல் ஆட்சி நடைபெறுவதாக சொன்ன பன்னீர் செல்வத்தோடு எப்படி தான் இவர்களால் இன்றைக்கு கைகோர்க்க முடிகிறதோ? இந்த துரோகிகளால் ஏற்பட்டுள்ள களங்கத்தை போக்குவதற்காகவே, கோடான கோடி கழக தொண்டர்களின் கோரிக்கையை ஏற்று எனது அரசியல் பயணம் தொடரும்.

துரோகங்கள் ஒரு போதும் வென்றதாக வரலாறு இல்லை! துரோகத்தை வேரறுப்போம்! கழகத்தை காப்போம்! இவ்வாறு டிடிவி.தினகரன் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## புதிர்! புதிர்! புதிர்!



ஒரு ஊரில் இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அவர்களில் ஒருவன் பரம ஏழை. மற்றொருவன் பணக்காரன். பணக்காரனிடம் அவன் தம்பியாகிய ஏழை ஒரு பசுவைக் கேட்டான். அண்ணன் பசுவைக் கொடுப்பதற்கு முன் "என் நிலத்தில் நீ தினமும் வந்து ஓராண்டு உழைக்க வேண்டும்!" என்றான்.

அவனும் ஒத்துக் கொண்டான். பசுவை வாங்கிக் கொண்ட இளையவன், தான் ஒத்துக் கொண்டது போல் அண்ணன் நிலத்தில் ஓராண்டு முழுவதும் உழைத்தான். ஓராண்டு முடிந்தது. தம்பி அண்ணனிடம் வேலைக்குச் செல்லவில்லை. மறுநாளே பசுவை திருப்பிக் கேட்டான் அண்ணன். "ஓராண்டு உன் நிலத்தில் உழைத்தேன் அல்லவா பசு எனக்குத்தான்!" என்றான்.

மூத்தவன், "அதெப்படி முடியும்? ஓராண்டு காலம் நீ என் பசுவிடம் பால் கறந்து பலனை அனுபவித்தாய் அல்லவா? அதனால் இரண்டிற்கும் சரியாகி விட்டது!" என்றான்.

இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இருவரும் ஒரு பிரபுவிடம் சென்றனர். வழக்கை விசாரித்த பிரபு, அவர்கள் இருவருக்கும் மூன்று புதிர்களைக் கொடுத்து, "இதற்குச் சரியான பதில்களை யார் சொல்கிறீர்களோ அவர்களுக்குத்தான் பசு!" என்று கூறி புதிரைச் சொன்னார். "முதல் புதிர். மனிதனுடைய வயிற்றை நிரப்புவது எது? இரண்டாவது புதிர். மனிதனுக்கு மிக மகிழ்ச்சியைத் தருவது எது? மூன்றாவது புதிர். அதிக விரைவாகச் செல்வது எது? இந்த மூன்று புதிர்களுக்கும் நாளை விடை கூறுங்கள்!" என்றார்.

இருவரும் வீட்டிற்கு வந்து மூளையைக் குழப்பி சிந்தித்தனர்.

மறுநாள் காலை பிரபுவைச் சந்தித்தனர். மூத்தவனைப் பிரபு அழைத்து, "என் புதிருக்கு விடை சொல்!" என்றார். "மேன்மை தங்கிய பிரபு அவர்களே! ஒரு மனிதனுடைய வயிற்றை நிரப்புவது எது என்று கேட்டீர்கள். அதற்குச் சரியான விடை பன்றிக்கறி. கொழுத்த பன்றிக் கறியைச் சாப்பிட்டால் வயிறு நிரம்பும். பல மணி நேரம் பசிக்காது. "இரண்டாவது, மனிதனுக்கு மகிழ்ச்சியைத் தருவது எது என்று கேட்டீர்கள். அதற்கு விடை பணம். பணம் பெட்டி நிறைய இருக்கும் போது எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது தெரியுமா? பணம் குறையக் குறைய மகிழ்ச்சியும் குறையும்.

"மூன்றாவதாக, அதி விரைவாகச் செல்வது எது என்று கேட்டீர்கள். அதற்குச் சரியான விடை வேட்டை நாய். வேட்டை நாய்கள் விரைவாக ஓடி முயல்களைக்கூட பிடித்து விடுகின்றனவே!" என்று சொல்லிவிட்டு பிரபுவைப் பார்த்து, "பசு எனக்குத் தானே!" என்று கேட்டான் "முட்டாளே! நீ சொன்ன அனைத்தும் அபத்தமான பதில்கள்!" என்றார் பிரபு. இளையவன் அழைக்கப்பட்டான்.

"நம் வயிற்றை நிரப்புவது பூமி. பூமித் தாயிடம்தான் நாம் உண்ணும் தானியங்களும் கிழங்குகளும் கிடைக்கின்றன. அந்த உணவால் தான் விலங்குகளும் பறவைகளும் வாழ்கின்றன. இரண்டாவதாக ஒரு மனிதனுக்கு அதிக மகிழ்ச்சி தருவது தூக்கம். தூக்கத்திற்காக விலையுயர்ந்த செல்வத்தையும் மனிதன் விட்டுவிடுவான்" மூன்றாவது, அதி விரைவாகச் செல்வது நமது சிந்தனை ஓட்டம். அது நாம் விரும்பிய போது விரும்பிய இடத்தில் கொண்டு போய்ச்சேர்க்கும்! "இவையே சரியான விடைகள். இந்தப் பசு உனக்கே !" பசுவைக் கொடுத்தபின் பிரபு கேட்டார். "இந்தப் புதிர்களுக்கு உனக்கு விடை கூறியது யார்?" என்றார். "என் மகள் மரூஸ்யா!" அவள் என்ன அவ்வளவு விவேகியா?" ஏதோ கொஞ்சம்! "என் அளவிற்கு அவளுக்கு அறிவு இருக்கிறதா? என்பதை பரீட்சை செய்து பார்த்து விடுகிறேன்!" பிரபு பத்து அவித்த முட்டைகளை அவனிடம் கொடுத்து, "இதோ இந்த பத்து அவித்த முட்டைகளையும் உன் மகளிடம் கொடுத்து, ஒரு கோழியினால் அடைகாக்க வைத்து, பத்துக் குஞ்சுகளை ஓர் இரவிற்குள் பொரிக்க வைத்து அதே குஞ்சுகளை அதே இரவில் கோழியாக்கி, முட்டை போடவைத்து, பத்து முட்டைகளில் மூன்றை எடுத்து அடையாக்கி நாளைக் காலை உணவிற்கு எனக்குக் கொண்டுவா!" என்றார்.

தன் மகள் மரூஸ்யாவிடம் சென்று அதை அப்படியே ஒப்புவித்தார் அவளது தந்தை. தன் மகள் இந்தப் புதிருக்கு விடை எப்படிச் சொல்லப்போகிறாள் என்று கவலைப்பட்டார். ஆனால், அவளோ எதிர் புதிர் போட்டாள். தன் தந்தையிடம் வேக வைத்த துவரைகள் அடங்கிய ஒரு பானையைக் கொடுத்து, "இதில் உள்ள துவரையை நிலத்தில் விதைத்து, முற்றியவுடன் அறுத்து எனது கோழிக் குஞ்சுகளுக்கு உணவாக தயாராக வைக்கும்படி கூறுங்கள்!" என்றாள். அவளுடைய தந்தையும் அவ்வாறே பிரபுவிடம் சென்று சொன்னார். துவரையைப் பார்த்த பிரபு அவற்றை நாய்க்குப் போட்டு விட்டு, சணல் தண்டு ஒன்றைக் கொடுத்து, "இதை ஊற வைத்து காயவைத்து நூறு ஜெகமுள்ள துணி தயாரிக்கச் சொல்!" என்றார். ஆனால், அவளோ அதற்குப் பதிலாக மிக மெல்லிய குச்சி ஒன்றைக் கொடுத்து, "இதிலிருந்து நூலை நூற்பதற்கு ஒரு ராட்டினமும், கதிரும் செய்து தரும்படிக் கூறுங்கள்!" என்றாள்.

அவளது அறிவின் ஆழத்தைக் கண்ட பிரபு, "உன் மகளை நாளை என்னை வந்து பார்க்கச் சொல். ஆனால், அவள் நடக்கவோ, சவாரி செய்யவோ கூடாது, வெறுங்காலுடனோ, செருப்புடனோ வரக்கூடாது. பரிசுடனோ, பரிசின்றியோ வரக்கூடாது. இது கடுமையான உத்தரவு!" என்றார்.

மறுநாள் பனிச்சறுக்கு வண்டியில் வெள்ளாட்டைப் பூட்டி, ஒரு காலில் மட்டும் செருப்பு அணிந்து, முயல் ஒன்றையும், சிட்டுக்குருவி ஒன்றையும் தெரியாமல் எடுத்துச் சென்றாள் மரூஸ்யா. அவள் மிகுந்த புத்திசாலித்தனத்துடன் வருவதைக் கண்ட பிரபு, அவள் மீது நாய்களை ஏவினார். பதிலுக்கு இவள் முயலை வெளியே விட, நாய்கள் முயலைத் துரத்தின. "இதோ உங்களுக்கு ஒரு சிறிய பரிசு!" என்று சிட்டுக்குருவியைக் கொடுத்தாள். அது அவரது கையில் சிக்காமல் பறந்துவிட்டது. தான் சொல்லியபடியே வந்துவிட்ட அவளை நினைத்துப் பெருமைப்பட்டார் பிரபு. அப்போது இருவர் வழக்கு ஒன்றைக் கொண்டு வந்தனர்.

"நாங்கள் இருவரும் அடுத்தடுத்து இரு குதிரைகளை ஓர் இரவி[illegible] கட்டி இருந்தோம். இரண்டு குதிரைகளும் அன்றிரவே குட்டிகளை ஈன்றன. அவனுடைய குதிரையின் குட்டி இறந்துவிட்டது. என்னுடைய குட்டியைப் பார்த்து அவனுடைய குதிரைக் குட்டி என்கிறான்!" என்றான் ஒருவன். அடுத்தவனைக் கேட்டதற்கு அவனும் அவ்வாறே பதில் சொன்னான்.

பிரபு இரு குதிரைகளையும் தனித்தனியே கட்டச் சொல்லி, குட்டியை விடச்சொன்னார். குட்டி இரு குதிரைகளிடமும் செல்லாமல் தனியே ஓடிவிட்டது. அந்தத் தீர்ப்பை அவர் மரூஸ்யாவிடம் கேட்டார். மரூஸ்யா குட்டியைக் கட்டச் சொல்லி குதிரைகளை அவிழ்த்துவிடும்படி கூறினாள். அவ்வாறே செய்தனர். தாய்க்குதிரை தன் குட்டியைத் தேடிக்கொண்டு ஓடிவந்தது.

பிரபுவின் தலைக்கனம் குறைந்தது. தன்னைவிட மரூஸ்யா புத்திசாலி என்று ஒப்புக்கொண்டார். அவளுக்கு வெகுமதியளித்துப் பாராட்டினார்.

நீதி: வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.

## 23 08.2017 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1305 -ஸ்கொட்லாந்தின் நாட்டுப்பற்றாளர் வில்லியம் வொலஸ், இங்கிலாந்தின் முதலாம் எட்வேர்ட் மன்னனால் நாட்டுத்துரோத்துக்காகக் குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.
- 1541 - பிரெஞ்சு நாடுகாண் பயணி ஜாக் கார்ட்டியேர் கனடாவின் கியூபெக் நகரை அடைந்தார்.
- 1555 - நெதர்லாந்தில் கால்வினிஸ்துகளுக்கு முழுமையான உரைமைகள் வழங்கப்பட்டன.
- 1784 - மேற்கு வட கரோலினா (தற்போது கிழக்கு டென்னசி) பிராங்கிளின் என்ற பெயரில் தனி நாடாக அறிவித்தது. இது ஐக்கிய அமெரிக்காவால் ஏற்கப்படவில்லை.
- 1821 - மெக்சிகோ, ஸ்பெயினிடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1839 - சீனாவின் கிங் சீனர்களுடன் போரிடுவதற்காக ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கைக் கைப்பற்றியது.
- 1914 - முதலாம் உலகப் போர்: ஜப்பான் ஜேர்மனியுடன் போரை அறிவித்தது.
- 1929 - பாலஸ்தீனத்தில் அரபுக்கள் யூதர்களைத் தாக்கி அவர்களில் 133 பேரைக் கொன்றனர்.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியும் சோவியத் ஒன்றியமும் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தில் கைச்சாதிட்டனர். பின்லாந்து, உக்ரைன், போலந்து ஆகியவற்றை தமக்கிடையே பகிர்வது என்றும் இரகசிய முடிவெடுக்கப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியினர் லண்டன் மீது குண்டு வீச்சை ஆரம்பித்தனர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் போர் விமானம் ஒன்று இங்கிலாந்தில் பாடசாலை ஒன்றின் மேல் வீழ்ந்ததில் 61 பேர் கொல்லப்பட்டனர்.
- 1948 - ஏ.கே.செட்டியார் தயாரித்த காந்தி பற்றிய முதல் வரலாற்றுத் திரைப்படம் தமிழிலும் தெலுங்கிலும் வெளியிடப்பட்டன.

பிறப்புகள்

- 1914-டி.எஸ்.பாலையா, தமிழ்த் திரைப்பட நடிகர் (இ. 1972)
- 1946-இரா.வை.கனகரத்தினம், இலங்கைத் தமிழ் பேராசிரியர், ஆய்வாளர், எழுத்தாளர் (இ. 2016)
- 1956-மோகன், இந்தியத் திரைப்பட நடிகர்

இறப்புகள்

- 1951-வ. ரா., தமிழக எழுத்தாளர் (பி. 1889)
- 1976-மன்னார்குடி பரமசிவம் பிள்ளை, தமிழக நாதசுவரக் கலைஞர் (பி. 1929)
- 1984-ராசிக் பரீத், இலங்கை அரசியல்வாதி (பி. 1893)
- 2000-ப.ரங்கராஜன் குமாரமங்கலம் இந்திய அரசியல்வாதி. (பி. 1952)
- 2010-இரா. சாரங்கபாணி, தமிழறிஞர் (பி. 1925)
- 2011-ஜே. சி. டேனியல், இந்திய இயற்கையியலாளர் (பி. 1927)

சிறப்பு நாள்

- அடிமை வணிகத்தையும் அதன் ஒழிப்பையும் நினைவூட்டும் பன்னாட்டு நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் | சுன்னாகம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 120 | 140 | 160 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 85 | 100 | 100 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 250 | 250 | 300 | 280 | 300 |
| தக்காளி | 160 | 200 | 120 | 140 | 160 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 60 | 80 | 80 | 80 | 80 |
| கோவா | 100 | 120 | 80 | 120 | 100 | 100 | 100 |
| கரட் | 100 | 250 | 140 | 160 | 160 | 160 | 200 |
| பூசணி | 60 | 100 | 40 | 60 | 50 | 60 | 60 |
| புடோல் | 50 | 100 | 50 | 100 | 100 , | 60 | 60 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 100 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 200 | 140 | 200 | 200 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 120. | 140 | 120 | 140 | 130 |
| பாகற்காய் | 200 | 300 | 150 | 100 | 200 | 180 | 240 |
| வெண்டிக்காய் | 50 | 100 | 70 | 100 | 80 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 140 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 80 | 100 | 80 | 60 | 60 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 120 | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 40 | 60 | 60 | 80 | 50 |
| கறிமிளகாய் | 120 | 200 | 100 | 150 | 120 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 80 | 40 | 40 | 50 | 60 | 50 | 60 |
| போஞ்சி | 180 | 200 | 100 | 200 | 200 | 120 | 180 |
| கத்தரிதம்புள்ள | 150 | 100 | 80 | 120 | 140 | 120 | 120 |
| கீரை - 1பிடி | 50 | 20 | 30 | 30 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 | 60 | 200 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 65 | 50-70 | 60 | 70 |
| இராசவள்ளி | 200 | 200 | — | — | — | — | — |
| வெங்காயப்பூ | 180 | 200 | 150 | 200 | 200 | 200 | — |
| முள்ளங்கி | 80 | 100 | 30 | 80 | 60 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 10 | 40 | 40 | 25 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 50 | — | 80 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சியும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பனை அபிவிருத்தி சபைத் தலைவரின் ஏற்பாட்டில் ''பனை வளத்தின் மகிமையை உலகறியச் செய்வோம்'' சர்வதேச கருத்தரங்கும் கண்காட்சியும் நாளை மறுதினம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு காலிமுகத்திடல் ஹோட்டலின் கிராண்ட் போல்ட்ரூம் மற்றும் காலி முகத்திடல் மைதானத்தில் இடம்பெறும் என பனை அபிவிருத்திச் சபை பொது முகாமையாளர் பா. சுதாகரன் அறிவித்துள்ளார். இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு , மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி. எம். சுவாமிநாதன் , கௌரவ விருந்தினராக புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள் குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லா, சிறப்பு விருந்தினர்களாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பி. சுரேஸ், புனர்வாழ்வு வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சின் செயலாளர் சாந்தி நாவுக்கரசன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)



கதிர்காமக்கந்தன் ஆலயக் குருமார்களுடன் சந்நிதியான் ஆச்சிரமச் சுவாமிகள் மோகனதாஸ் குழுவினரும் மாணிக்க கங்கையில் தீர்த்தமாடிவரும் காட்சி...

# ஆலோசிக்காது எடுத்த முடிவால் பாரிய விளைவுகள் ஏற்படவாய்ப்பு

## கெமுனு விஜயரத்ன எச்சரிக்கை

மோட்டார் சைக்கிள் வாகன இறக்குமதிக்கு அரசாங்கம் வரி நீக்கம் செய்தமை காலோசிதமான செயலல்ல. பொலிஸ் போக்குவரத்து அமைச்சு, சுற்றாடல் அமைச்சு என எந்த தரப்பினரையும் ஆலோசிக்காது அரசாங்கம் குறித்த முடிவை எடுத்துள்ளமை பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன எச்சரித்துள்ளார். (இ-7)

# மரண அறிவித்தல்

## இராசேந்திரம் - திலகவதி



யாழ். உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் - திலகவதி 21.08.2017 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செல்லையா-செல்லமுத்து (சிங்கப்பூர்) தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான நவரட்ணம், பஞ்சரட்ணம், சோதிரட்ணம் யோகரட்ணம், துரைரட்ணம், தியாகரட்ணம், பாலரட்ணம், திரவியம் ஆகியோரின் உடன் பிறப்பும், அமரர் வைத்தியர் கதிர்காமு இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், கனடா வாழ்-சத்திய தர்சினியின் அருமைத் தாயாரும், பாக்கியலிங்கத்தின் அன்பு மாமியும், பிருந்தன், விதுரனின் அருமைப் பேர்த்தியாரும் ஆவார். இவரது ஈமக் கிரியைகள் 24.08.2017 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும். (200)

தர்சினிஹால் குடும்பத்தினர்.
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1169

**வனிதா**




**கல்யாணி**




**நிலக்ஷனா**




**மயூரன்**




**அபிராம்**




**ரதீஸ்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யப் போர் விமானங்கள் குண்டுமழை

# ஐ.எஸ்.தீவிரவாதிகள் 200 பேர் கொன்று குவிப்பு



(டமாஸ்கஸ்)

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆயுதகிடங்குகளை குறிவைத்து ரஷ்ய போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன.

இதில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 200 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரரும் ஐ.எஸ். தீவிரவாதிகளை அடியோடு ஒழிக்க அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகள் அங்கு தரை வழியாகவும், வான் வழியாகவும் தாக்குதலை நடத்திவருகிறது.

இந்த நிலையில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள டெயிர் அல்-ஜோர் நகரில் ரஷ்ய படை அதிபயங்கர வான் தாக்குதலை நடத்தியது.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகள், ஆயுதகிடங்குகள் மற்றும் பதுங்கு குழிகள் ஆகியவற்றை குறிவைத்து ரஷ்ய போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன.

இதில் ஐ.எஸ். தீவிரவாதிகள் 200 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். மேலும் அவர்களது ஆயுதக்கிடங்குகள், வாகனங்கள் உள்ளிட்டவை நிர்மூலமாக்கப்பட்டன. இந்த தகவலை ரஷ்ய இராணுவ அமைச்சகம் தெரிவித்து இருப்பதாக ரஷ்ய செய்தி நிறுவனம் குறிப்பிட்டு உள்ளது. இருப்பினும் இந்த தாக்குதல் எப்போது நடத்தப்பட்டது என்ற தகவல் தெரிவிக்கப்படவில்லை. (3-8)

# தீவிரவாதிகளின் புகலிடமாக பாக். திகழ்வதை இனியும் பொறுத்துக் கொள்ளமாட்டோம்

## ட்ரம்ப் ஆவேசம்

(வோஷிங்டன்)

தீவிரவாத அமைப்புகளின் சொர்க்க பூமியாக பாகிஸ்தான் திகழ்வதை இனியும் பொறுத்து கொள்ளமாட்டோம் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆப்கானிஸ்தான் மற்றும் தெற்கு ஆசிய நாடுகள் தொடர்பான தங்களது கொள்கைகள் குறித்து அந்நாட்டு தொலைக்காட்சியில் டிரம்ப் உரையாற்றினார்.

அந்த உரையில் ஆப்கானிஸ்தானில் உள்ள தங்கள் நாட்டு படைகளை வாபஸ் பெறுவது, இந்தியாவுடனான உறவு, பாகிஸ்தான் தீவிரவாத அமைப்புகளுக்கு இடம் கொடுப்பது உள்ளிட்ட விவகாரம் குறித்து பேசினார்.

ட்ரம்ப் உரையில் பேசியதாவது.

பாகிஸ்தானுக்கு கோடிக்கணக்கான டொலர்கள் அமெரிக்கா நிதியுதவியாக அளிக்கிறது. அதேநேரம், நாம் எதிர்த்துப் போரிட்டுவரும் தீவிரவாதிகளின் புகலிடமாக அந்நாடு விளங்குகிறது. தலிபான் உள்ளிட்ட தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தான் சொர்க்கபூமியாக திகழ்ந்து கொண்டிருந்ததால், எங்களால் நீண்டகாலம் பொறுமையாக இருக்க முடியாது.

பாகிஸ்தானின் தற்போதைய நிலை உடனடியாக மாற வேண்டும். இல்லையென்றால், தீவிரவாதிகளுக்கு ஆதரவளித்ததற்கான விலையை பாகிஸ்தான் கொடுக்க வேண்டி வரும். உள்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து அமைதிப் பாதைக்கு பாகிஸ் தான் திரும்பவேண்டிய நேரம் இது.

ஆப்கானிஸ்தானில் நாங்கள் மேற்கொண்டு வரும் வளர்ச்சி நடவடிக்கைகளில் கூட்டு சேர்ந்தால் பாகிஸ்தானுக்கு அதிக பலன் பெற முடியும்.

இந்தியாவுடனான உறவுகளை மேம்படுத்த அமெரிக்கா விரும்புகிறது. போர் அச்சுறுத்தல் உள்ள பகுதிகளில் அமைதியை நிலைநாட்ட இந்தியா நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

போரால் பாதிக்கப் பட்டுள்ள ஆப்கானிஸ்தானை பொருளாதார ரீதியில் உயர்த்த இந்தியா உதவ வேண்டும். (3-8)

# இத்தாலியில் நிலநடுக்கம் ஒருவர் பலி; 25 பேர் காயம்

(ரோம்)

இத்தாலி நாட்டுக்கு அருகே உள்ள சுற்றுலா தலமான இஸ்சியா தீவில் நேற்று முன்தினம் 4.0 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் இடிபாடுகளில் சிக்கி ஒருவர் பலியானார். 25 பேர் காயம் அடைந்தனர்.

இத்தாலியில் உள்ள இஸ்சியா தீவில் நேற்று முன்தினம் நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் அங்குள்ள கடற்கரை நகரமான நேபில்ஸ் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகள் குலுங்கின. இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

இதற்கிடையே வீடுகள் மற்றும் கட்டடங்கள் இடிந்தன. இடிபாடுகளில் சிக்கி ஒருவர் பலியானார். 25 பேர் காயம் அடைந்தனர். இங்கு 4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நில நடுக்கத்தில் இஸ்சியா தீவின் புராதன கிறிஸ்தவ தேவாலயம் உட்பட பல கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாயின. கேசமிக்சி போலா நகரில் பெரும்பாலான கட்டடங்கள் அடியோடு இடிந்து நாசமாயின. மீட்பு பணி நடைபெற்று வருகிறது. (3-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் நன்மை செய்யாவிட்டாலும் பரவாயில்லை
தீமை செய்வதை நிறுத்துங்கள்.
- டால்ஸ்டாய்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நகை அடைவை ஊக்குவிக்கும் நாசச் செயல் கண்டீரோ

தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமல்ல தமிழ் அரச அதிகாரிகளும் தமிழ் இனம் என்ற உணர்வோடு செயற்பட வேண்டும். அப்போது தான் தமிழினத்தின் உயர்வு என்பது சாத்திய மாகும்.

தமிழ் மக்கள் ஒரு விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கின்ற அளவில் உயர்வு பெற்றதற்கு காரணம் உயர் பதவிகளில் இருந்த தமிழ் அதிகாரிகள் தங்கள் இனத்துக்கு நடக்கின்ற அநீதி கண்டு கொதித்தமைதான்.

நாட்டின் எப்பாகத்தில் உயர்பதவி வகித்தாலும் அவர்கள் தமிழர்களாக தங்களை அடையாளப்படுத்தினர்.

தமிழினத்துக்கு நடக்கும் கெடுதிகளை; அநியாயங்களை அம்பலப்படுத்தினர். இதனால் தமிழ் அரசியல்வாதிகளும் தமிழ்ப்பற்றாளர்களும் விழிப்படைந்தனர்.

தமிழர்களுக்கு எங்கு கெடுதி நடந்தாலும் அங்கு தமிழர்களிடையே ஒற்றுமை ஏற்பட்டது. ...னால் இன்று நிலை அதுவன்று.

உயர்பதவிகளில் இருக்கும் அரச அதிகாரிகள் எந்தளவுக்கு பெரும்பான்மை சார்ந்தவர்களுக்கு விசுவாசமாக இருக்க முடியுமோ; எந்தளவுக்கு பெரும்பான்மை இனத்தின் செல்வாக்கைப் பெற முடியுமோ அந்தளவுக்கு தங்களைத் தாழ்த்தி தங்கள் இனத்தைப் பற்றி இம்மியும் சிந்திக்காமல் செயற்படுவதற்குத் தயாராகிவிட்டனர்.

இஃது அனைத்துத் தமிழ் அரசியல்வாதிகளுக்கும் பொருந்தாதாயினும் பெரும்பாலான தமிழ் உயர் அதிகாரிகள் தங்களால் தமிழினத்துக்குச் செய்யக்கூடிய உதவியைக் கூடச் செய்யாமல் தவிர்த்து வருகின்றனர் என்பது நிறுதிட்டமான உண்மை.

இதுவும் எங்கள் இனத்தின் இன்றைய நிலைமைக்குக் காரணம் எனலாம்.

எதுவாயினும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகத்தில் இயங்கும் நிதி நிறுவனங்...ள் செய்ய வேண்டிய சேவைகள் வேறாக இருக்க,

அவர்கள் செய்வதெல்லாம் தமிழர்களை; அவர்களின் பொருளாதாரத்தை நசுக்குவதாகவே இருக்கிறது.

அதிலும் குறிப்பாக நகை அடைவு தொடர்பில் வட மாகாணத்தில் இயங்கும் பெரும்பாலான நிதி நிறுவனங்கள் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டு நகை அடைவுகளை ஊக்குவிப்பதைக் காண முடிகின்றது.

எங்கு பார்த்தாலும் நகை அடைவு வையுங்கள், எங்களிடம் உங்கள் நகைகளைக் கொண்டு வாருங்கள், உடன் பணத்தைப் பெறுங்கள் என்பதான விளம்பரங்கள் பரவலாக வெளியிடப்படுகின்றன.

சில இடங்களில் ஒலிபெருக்கி மூலமாக நகைகளை அடைவு வைக்குமாறு விளம்பரம் செய்வதையும் காணமுடிகின்றது.

சிறுகச் சிறுக சேர்த்து நகைகளை ஒரு சொத்தாக - தங்களின் பிள்ளைகளின் சீதனமாக எங்கள் மக்கள் பார்த்திருக்க, அதற்கும் உலை வைக்கும் வகையில் வடபுலத்து நிதி நிறுவனங்கள் அளவுக்கதிகமாக நகை அடைவை ஊக்குவிக்கும் விளம்பரங்களைச் செய்கின்றன.

தென்னை உற்பத்திக்கு, விவசாயச் செய்கைக்கு, மாடு வளர்ப்புக்கு, மாதுளைச் செய்கைக்கு, இறால் வளர்ப்புக்கு, கடற்றொழில் முயற்சிக்கு என்று கடன் கொடுத்து எங்கள் பிரதேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டியவர்கள் வீடு வீடாகச் சென்று நகை அடைவுக்குத் துண்டுபிரசுரம் கொடுக்கின்றனர் என்றால், எங்கள் இனம் எப்போது உய்ய முடியும்.

ஆகவே நிதிநிறுவனங்களில் பணியாற்றும் எங்கள் தமிழ் அதிகாரிகள் தமிழ் மக்களின் நலனை மையப்படுத்தி கடன் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும். அதுவே அனைவருக்கும் நன்மை தரும்.

# ஸ்திரமற்ற நிலையில் நாட்டின் பொதுச்சேவை நாமல் ராஜபக்ஷ விசனம்

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் தேவைகளுக்கு ஏற்ற வகையில் செயற்படாத அரச அதிகாரிகளுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே நாட்டின் பொதுச்சேவை ஸ்திரமற்ற நிலையை அடைந்துள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் மக்கள் சந்திப்பு நேற்றுமுன்தினம் குருநாகல் பண்டுவஸ்நுவரவில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கல்வித துறையில் உரிய முன்னேற்றத்தைக் காணமுடியாதுள்ளது. பல்கலைக்கழக கட்டமைப்பு மற்றும் அரச சேவை என்பன நிலைகுலைந்துள்ளன. இவ்வாறான ஸ்திரமற்ற நிலையினை அரசாங்கமே தோற்றுவித்துள்ளது.

அரசாங்க அதிகாரிகள் ஆயிரம் பேரை அழைத்து அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்கமைவாக பணியாற்றுமாறும் அல்லாது போனால் அதிகாரிகள் தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டி வரும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் சிறந்த முறையில் சேவையாற்றிய பல அரச அதிகாரிகளிடம் வாக்கு மூலம் பெறபபட்டுள்ளது. சில அதிகாரிகளை சிறையில் அடைத்துள்ளனர். மேலும் சிலரை பதவி விலக்கியுள்ளனர். ஆகவே நல்லாட்சி என்பது பெயரளவில் மாத்திரம் உள்ளது. ஆனால் நடைபெறுவது அதற்குப் புறம்பான ஆட்சியாகும்.

நல்லாட்சியிலேயே பாரியளவிலான மோசடி இடம் பெற்றுள்ளது. மத்திய வங்கி பிணைமுறியுடன் தொடர்புடையவர்கள் சிக்கிக்கொள்ளும் தற்போதைய சூழலில் மீண்டும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதும் அவரது குடும்பத்தினர் மீதும் கூட்டு எதிர்க்கட்சியினர் மீதும் குற்றசசாட்டுக்களை முன்வைக்க ஆரம்பித்துள்ளனர். மத்திய வங்கி பிணை முறி மோசடியில் ரவி கருணாநாயக்கவினபெயருக்குப்பதிலாகஎனது பெயர் இருந்திருக்குமாயின் அதற்கெதிரான நடவடிக்கைகள் எவ்வாறிருந்திருக்கும் என்று அனைவருக்கும் தெரியும்.

பாராளுமன்ற உறுப் பினர் ரவிகருணாநாயக்கவிற்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பித்த பின்னர் அரசாங்கம் அவரை இராஜினாமா செய்யுமாறு கேட்டுக்கொண்டது. எனினும் அவர் பதவி விலகியதன் பின்னர் அவரை ஒரு வீரராக காண்பிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. அத்துடன் அரசாங்கம் தற்போது அமைச்சர்களான விஜயதாஸ ராஜபக்ஷ மற்றும் பைஸர் முஸ்தபாவையும் இராஜினாமா செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. இவ்வாறு சென்றால் இன்னும் ஆறு மாதங்களில் முழு அமைச்சரவையும் இராஜினாமா செய்ய வேண்டி வரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அடிகாயங்களுடன் மீட்கப்பட்ட நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

இரத்தக் காயங்களுடன் மயங்கிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இளவாலை அகத்தியர் வீதியை சேர்ந்த ராசேந்திரம் பிறேம்குமார் (வயது-55) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த சனிக்கிழமை மாலை வீட்டில் அடிகாயங்களுடன் இரத்த வெள்ளத்தில் இருந்த இவரை அயலவர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்திருந்தனர். இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதோடு சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ-30)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### மகிழ்ச்சி தரும் அனுபவம்



✦ இடைவிடாமல் கடவுளைச் சிந்திப்பதும், மனம் ஒன்றி வழிபாடு செய்வதும் மகிழ்ச்சி தரும் இனிய அனுபவங்கள்.

✦ சொந்தக்காலில் நிற்கும் திறமையை பிள்ளைகளிடம் உரு வாக்க வேண்டியது பெற்றோரின் கடமை.

✦ பயனற்ற வீண் ஆராய்ச்சியைக் கைவிட்டு, கடவுளை பூரணமாக நம்பிச் செயலில் ஈடுபடுங்கள்.

✦ ஞானிக்கு கடவுள் ஒளிமயமாகவும், சாமான்ய மனிதர்களுக்கு அன்பு மயமாகவும் காட்சியளிக்கிறார்.

✦ கடவுள் கேட்டதை எல்லாம் தரத் தயாராக இருக்கிறார். அதற்கான தகுதியை வளர்த்துக் கொள்ளுங்கள்.

## 'நல்லூரான் திவ்விய பாமாலை' நூல் வெளியீட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபையால் தெய்வீக நிகழ்வுகள் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம் பெற்றன.

இதில் பங்குபற்றி சொற்பொழிவுகள் வழங்கியவர்கள, சமய, சமூக சேவைகள் செய்த சாரணர்கள், ஆசிரியர்கள், ஆணையாளர் ஆகியோருக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும்.

அத்துடன் நல்லூரான் திவ்விய பாமாலை நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

வடலியடைப்பு புதறானை ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞானம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.20 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 01.09.2017 வெள்ளக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 03.09. 2017 ஞாயிற்றுக்கிழமை சப்பறத் திருவிழாவும், 04.09.2017 இரதோற்சவமும், 05.09. 2017 தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (இ-82)

## நெடுந்தீவில் பிரம்மாண்ட ஆடம்பர விடுதி

யாழ்.நெடுந்தீவு மாவிலித்துறை பகுதியில் உள்ள இலங்கை கடற்படை முகாமில் ஆடம்பர விடுதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு முன்னதாக குறித்த பகுதியில் முகாம் அமைபபதற்காக கடற்படையினர் வீதியை ஆக்கிரமித்துள்ளதாக மக்கள் குற்றம் சாட்டி வந்த நிலையில், தற்போது ஆடம்பர விடுதி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. (மு)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**வேதைப் பொருத்தம் என்றால் என்ன?**

வேதைப் பொருத்தம் என்பது கணவன்- மனைவியர் நோயின்றி, துன்பமின்றி வாழும் நிலையைக் குறிக்கும்.

அஸ்வினி X கேட்டை- வேதை
பரணி X அனுசம் - வேதை
கிருத்திகை X விசாகம் - வேதை
ரோகிணி X சுவாதி - வேதை
திருவாதிரை X திருவோணம் - வேதை
புனர்பூசம் X உத்தராடம் - வேதை
பூசம் X பூராடம் - வேதை
ஆயிலியம் X மூலம் - வேதை
மகம் X ரேவதி - வேதை
பூரம் X உத்தரட்டாதி - வேதை
உத்தரம் X பூரட்டாதி - வேதை
அத்தம் X சதயம் - வேதை
மிருகசீரிடம் X சித்திரை X அவிட்டம் - வேதை

(தொடரும்)




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

வடமொழியில் பத்மம் என்றால் தாமரை என்று பொருள். எனவே அக்குழந்தைக்கு பத்மாவதி என்னும் பாங்கான பெயரும் வைக்கப்பட்டது.

அலர்மேல் மங்கையை அணைத்துக் கொஞ்சிட அரசனுக்கும் அரசிக்கும் நடுவே அனுதினமும் போட்டி தான். அரச குடும்பத்திற்கு அப்படியொரு ஆனந்தத்தை அளித்திட அலர் மேல் மங்கை என்பவள் உண்மையில் யார்?

கடந்த காலம் பொதிந்து வைத்துக் காவல் க்காக்கும் அந்தக் காரிகையின் கதை இதோ.

திரேதாயுகம். அந்த யுகத்தில் அவதரித்த மங்கை ஒருத்தி. அவள் பெயர் வேதவதி. நற்குணங்கள் நிரம்பப் பெற்ற அவளுக்கு நாராயணன் மேல் அளப்பரிய ஆசை. அந்தக் குணாளனே தனக்கு மணாளனாக வேண்டும் என்று தவம் இயற்றத் தொடங்கினாள்.

(தொடரும்)

## உடலால் பாவிக்கக்கூடிய இரும்புச்சத்து

ஹீம் (Heem) இரும்புச்சத்து மாமிச உணவுகளில் கிடைக்கும். இலகுவில் அகத்துறிஞ்சப்படக்கூடியது.

ஹீம் அல்லாத இரும்புச்சத்து தாவர உணவுகளில் கிடைக்கும். இலகுவில் அகத்துறிஞ்சப்பட முடியாதது.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி.ரி.மகாலிங்கம் பிறிமியர் லீக்-2017 கே.சி.சி.சி. அணியின் 2வது வெற்றி

வி.ரி.மகாலிங்கம் பிறிமியர்லீக் கிரிக்கெட் தொடரில் 15வது போட்டி (19.08.2017) சனிக்கிழமை அன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் கே.சி.சி.சி. அணி, ஸ்கந்தாஸ்ரார் அணியை 2 இலக் குகளால் வெற்றி பெற்று தனது 2வது வெற்றியை பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார் அணி 19.5 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்து 95 ஓட்டங்களை பெற்றது.

புருசோத்மன்-15, சோபிகன்-35 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் கே.சி.சி.சி. அணியை சார்ந்த ஜெயரூபன்-02, விஜிதரன்-03, சாம்பவன்-02, பிரதீசன்-02 இலக்குகளை கைப்பற்றினர்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கே.சி.சி.சி அணி 19.1 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 96 ஓட்டங்களை பெற்றது. ஜெயரூபன்-19,ஜனுதாஸ்-15, பிரதீசன்-15ஓட்டங்களை பெற்றனர். களத்தப்பில் ஸ்கந்தாஸ்ரார் அணியை சார்ந்த சோபிகன்-02,துபிபைன்-04, டான்சன்-02 இலக்குகளை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் (RATING) கே.சி.சி.சி. அணி 4.16 புள்ளிகளையும், ஸ்கந்தாஸ்ரார் அணி 1.75 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

# கிளிநொச்சி உருத்திரபுரம் வி.க உதைபந்தாட்ட போட்டி முடிபுகள்

கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 07 பேர் கொண்ட USC MEMORIAL CUP 2017" மின்னொளியிலான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் முடிவுகள் (18.08.2017) அன்று நடைபெற்ற போட்டியில் உதயதாரகை அணியினை எதிர்த்து கனகபுரம் அணி போட்டியிட்டது. இதில் உதயதாரகை அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியினை எதிர்த்து சாந்தபுரம் கலைமகள் அணி மோதியது. இதில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி 8:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் பரந்தன் மத்தி அணியினை எதிர்த்து சுடரொளி அணி மோதியது. இதில் பரந்தன் மத்தி அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(19.08.2017) அன்று நடைபெற்ற போட்டியில் திருநகர் அணியினை எதிர்த்து திருவையாறு மத்தி அணி போட்டியிட்டது. இதில் திருநகர் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் உருத்திரபுரம் அணியினை எதிர்த்து சாந்தபுரம் கலைமகள் அணி மோதியது. இதில் உருத்திரபுரம் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி வாய்ப்பினை உறுத்திப்படுத்தியது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் உதயதாரகை அணியினை எதிர்த்து பரந்தன் மத்தி அணி மோதியது. இதில் உதயதாரகை அணி 9:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி வாய்ப்பினை உறுதிப்படுத்தியது.

20.08.2017 அன்று நடைபெற்ற போட்டியில் உழவர் ஒன்றியம் அணியினை எதிர்த்து குறிஞ்சி அணி போட்டியிட்டது. இதில் உழவர் ஒன்றிய அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் உதயதாரகை அணியினை எதிர்த்து சுடரொளி அணி மோதியது. இப் போட்டி 5:5 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணியினை எதிர்த்து ஜெயந்திநகர் அணி மோதியது. இதில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி 1:0 என்ற கோல்கணக்கில்வெற்றிபெற்றது. (க)

# விக்னேஸ்வரா வி.கழக உதைபந்தாட்ட முடிவுகள்

புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் நடத்தும் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட போட்டி முடிவுகள் (20.08.2017) அன்று நடைபெற்றது.

முதலாவது போட்டியில் இரணைமாதா நகர் சென்மேரிஸ் வி.கழகத்தை எதிர்த்து உடுத்துறை செந்தமிழ் வி.க. போட்டியிட்டது. இதில் செந்தமிழ் வி.க 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் இரணைப்பாலை சென். அன்ரனிஸ் வி.கழகத்தை எதிர்த்து உருத்திரபுரம் வி.க.அணி போட்டியிட்டது. இதில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாமல் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

மாலை நடைபெற்ற முதலாவது போட்டியில் சுப்பர் ராங் வி.கழகத்தை எதிர்த்து அலையோசை வி.க போட்டியிட்டது. இதில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாமல் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது போட்டியில் வவுனியா மருதநிலா வி.கழகத்தை எதிர்த்து உருத்திரபுரம் வி.க. அணி போட்டியிட்டது. இதில் உருத்திரபுரம் வி.க. 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

21.08.2017 அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் சென்மேரிஸ் வி.கழகத்தை எதிரத்து அலையோசை வி.க. போட்டியிட்டது. இதில் 2:1 என்ற கோல்கண[illegible]கில் அலையோசை வி.க வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் வவுனியா மருதநிலா வி.கழகத்தை எதிர்த்து சென்யூட் வி.க அணி போட்டியிட்டது. இதில்சென்யூட் வி.க 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. (க)

# வின்ஸ் வி.கழகத்தை வீழ்த்தி ரைட் ரோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாண மாவட்டத் துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் மகாலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான இருபது-20 தொடரில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரைட் ரோன்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.

யாழ்ப்பாண மத்திய கல்லூரி மைதானத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ரைட் ரோன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ரைட் ரோன்ஸ் 8 இலக்குகளை இழந்து 154 ஓட்டங்களைக் குவித்தது. அதிக பட்சமாக திலக்சன் 26 ஓட்டங்களையும், டினோசன் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வின்சன், யதுசன், ஜெபர்சன் ஆகியோர் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர்.

155 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய வின்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 100 ஓட் டங்களை மட்டுமே பெற்று 54 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் உதயசாந், நந்தகுமார், திலக்சன் ஆகியோர் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர். (க)

# வலைப்பந்தாட்டத்துக்கு விண்ணப்பிக்குக

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 65வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அமரர் இரத்தினசேகரம் அசன் ஞாபகார்த்தமாக யாழ்.மாவட்ட ரீதியிலான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

போட்டியானது எதிர்வரும் 26.08.2017 (சனிக்கிழமை) அன்று திருமகள் விளையாட்டு மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக் கழகங்கள் 077 617 6988, 077 617 9030 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும். (க)

# வடக்கு,கிழக்கு ரீதியிலான பூப்பந்தாட்டத் தொடர்கள்

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சும் வடக்கு மாகாண பூப்பந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் வடக்கு, கிழக்கு மாகாண ரீதியிலான பூப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் உள்ளக விளையாட்டரங்கில் எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி 14 வயதுக்கு உட்பட்ட இருபாலாருக்குமான ஆட்டங்களும் 20 வயதுக்கு உட்பட்ட இருபாலாருக்குமான ஆட்டங்களும் இடம்பெறவுள்ளன.

26ஆம் திகதி 16 வயதுக்கு உட்பட்ட இருபாலாருக்குமான ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

27ஆம் திகதி பெண்களுக்கான திறந்த ஆட்டங்களும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆட்டங்களும் நடைபெறவுள்ளன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண தேர்தல் திருத்தச் சட்டமூலம் அரசியல் அமைப்புக்கு முரண் அல்ல

## -உயர்நீதிமன்றம்

(கொழும்பு)

மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்ட மூலம் அரசியல் அமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்ட மூலம் தொடர்பாக உயர் நீதி மன்றத்தின் தீர மானத்தை சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

இந்த சட்டமூலம் தொடர்பாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு தொடர்பில் மேலும் நீதிமன்ற நடவடிக்கையொன்று அவசியம் இல்லை என மனுதாரர் குறிப்பிட்டதாகவும் உச்ச நீதிமன்றம் அறிவித்துள்ளது என்றும் சபாநாயகர் தெரிவித்தார். (மு)

## விஜயதாச ராஜ...

தேசிய கட்சியின் செயற்குழு கூட்ட த்தில் அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மேலெழுந்திருந்தன.

அவரது குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் அவகாசம் நேற்று வரை வழங்கப்பட்ட போதிலும் அவர் பதிலளிக்கத் தவறியிருந்தார்.

இவ்விடயங்களை கருத்திற்கொண்டே விஜயதாச ராஜபக்ஷ, தன்னுடைய பதவியிலிருந்து விலக வேண்டும் அல்லது விலக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்தது.

அதனைத் தொடர்ந்து அத்தீர்மானத்தினை ஜனாதிபதிக்கு பிரதமர் அறிவித்துள்ளார். எப்படியிருந்த போதிலும் அமைச்சுப் பதவியை நீக்குவது தொடர்பிலான இறுதி முடிவை ஜனாதிபதியே மேற்கொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (மு)

## வடக்கு மாகாண...

குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்கள் நீக்கப்பட்டு புதிய அமைச்சர்கள் நியமிக்கும் பொறுப்பில் முதலமைச்சருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பங்காளி கட்சிகளுக்கும் இடையில் பல்வேறு கலந்துரையாடல்கள் மற்றும் ஒரு சில கட்சிகளுடன் குழப்பங்களும் வடக்கில் தொடர்ச்சியாக நடைபெற்று வந்தது.

அதன் தொடர்ச்சியாக கல்வி மற்றும் விவசாய அமைச்சர்கள் இருவரும் தமது பதவியை இராஜினாமா செய்திருந்தனர். ஏனைய சுகாதாரம் மற்றும் போக்குவரத்து அமைச்சர்கள் தமது பதவியை இராஜினாமா செய்யாது இருந்தனர். அதன் காரணமாக வட மாகாண சபையில் பாரிய இழுபறி, குழப்பங்கள் நிலவிவந்தன.

இந்த நிலையில் வடமாகாண கல்வி அமைச்சின் புதிய அமைச்சராக க.சர்வேஸ்வரனும் வடமாகாண சிறுவர் மற்றும் மகளிர் விவகார சமூக சேவைகள் அமைச்சின் புதிய அமைச்சராக திருமதி அனந்தி சசிதரனும் பொறுப்பேற்றிருந்தனர்.

பல குழப்ப சூழ்நிலைக்கு பின்னர் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் அண்மையில் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார். ஆனால் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது பதவியை இராஜினாமா செய்ய முடியாது என பிடிவாதமாக இருந்த காரணத்தினால் அவருடைய கட்சி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக அறிவித்து கட்சியில் இருந்து 6 [illegible]காலம் நீக்கியிருந்தது. அதனை தொடர்ந்து வடக்கு அமைச்சரவையில் இருந்து டெனீஸ்வரனை முதலமைச்சர் நீக்கியிருந்தார்.

இதனை தொடர்ந்தே இன்றைய தினம் புதிய அமைச்சர்கள் வடக்கு மாகாண ஆளுநர் முன்னிலையில் பதவி ஏற்கவுள்ளனர். வடமாகாண சுகாதார அமைச்சின் புதிய அமைச்சராக மன்னார் மாவட்டத்தை சேர்ந்த வைத்தியர் குணசீலனும், வடமாகாண விவசாய அமைச்சின் புதிய அமைச்சராக முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த க.சிவனேசனும் முதலமைச்சரால் தெரிவு செய்யப்பட்டதையடுத்து இன்றைய தினம் அமைச்சர்களாக பதவியேற்கவுள்ளனர்.

அதே நேரம் போக்குவரத்து அமைச்சை முதலமைச்சர் தனது பொறுப்பின் கீழ் வைத்துள்ளமையால் போக்குவரத்து அமைச்சராக முதலமைச்சர் பதவி ஏற்கவுள்ளார். அத்துடன் மேலும் ஒரு புதிய அமைச்சு பதவியை பொறுப்பேற்று அமைச்சர் அனந்தி சசிதரனும மீண்டும் பதவியேற்கவுள்ளார்.

இந்த புதிய அமைச்சரவை பதவி ஏற்கும் நிகழ்வு இன்றைய தினம் மாலை 2 மணிக்கு வடமாகாண ஆளுநர் ரெயினோல்ட் கூரே முன்னிலையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (மு-9)

## டெனீஸ்வரன்...

வரனை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கிவிட்டேன் என வடமாகாண முதலமை ச்சர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழீழ விடு தலை இயக்கத்தின் (ரெலோ) செயலாளர் நாயகம் ந. ஸ்ரீகாந்தாவுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

நேற்று அனுப்பிய கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது, ரெலோ விடுத்த கோரிக்கைக் கேற்ப விந்தன் கனகரத்தினத்தை அமைச்சரவையில் உள்ளடக்க முடியாது எனவும் அவரை தனது அமைச்சுடன் இணைந்து செயற்படுமாறும் விக்னேஸ்வரன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (மு)

## இரா.சம்பந்தன்...

வளாகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜனாதிபதிக்கும் இடையே நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற சந்திப்பிலேயே நேற்றைய சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் நேற்றைய கூட்டத்திற்கு எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தன் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு கலந்து கொள்ளவில்லை என தெரிவிக்கப்பட்டது.(மு-1)

## தாம் தொடர்ந்து...

கொழும்பில் ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற முக்கிய சந்திப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் உள்ள கட்சிகள், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து செயற்படும் கட்சிகள், பாராளுமன்ற பிரதிநித்துவத்தை பெற்றிருக்காத சில கட்சிகள், தமிழரசுக் கட்சி மற்றும் ஏனைய கட்சிகள் என்பன கலந்து கொண்டிருந்தன.

அனைத்துக் கட்சிக் கூட்டமாக 20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கட்சிகளின் கருத்துக்களைப் பெறும் முகமாக இக் கூட்டம் நடைபெற்றிருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்ற ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எப் ஆகியன பதிவு செய்யப்பட்ட கட்சிகளாக இருப்பினும் அவற்றுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கெனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பாக சந்திப்புக்களை செய்யும் போது பங்காளிக் கட்சித் தலைவர்களையும் அழைக்க வேண்டும் என கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் கூட்டமைப்பின் தலைவர் கூட பங்காளிக் கட்சிகளை அழைக்காது அவரும் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் கலந்து கொண்டுள்ளனர்.

எனவே, எதிர்காலங்களில் நடைபெறும் அனைத்துக் கட்சி கூட்டங்களிலும் தம்மையும் உள்வாங்க வேண்டும் என ஈபிஆர் எல்எப், ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் ஜனாதிபதியிடம் எழுத்து மூலமாக கோரிக்கை ஒன்றினை முன்வைக்கவுள்ளதாகவும் தெரியவருகிறது. (மு-250)

# பல்கலை மாணவர் கொலை வழக்கு 5 பொலிஸாரின் விளக்கமறியல் செப்.4 வரை நீடிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் இருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள ஐந்து பொலிஸாரின் விளக்கமறியல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றைய தினம் யாழ்.நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி காயத்திரி சைலயன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மேற்கண்டவாறு நீதவானால் உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்.கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கு அண்மையில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி இரவு யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருட கலைப்பீட மாணவர்களான விஜயகுமார் சுலக்சன், நடராஜா கஜன் ஆகியோர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியாகியிருந்தனர்.

இந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (மு-9)

# தமிழை வாசிக்க தமிழர்களுக்கு கண்ணாடி கொடுக்க முடியாது

## சபையில் அமைச்சர் மனோ கணேசன் ஆணித்தரம்

(கொழும்பு)

நாடு முழுக்க இருக்கக் கூடிய எல்லா பெயர்ப் பலகைகளும் மூன்று மொழிகளிலும் தெளிவாக,எழுத்து பிழையில்லாமல் இருக்க வேண்டும். சிங்களத்திலே பெரிதாக எழுதிவிட்டு, தமிழிலே சிறிதாக எழுத முடியாது. அப்படி எழுதப்படுமானால் தமிழர்களுக்கு மாத்திரம் நான் கண்ணாடி கொடுக்க வேண்டி வரும். அப்படி வழங்க முடியாது. அதற்கான சந்தர்ப்பம் கிடையாது.

நாடு முழுக்க சிங்களமும், தமிழும் சமமான ஆட்சி மொழிகள். ஆகவே அரசாங்க பெயர் பலகைகள் எழுதும் போது, வடக்கு, கிழக்கில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்ற வரிசை பேணப்பட வேண்டும். ஏனைய மாகாணங்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற வரிசை பேணப்பட வேண்டும் என நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போது தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் கூறினார்.

தனது உரையில் அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

அரசாங்க திட்டங்களுக்கு, சிங்கள மொழியில் பெயர்களை வைத்து விட்டு, அது புரிந்தாலும் புரியாவிட்டாலும் கூட அப்படியே தமிழ் மொழியில் உச்சரிக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. அது சட்ட விரோதமானது, பிழையானது.

இன்று (நேற்று) காலை பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் சரத் பொன்சேகாவின் ஒரு திட்டதை அமைச்சரவை அங்கீகரித்து இருந்தது. அந்த திட்டத்தின் பெயர் "சியவெர" என்பதாகும். இதற்கு நான் "சுயசக்தி" என்ற தமிழ் பெயரை இங்கே சூட்டுகிறேன். இதோ இப்போது சபையில் இருக்கும் அமைச்சர் பொன்சேகாவுக்கு காலையிலேயே இதை நான் அறிவித்து விட்டேன். இனிமேல் இது தொடர்பில் என் அமைச்சின் மொழியுரிமை பிரிவு கவனம் செலுத்தும்.

அடுத்து, 882 அரசாங்க படிவங்களை அடையாளம் கண்டு அவற்றை தமிழிலும் மொழிபெயர்த்து மும்மொழி படிவங்களாக மாற்றும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக மொழிபெயர்ப்பாளர் குழாம் ஒன்றை என் அமைச்சில் அமைத்துள்ளேன். இது இன்னமும் விஸ்தரிக்கப்படும். தம் தாய் மொழியில் இந்நாட்டு குடி மக்கள் அரச அலுவலகங்களில் எழுத்து மூலமான, வாய்மொழி மூலமான பதில்களை பெறும் உரிமையை இன்றுள்ள அரசியலமைப்பில் பெற்றுள்ளனர். இந்த உரிமையை நடைமுறைப்படுத்த, தமிழ், சிங்கள மொழிகளை படித்தவர்களை உள்வாங்கி மொழியறிவு, மொழி பெயர்க்கும் திறன், கணணி அறிவு ஆகியவற்றில் பயிற்சி அளித்து, மொழி அதிகாரிகள் என்ற பெயரில் அரச அலுவலகங்களில் நியமிக்க முடிவு செய்துள்ளேன். இந்நோக்கில் சுமார் 3,000 மொழி அதிகாரிகள் தேவைப்படுவதாக எனது அமைச்சு நடத்திய கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது. இதற்கு பெருந்தொகை நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. அதை பெறுவது தொடர்பில் நான் இப்போது, நிதி அமைச்சருடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளேன். என் திட்டங்களை படிப்படியாக அமுல் செய்ய எனக்கு கால அவகாசம் தாருங்கள். என்னை நம்புங்கள். நான் இவற்றை செய்து முடிப்பேன் என்றார் மனோ கணேசன். (மு)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை இனியும் தாமதப்படுத்த முடியாது

## -ரணில் விக்கிரமசிங்க

உள்ளூராட்சி சபைத் தேர்தலை இனியும் தாமதப்படுத்த முடியாது எனவும், புதிய முறையில் அதை விரைவில் நடத்தவேண்டியுள்ளது எனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் குறித்து எதிரணி உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பில் தேர்தல் ஆணைக் குழுவால் 55 இற்கும் மேற்பட்ட திருத்தங்கள் முன்வைக்கப்பட்டன. மேலும் பல திருத்தங்களும் இருக்கின்றன.

அவை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டதும் குழுநிலை விவாதத்தின் போது நாடாளுமன்ற நிலையியல் கட்டளைக்கேற்ப திருத்தங்களைச் செய்துகொள்ளலாம்.

நீண்ட பேச்சுகளுக்கு மத்தியில் புதிய முறைமைக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன. எனவே, அந்த முறைமைக்கு ஒத்துப்போன திருத்தங்கள் மாத்திரமே உள்வாங்கப்படும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இனியும் அதை ஒத்திவைக்க முடியாது.

ஆகவே, சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். புதிய முறையில் வாக்களிப்பதற்கு இதன்மூலம் மக்களுக்கு பழக்கம் ஏற்படும். அது அடுத்துவரும் தேர்தல்களுக்குப் பயனுடையதாக இருக்கும்.

குறைகள் இருக்கும் பட்சத்தில் அவற்றை சீர்திருத்திக்கொள்ளலாம். புதிய அரசமைப்புக்கு முன்னர் அவற்றை சரிசெய்து கொள்ளலாம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (மு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தேக நபர்கள்...

வரும் 25 ஆம் திகதி அடையாள அணி வகுப்புக்கு உட்படுத்த கட்டளையிடப்பட்டுள்ளதுடன் அன்றைய தினம் வரை அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி காயத்திரி சைலயன் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 30 ஆம் திகதி 10 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் குழுவினரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை விசாரணைகளின் அடிப்படையில் பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்து செய்து நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பிரதான சந்தேக நபர்களான 7 பேர் நேற்றைய தினம் விசாரணைக்காக மீண்டும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் நீதிமன்றில் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டது. (மு-9)

## சிகையலங்கரிப்பு...

நேற்று மாலை 6 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

உரும்பிராய் சந்தி பகுதியில் காணப்படும் சிகை அலங்கரிப்பு நிலையத்துக்கு முடி திருந்துவதற்காக இனந்தெரியாத நபர்கள் இருவர் சென்றுள்ளனர்.

அப்போது குறித்த சிகை அலங்கரிப்பு நிலையம் புனரமைப்பு பணிகள் இடம்பெறுவதனால் இப்பொழுது முடி திருத்த முடியாது என்று கடை ஊழியரால் அந்நபர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மதுபோதையில் காணப்பட்ட அவர்கள் கோபமடைந்து தகாத வார்த்தை பிரயோகம் மேற்கொண்டவாறு அவ்விடத்தில் நின்றுள்ளனர்.

இதனை அடுத்து கடை உரிமையாளர் அவர்களை சமரசம் செய்து அங்கிருந்து அனுப்பும் முயற்சியை மேற்கொண்டுள்ளார்.

இதனால் அங்கிருந்து சென்ற அவர்கள் இருவரும் சிறிது நேரத்தில் மேலும் ஒருவரை அழைத்துக்கொண்டு மூவராக வந்து கடையில் பணிபுரியும் ஊழியர் மீதும் கடை உரிமையாளர் மீதும் சராமரியாக வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

வாள்வெட்டுத் தாக்குதலின் போது கடை உரிமையாளர் தப்பித்த போதும் கடையில் பணி புரிந்த ஊழியர் வாள்வெட்டினால் படுகாயமடைந்து கீழே விழுந்துள்ளார். பின்னர் அவர்கள் கடையையும் அடித்து நொருக்கி விட்டு.அங்கிருந்து மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளனர்.

படுகாயமடைந்த கடையில் பணிபுரிந்த ஊழியர் உடனடியாக அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் திடீர் வாள்வெட்டு சம்பவத்தால் உரும்பிராய் சந்திப் பகுதி பரபரப்பு ஏற்பட்டதுடன் சில வர்த்தக நிலையங்களும் அச்சம் காரணமாக உடனடியாக மூடப்பட்டுள்ளன.

அச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேலும் குறித்த பகுதியில் விசேட அதிரடிப் படை களமிறக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டும் உள்ளது. (மு-87)

## டி.ஐ.ஜியின் விள...

ர்பாக ஏற்கெனவே சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உள்ளடங்கலாக நால்வரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலமானது நேற்றைய தினம் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மேற்குறித்த வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்படும் வரை இவ் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 04ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது.

புங்குடுதீவு பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியா கூட்டு பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக பிரதான சந்தேக நபரான சுவிஸ்குமார் பொலிஸாரது கட்டுப்பாட்டிலிருந்து தப்பிச் சென்றிருந்தார்.

இதன்பின்னர் அவர் கொழும்பில் விடுதியொன்றில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். இச் சம்பவம் தொடர்பாக தனியானதொரு வழக்கானது ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு அது தொடர்பாக சம்பவ காலப்பகுதியில் வடமாகாணத்திற்கு பொறுப்பாகவிருந்த சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித்ஜயசிங்க கைது செய்யப்பட்டிருந்தார்.

இதனை விட சுவிஸ்குமார் தப்பிச் சென்றமை விவகாரத்தில் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜனை தலைமறைவாகியுள்ள நிலையில் அவரை கைது செய்யவும் மன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் நேற்றைய தினம் குறித்த வழக்கானது ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம்.எம்.றியால் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது குற்றப் புலனாய்வு பிரிவு சார்பாக அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் முன்னிலையாகியிருந்தார்.

சந்தேகநபரான லலித்ஜயசிங்க சார்பில் வைரமுத்து சுபாஸ்கரன், மேஜர் சம்பத் விதாரன, துசித் ஜோன்தாசன் ஆகியோருடன் சமிந்த அத்துகொரள முன்னிலையாகிருந்தார். அத்துடன் குற்றப்புலனாய்வு கூட்டு கொள்ளை விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி.நிஷாந்த சில்வாவும் மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

நேற்றைய தினம் வழக்கின் ஆரம்பத்தில் அரச சட்டவாதி இவ் வழக்கு தொடர்பாக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக நால்வரிடம் பெற்றுக்கொண்ட வாக்குமூலத்தை மன்றில் சமர்ப்பித்திருந்தார்.

இதனை தொடர்ந்து சந்தேகநபர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகள் குறித்த பிரதி பொலிஸ்மா அதிபர், சம்பவ காலத்தின் போது சுவிஸ்குமார் என்பவர் இவ் வழக்கில் தொடர்புபட்டிருப்பதாகவும் அவர் நாட்டை விட்டு தப்பிச் செல்லாத வகையில் அவரது கடவுச்சீட்டு இலக்கத்தை முடக்குவதற்கு குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு அறிவுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருந்தார்.

இவ்வாறன நிலையில் சுவிஸ்குமாரை கைது செய்யவே இவர் நடவடிக்கை எடுத்திருந்தார் என வாதிட்டதுடன் இவர் இவ் வழக்குடன் தொடர்புபட்டுள்ளார் என கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதற்கு ஆட்சேபனை தெரிவித்து அவரை பிணையில் விட கோரியிருந்தார்கள்.

இதனை தொடர்ந்து அரச சட்டவாதியான நாகரட்ணம் நிஷாந்த், இவ் வழக்கு தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையிலும் இன்னமும் இவ் வழக்கு தொடர்பாக ஆறு பேரிடம் வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதனாலும் அவற்றிற்கு இடையூறு ஏற்படும் என்பதனால் பிரதி பொலிஸ்மா அதிபருக்கு பிணை வழங்குவதற்கு ஆட்சேபனை தெரிவித்திருந்தார்.

இதன்போது சந்தேகநபர் சார்பு சட்டத்தரணிகள் இவ் வழக்கு தொடர்பான விசாரணைகள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்துவிட்ட நிலையில் தற்போது இது தொடர்பாக விசாரணைகள் இடம்பெறுகின்றது, வாக்குமூலங்கள் பதிய வேண்டியுள்ளது என காரணம் கூறுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற விதத்திலும், விசாரணைகள் முடிவடையவில்லை, என்பதற்காக பிணை வழங்காது விட முடியாது எனவும் வாதிட்டனர்.

இவ் வழக்கு தொடர்பாக சிறிகஜன் என்பவர் நாட்டை விட்டு தப்பிச் செல்ல முற்பட்ட வேளை அவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து திருப்பியனுப்பியதாக கூறப்படும் நிலையில் அவர் அங்கு வந்து சென்றமை தொடர்பான வீடியோ காட்சிகளை மன்று பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் மன்றில் தெரிவித்தனர்.

இதற்கு தாம் கடந்த வழக்கு தவணையின் போது கூறியவாறு சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களது வாக்குமூலங்களை பெற்று மன்றுக்கு சமர்பித்துள்ளதாகவும், பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ள முயன்ற போதும் அவர் அதற்கான நேரத்தை ஒதுக்கித் தராமையினால் அவரிடம் வாக்குமூலத்தை பெற்றுக்கொள்ளவில்லை எனவும் அரச சட்டவாதி மன்றில் தெரிவித்தார்.

அத்துடன் இவ் வழக்கு தொடர்பாக மாவை சேனாதிராசா உட்பட இன்னமும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு சிவில் நபர் ஆகியோரிடம் வாக்கு மூலம் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இருதரப்பு வாதங்களையும் கவனத்திலெடுத்த மன்றானது குறித்த வழக்கு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா உள்ளடங்கலாக ஆறு பேரிடமும் வாக்குமூலங்களை எதிர்வரும் வழக்கு தவணைக்கு மன்றில் சமர்பிக்க வேண்டும் எனவும், அவற்றை பரிசீலித்து மன்றானது நடவடிக்கைகள் எடுக்குமெனவும், சிறிகஜன் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு சென்றமை தொடர்பாக கண்காணிப்பு கமரா வீடியோ பதிவினை பெற்று மன்றுக்கு சமர்பிக்குமாறும் மன்றானது கட்டளை பிறப்பித்திருந்தது.

அத்துடன் தற்போது கைது செய்யப்பட்டுள்ள சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜசிங்கவை எதிர்வரும் மாதம் 04ஆம திகதிவரை விளக்கமறியலில் வைக்கவும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதவான் ஏ.எம்.எம்.றியால் உத்தரவிட்டிருந்தார்.

இதேவேளை கடந்த வழக்கு தவணையின் போது குறித்த வழக்கினை விசாரணை செய்வதற்கு இந் நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் உண்டா என்பது தொடர்பாக ஆராய மன்று உத்தரவிட்டிருந்த நிலையில் நேற்று மன்றில் இரண்டு தரப்பு சட்டத்தரணிகளும் இந் நீதிமன்றுக்கு நியாயாதிக்கம் உண்டென ஏற்றுக்கொண்டிருந்தனர். இதனையடுத்து வழக்கு நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். (மு-4)

## வவு.வில் பாலக...

துன்புறுத்திய நிலையில் சிறுவன் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சியாக குறித்த சிறுவனை அடித்து துன்புறுத்தி வந்த நிலையில் நேற்று மாலையே குறித்த சிறுவன் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளான். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள வாடகை வீடு ஒன்றில் குடும்பம் ஒன்று தங்கியிருந்தது. இவ் வீட்டில் வசிக்கும் பெண்ணின் கணவன் வேறு திருமணம் செய்த நிலையில் தற்போது அப்பெண் வேறு ஒருவரை திருமணம் செய்து வாழ்ந்து வருகின்றார். முன்னைய திருமணத்தின் மூலம் குறித்த பெண்ணுக்கு 4 வயது சிறுவன் ஒருவன் உள்ளான். குறித்த சிறுவனை தற்போது திருமணம் செய்த இளைஞன் (சிறிய தந்தை) அடித்து துன்புறுத்தி வந்துள்ளார்.

அச் சிறுவனை பார்க்கும் போது முன்னைய கணவரின் ஞாபகமே வருவதாக கூறி சிறுவனை அடித்து துன்புறுத்துவதாக தெரியவருகிறது. இதனால் சிறுவனின் கன்னம், முதுகு, கண் ஆகிய பகுதிகளில் கடும் காயங்கள் ஏற்பட்டுள்ளது. அப்பகுதியில் வேலைக்குச் சென்ற ஒருவர் இதனை அவதானித்து குறித்த சிறுவனை மீட்டு தனது நண்பர்களின் உதவியுடன் வவுனியா பொலிஸில் ஒப்படைத்துள்ளார்.

இதனையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த வவுனியா பொலிஸார் சிறுவனை வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். சிறுவனை தாக்கிய சிறிய தந்தையாரை பொலிஸார் கைது செய்ய நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (மு-250)

## தெல்...

துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 12 தினங்கள் மகோற்சவம் இடம் பெறும். (மு)


**உடன் தேவை**

சிறுவர் பாடசாலையொன்றிற்கு பிள்ளைகளை பராமரிப்பதற்கும் வகுப்பறையை சுத்தம் செய்வதற்கும் பெண் பிள்ளை ஒன்று தேவை. விருப்பம் உள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

154, Brown Road, Jaffna. T.P: 077 244 4172 / 021 222 6242 (C-9401)

**ANANDA HOMES AND CONSTRUCTIONS யாழ்ப்பாணம்**

உங்கள் இல்லத்தை தரமாக அமைத்துத்தர

01. சாதாரண வீடு - 19 இலட்சத்திலிருந்து தொடங்குவதற்கு 5 இலட்சம் (3 அறை, கோல், சமையலறை உட்பட)
02. மாடி வீடு - 35 இலட்சத்திலிருந்து தொடங்குவதற்கு 10 இலட்சம் (4 அறை, கோல், சமையலறை உட்பட)
03. நவீன இணைந்த குளியலறை - 11/2 இலட்சத்திலிருந்து
04. பழைய வீடு புனரமைப்புச் செய்தல்.
05. கடை, கட்டடத் தொகுதி அமைத்தல்.
06. சுற்று மதில் அமைத்தல்.





குறிப்பு: வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்.

அழையுங்கள் : ஆனந்தன்

தொ.பே : 078 615 5929, 021 320 5939 (9167)

**CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401. மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress (சி-9393)

**V2 TRAVELS**



வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION FOR FOREIGN PASSPORT (வீசா எக்ஸ்ரென்சன்)

0768227499 (C-9383)

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

**விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்**

• அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
• மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
• விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
• எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9382)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] லுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org